BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு ஓர் அறிமுகம்

அப்போஸ்தலர் பவுலின் ஊழியம்

GOOD NEWS PUBLISHERS

பவுலும் பர்னபாவும் சீலாவும்

அப்போஸ்தலர் 15:36 முதல் 21:16 வரை உள்ள வேதவசனப் பகுதியில் பவுலின் ஊழியம் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

எருசலேம் அவைக்கூட்டத்திற்கு பிறகு பவுலும் பர்னபாவும், அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்து போதிப்பதிலும் பிரசங்கிப்பதிலும் கொஞ்சக் காலத்தைக் கழித்தனர் (அப்போஸ்தலர் 15:35). ஒரு வேளை விருத்தசேதனம் பற்றி எழுந்த கேள்வி திருச்சபைக்குள் அறிவுப்பூர்வமான குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும். கவனமான போதனையின் மூலம்தான் இது தீர்த்து வைக்கப்படவேண்டும். இதனால் மிஷினெரி ஆர்வம் மறந்துவிடவில்லை. விரைவிலேயே புதிய பணி ஒன்று தொடங்கியது.

அப்போஸ்தலர் 15:26ஐ 13:1,2, உடன் ஒத்து நோக்கும் போது, சீப்புரு தீவுக்கு செல்லவேண்டுமென திருச்சபையினர் அனைவரும் கருத்துத் தெரிவித்தபோதும் இந்தப் புதிய பணி பவுலின் கருத்தே என்பதைக் காட்டுகிறது. முந்தின பயணத்தில் பாதியில் பவுல் ஏற்றுக்கொண்ட மிஷினெரிப்பணி (13:13) இப்போது நிலையாக நியமிக்கப்பட்டாயிற்று. மேலும் பவுலின் கருத்து அவருடைய மிஷினெரிக் கொள்கையின் முக்கியமானதொரு அம்சத்தை வெளிப்படுத்துகிறது.

"நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக் கிறார்களென்று போய்ப்பார்ப்போம் வாரும்".

சுவிசேஷ ஊழியத்தைத் தொடர்ந்து மனந்திரும்பியவர்களை போதனைகள் மூலம் உறுதிப்படுத்துதலும், ஒரு அமைப்பாக உருவாக்குதலும் வரவேண்டும்.

துரதிருஷ்ட வசமாக பர்னபாவுக்கும் பவுலுக்குமிடையே கருத்து வேறுபாடு தோன்றி, கொஞ்சக்காலம் அவர்கள் தோழமையைப் பிரித்தது. பர்னபா, தனது உறவினனான யோவான் மாற்கைத் தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டுமென்று விரும்பினார். ஆனால் முந்திய பயணத்தின்போது யோவான் மாற்குடைய சேவை அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை. அந்த இளம் பணியாளருக்கு ஒரு இரண்டாவது வாய்ப்பு அளித்துப் பார்க்கலாம் என்று அவர் விரும்பியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. பவுல் தாங்கள் செய்யப்போகும் ஊழியத்தின் ஆழ்ந்த தன்மையை உணர்ந்தவராக, மாற்கை அழைத்துப்போவது நன்மையை உண்டாக்காது என எண்ணினார். எனவே மாற்கை தமது உடனூழியனாக ஏற்றுக்கொள்ளப் பவுல் மறுத்துவிட்டார். இருவருமே ஒவ்வொரு வகையில் சரியான எண்ணமுடையவர் களாகத்தானிருந்தனர். ஒரே ஒரு தவறுக்காகத் தூக்கியெறிந்துவிடக் கூடாத அளவுக்கு மாற்கு விலைமதிப்புள்ள ஒரு மனிதர். அதே சமயம் ஒரு கவனமற்ற, நம்பமுடியாத ஊழியரைக்கொண்டு வளர்ந்துவரும் இளம் திருச்சபைகளை குழப்பிவிடக்கூடாது. அவர்கள் இறுதியில் எடுத்த தீர்வுதான் அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எடுக்கப்படக்கூடிய மிகச் சிறந்த தீர்வு. பர்னபா மாற்கைத் தம்முடன் அழைத்துக்கொண்டு தமது சொந்த இடமான சீப்புருவுக்குச் சென்றார். அங்கு மாற்குவில் காணப்படும் குறைகள் ஏதும் பெரும் பாதிப்பு ஒன்றையும் ஏற்படுத்திவிடாது. முன்னணி நாடான ஆசியாவைப் போல் இங்கு மாற்குவிற்கு பணியின் பளு அதிகமிராது. எருசலேம் அவையிலிருந்து அந்தியோகியாவுக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரான சீலாவைப் பவுல் தெரிந்துகொண்டு சீரியா, சிலிசியா ஆகியவற்றின் வழியே வடக்கு முகமாக ஆசியா மைனரின் எல்லைகளை நோக்கிச் சென்றார்.

பவுலும் பர்னபாவும் சீலாவும்

இந்த இடத்தில் அப்போஸ்தலர் நடபடிகளின் வரலாற்றுச் சுருக்கத்திலிருந்து பர்னபா மறைந்து விடுகிறார். பவுல் அவரோடு கொண்டுள்ள ஐக்கியத்தை முற்றுமாய் முறித்து விடவில்லை. ஏனெனில் பின்னர், அவர் இன்னும் கர்த்தருடைய பணியில் ஈடுபட்டிருப்பதாகவும், 1 கொரிந்தியரை எழுதும்போது இன்னும் அவர், பவுலுக்கு நெருக்கமான அறிமுகம் உடையவர்களில் ஒருவராகவே இருந்தார். நல்ல மனிதர்கள் கூட சில முக்கியமான விஷயங்களில் கூட எவ்வாறு கருத்துவேறுபாடு அடையலாம் என்பதையும் அதே சமயத்தில் எப்படி இரு கருத்துக்களும் சரியானதாகவே இருக்கமுடியும் என்பதையும் இந்த எடுத்துக்காட்டு கூறுகிறது. பர்னபா மாற்கை ஆதரித்தது பின்னவரின் ஆத்தும வளர்ச்சி என்னும் பிரதிபலனைத் தந்தது. முன்னணிச் சேவையில் பவுல் கொண்டிருந்த ஆர்வம் பல புதிய பணியாளர்களைப் பணிக்குக் கொண்டுவந்தது. அத்துடன் ஒருவேளை மாற்கு பெர்கேயில் விலகிச் சென்றதுபோன்ற இன்னொரு ஏமாற்றத்துக்கு இடமளிக்காமல் தவிர்த்தது.

ஆசியா மைனருக்கு பவுலின் இரண்டாவது ஊழியம்

இடைப்பட்ட காலத்தில் அந்தியோகியாவில் போதித்து விட்டு அந்தப் பயணக்குழுவினர் கி.பி.49ல் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். அவர்கள் தரைமார்க்கமாகப் பயணம்செய்து, சீரியாவிலும், சிலிசியாவிலும் திரிந்து சபைகளை திடப்படுத்தினார்கள் (அப்போஸ்தலர் 15:41). இவ்வாறாக இரண்டு குழுவினரும் தாங்கள் முன்னர் ஸ்தாபித்த சபைகளைச் சென்று மறுபடியும் பார்க்க ஆரம்பித்தனர். ஏனெனில் பவுல் அந்தியோகியாவுக்கு வரவழைக்கப்படும் முன்னர் இந்தப் பகுதிகளில் நீண்டகாலம் உழைத்திருக்கிறார். இன்னும் தரை மார்க்கமாகவே பயணம் செய்து தர்சுவிலிருந்து வடக்கு நோக்கி சிலிசியன் கதவுகள் வழியாகச் சென்றனர். பின்னர் வடகலாத்தியாவில் உள்ள வண்டிப் பாதை வழியாக மேற்கு நோக்கிச் சென்றனர். அவர்கள் உலர்ந்து கிடந்த சமவெளிகளை விட்டு பின் நிலப்பகுதிக்குச் செல்ல மலைகளைக் கடக்கும்போது அது வசந்த காலத்தின் பின் பகுதியாகவோ அல்லது கோடைக்காலத்தின் முன் பகுதியாகவோ இருந்திருக்கும்.

தங்களது முந்திய பயணத்தின் இறுதிப் பகுதிகளான தெர்பை, லஸ்திரா ஆகிய இடங்களுக்கு இறுதியாக வந்து சேர்ந்தனர். அங்கு ஒரு விசித்திரமான நிகழ்ச்சி நடைபெற்றது. பவுல் தீமோத்தேயு எனப்படும் மனந்திரும்பிய ஒரு வாலிபனைக் கண்டார். அவருடைய தாயார் ஒரு யூதப்பெண். தந்தை கிரேக்கர். பவுல் கடந்த முறை வந்திருக்கும்போது ஒருவேளை அவருடைய தாயார் மனந்திரும்பியிருக்கலாம். யூதப் பெண்களான தம்முடைய தாயார், பாட்டி ஆகியோரால் தீமோத்தேயு பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களில் பெரிதும் பயிற்றுவிக்கப்பட்டார். (2தீமோத்தேயு 1:5; 3:14,15). அந்தப் பகுதியில் உள்ள கிறிஸ்தவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார். தீமோத்தேயு ஒரு நல்ல தலைவரென்றும், அந்தப் பகுதியில் பணியாற்றுவதற்கு சிறந்த, விலைமதிப்பற்ற உதவியாளரென்றும் புரிந்துகொண்ட பவுல் அவரைத் தமது குழுவினருடன் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்தார்.

இருப்பினும் தீமோத்தேயுவின் சமுதாய அந்தஸ்து ஒரு பிரச்சினையை முன் கொண்டு வந்தது. தீமோத்தேயு புறஜாதியானான ஒரு தகப்பனுடைய மகன். விருத்தசேதன மற்றவர். ஏற்கனவே பவுலுக்கும் அவருடைய செய்திக்கும் எதிராகக் குமுறி எழுந்திருந்த யூத மக்கள் அவரை நிராகரித்து விடக்கூடும். அதே சமயம் பவுல் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்வித்தார். ஏற்கனவே கலாத்தியரைத் தொந்தரவு செய்த யூதமதத்தினருக்கு சலுகை காட்டுவதுபோல் தோன்றிவிடக் கூடுமன்றோ? இந்த யூதனைத் தானே அவர் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் தாக்கி எழுதியிருந்தார். இந்தப் பயணத்தின் போதுதான் எருசலேம் அவையினர் எடுத்த தீர்மானங்களைப் பகிரங்கப் படுத்திக்கொண்டிருந்தார். இந்த நிலையில் தீமோத்தேயுவுக்கு பவுல் தான் சரியென நினைக்கும் அத்தனைக்கும் முரண்பட்டு நிற்பதுபோல் தோன்றும். இருப்பினும் அவர் தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணப்பட்ட அந்தச் செயல் புறஜாதியார் நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்னும் கொள்கைக்கு மாறானதல்ல. ஏனெனில் தீமோத்தேயு புறஜாதியான் என்றே கருதப்படவில்லை. இது எந்தக் கொள்கைக்கும் பங்கம் விளைவிக்காத தனிமனித சலுகை. இதனால் இந்தப் பகுதி யூதருக்கிடையே ஊழியம் செய்யத் தடையாயிருந்தது நீக்கப்பட்டுவிட்டது.

ஆசியா மைனருக்கு பவுலின் இரண்டாவது ஊழியம்

புறஜாதிமக்களிடையே இதைப்பற்றிய சலனமேதுமில்லை. ஏனெனில் அவர்கள் தீமோத்தேயுவை ஒரு யூதனென்றே கருதினர். மேலும் இந்தமாதிரி சடங்காச்சாரங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டாமென்னும் சலுகை அவர்களுக்கிருந்தது.

பவுலின் நிருபமும் அவருடைய வருகையும் கலாத்திய திருச்சபைகளுக்கு சமாதானத்தைக் கொண்டுவந்தன. "அதினாலே சபைகள் விசுவாசத்திலே ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின". (அப்போஸ்தலர் 16:5) என்பதைத் தவிர இந்தப் பயணத்தைக் குறித்து வேறு விபரமேதும் சொல்லப்படவில்லை.

கலாத்தியாவுக்குச் சென்று பணியை முழுமைப்படுத்தின பின்னர், பவுல் தாம் பிரவேசிக்கக்கூடிய புதிய பணித் தளங்களைத் தேடினார். ஆசியாவுக்குச் செல்லும் வழியில் பிரிகியா தேசம் என்று அழைக்கப்படும் (பிரிகியா கலாத்தியா நாடுகளை......) கலாத்தியாவின் மேற்கு எல்லைப் பகுதிகளில் அவர் பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 16:6). ஆசியாவுக்குள் செல்லவேண்டாம் என்று தடைசெய்யப்பட்டதனால் அவர் வடக்கே மீசியா பித்தினியா பகுதிகளை நோக்கினார். ஆனால் இந்தப் பகுதிகளும் அவருக்கு அடைக்கப்பட்டிருந்தன. அடுத்து என்ன செய்வது என்ற எண்ணம் தந்த குழப்பத்தில் அவர் ஆசியாவின் மேற்குக் கோடித் துறைமுகமான துரோவாவுக்கு புறப்பட்டார்.

மக்கெதோனியாவுக்கு ஊழியம்

மக்கெதோனியாவில் இரண்டு முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாவதாக ஒரு நாளிரவு ஒரு மக்கெதோனியன் தம்மிடம் வந்து நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டதாகப் பவுல் ஒரு தரிசனம் கண்டார். அது தேவனுடைய அழைப்பு என்று விசுவாசித்து உடனடியாகப் பவுல் அந்த தரிசனத்தை தமது குழப்பத்துக்கு வந்த பதிலாக ஏற்றுக்கொண்டார். இந்தத் தீர்மானம் அந்த ஒரு நொடியில் எடுக்கப்பட்ட தீர்மானம். அன்று பவுல் கிழக்கு முகமாகத் திரும்பியிருந்தாராயின், இன்று கீழ்த்திசை நாடுகளுக்கு மிஷினரிகளை அனுப்பிக் கொண்டிருக்கும் மேற்கத்திய நாடுகள் அங்கிருந்து தங்களிடம் வரும் மிஷினரிகளை வரவேற்றுக் கொண்டிருக்கும். ஐரோப்பாவில் சுவிசேஷம் பரவினதும், மேற்கத்திய நாகரிகத்தில் சுவிசேஷம் ஏற்படுத்திய விளைவுக்கும் பவுல் மக்கெதோனிய அழைப்புக்கு உடன்பட்டதனால் தொடங்கியவையே. நாட்குறிப்பெழுதும் பழக்கமுடைய மிஷினரியும் லூக்கா எழுதின சுவிசேஷம், அப்போஸ்தலர் நடபடிகள் ஆகியவற்றை எழுதினவருமான லூக்கா துரோவாவில் மறுபடியும் பவுலுடன் இணைந்து கொண்டார். அப்போஸ்தலர் நடபடிகளின் பதினாறாம் அதிகாரம் பத்தாம் வசனத்தில் திடீரென ஒரு மாறுதல் காணப்படுகிறது. நூலாசிரியரே இங்கு செபலிலும் பங்கு பெறுகிறார் என்பதை அது காட்டுகிறது. "அந்த தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் "எங்களை" அழைத்தாரென்று "நாங்கள்" நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணி......" நூலாசிரியர் தான் எழுதினவைகளில் எங்கும் தன் பெயரைக் குறிப்பிடாவிடினும், அவர் தம்மைப் பன்மையை பயன்படுத்துவது அவருக்கும் அவர் விவரிக்கும் சம்பவங்களுக்கும் உள்ள தொடர்பைப் காட்டிக்கொடுத்து விடுகிறது.

அ. பிலிப்பி

அநேகமாக ஆகஸ்டு மாதத்தில் பவுலும் அவருடைய கூட்டத்தினரும் அஜீயன் கடலைக் கடந்து மக்கெதோனியாவில் உள்ள நெபோப்பிலி என்னும் பிலிப்பியன் கடல் துறைமுகத்தை அடைந்தனர். கான்ஜிட்டஸ் நதியிலிருந்து பத்து அல்லது பன்னிரெண்டு மைல் உள்நாட்டுப் பகுதியில் பிலிப்பி அமைந்துள்ளது. மகா அலெக்ஸாண்டரின் தகப்பனான பிலிப்பு என்பவர், சுற்றுப்புறங்களில் கிடைக்கும் தங்கம், வெள்ளி ஆகியவற்றின் சுரங்கங்களுக்கு மையமாக இந்த நகரை உருவாக்கினார். எனவே அவருடைய பெயராலேயே அது அழைக்கப்பட்டது. நெபோப்போலியிலிருந்து, அட்ரியாட்டிக் கடற்கரையில் உள்ள தைராக்கியம் துறைமுகத்துக்கு பெரிய எக்நேஷியன் பெருஞ்சாலை வழியே நடைபெறும் வணிகப் பயணங்கள் அனைத்தும் இந்நகரைக் கடந்தே சென்றன.

அந்த மாநிலத்தில் முன்னணியில் நின்ற நகரம் பிலிப்பி. இது ஒரு ரோமக் குடியேற்ற நகரம். இதற்குக் கொடுக்கப்பட்டிருந்த குடியேற்ற அந்தஸ்தினால் இந்நகரில் வாழும் மக்கள் ரோமக் குடிமக்களுக்குரிய சலுகைகளைப் பெற்றிருந்தனர். இவர்கள் ரோமத் தேர்தலில் வாக்களிக்கலாம். ரோம அரசமைப்புப் போன்ற அரசியலமைப்பு இவர்களுக்கு உண்டு. இத்தகைய நகரங்கள் தங்களுக்குள்ளே அரசியல் சலுகைகளை கருத்துடன் பாதுகாத்துக் கொண்டன. ரோமின் பார்வையில் தங்கள் நற்பெயரைக் குறைக்கக்கூடிய எந்தச் செயலையும் அவர்கள் தவிர்க்க முயன்றனர். அவர்களுடைய இந்த மனப்பான்மையை அறிந்துதான் பவுல் பின்னர் அவர்களுக்கு

மக்கெதோனியாவுக்கு ஊழியம்

எழுதும்போது "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்று எழுதினார் (பிலிப்பியர் 3:20). இதனை நீங்கள் பரலோகத்திற்குரிய குடிமக்களாயிருக்கிறீர்கள் என்று மொழி பெயர்க்கலாம். இது அரசியல் ரீதியில் அவர்கள் எவ்வாறு ரோமுடன் இணைக்கப்பட்டிருக்கிறார்களோ அவ்வாறே ஆவிக்குரிய நிலையில் அவர்கள் நித்திய நகரத்தின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள் என்று கூறுவதுபோல் உள்ளது.

பிலிப்பியில் யூதர் குடியிருப்புப் பெரிதாக இல்லாததால் பவுல் தனது பிரசங்கத்தை ஆரம்பிக்கக்கூடிய ஜெப ஆலயம் ஒன்றும் அங்கு இல்லை. நகருக்கு வெளியே நதிக்கரையில் கூடும் ஒரு சின்ன ஜெபக் கூட்டமே அவர் அங்குக் காணக்கூடிய உட்கருவாக இருந்தது. எனவே அவர் அங்கு சென்றார். தியத்தீரா ஊராளும், இரத்தாம்பரம் விற்கிறவளும், தேவனை வணங்குகிறவளுமான ஒரு பெண், தனது வீட்டை அவர்களுக்குத் தலைமை இடமாக இருக்கும்படி திறந்து கொடுத்தாள்.

அந்த நகரில் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது குறிசொல்லுவதினால் தன்னுடைய எஜமான்களுக்கு அதிக வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு அடிமைப் பெண்ணிடமிருந்து பவுல் பிசாசைத் துரத்தினார். தங்கள் ஆதாயத்தை இழந்த அவர்கள் கோபமடைந்து "ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அனுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள்" என்று பவுல் சீலா ஆகியோர் மீது குற்றம் சுமத்தினார்கள். அரசியல் ரீதியாகச் சாட்டப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுகளினால் பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டனர்.

ஒரு பூமி அதிர்ச்சியின் மூலம் அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அவர்களுடைய ரோமப் பிரஜா உரிமையினால் மேற்கொண்டு அவர்கள் தண்டிக்கப்படவில்லை. ஆனால் பிலிப்பியில் அவர்களுடைய ஊழியம் முடிவுற்றது. அவர்கள் வேறு பணித் தளங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர். இத்துடன் 'நாங்கள்' என்னும் தன்மைப் பன்மை முடிவுற்று விடுவதால் நூலாசிரியர் பிலிப்பியிலேயே தங்கிவிட்டிருக்க வேண்டுமென நாம் அறியலாம். அந்த நகரித்தின் மீது ஒரு ஆர்வமும், அந்த நகரத்தைக் குறித்து ஒரு பெருமையும் அவருக்கு இருந்தது. அந்நகரைக் குறித்த ஒவ்வொரு விபரத்தையும் அவர் அறிந்திருந்தார். பின்னர் பவுல் பிலிப்புக்குத் திரும்பி வந்ததும் மறுபடியுமாக 'நாங்கள்' என்னும் தன்மைப் பன்மை கொண்ட பகுதி தொடங்குகிறது. இவைகள் அனைத்தும் இவர் அங்கு உண்டான புதிய திருச்சபையின் போதகராகவும், ஒருவேளை மக்கெதோனியாவுக்கு சுவிசேஷகராகவும் அங்கேயே தங்கிவிட்டார் என்பதற்கு ஆதாரங்களாக உள்ளன.

ஆ. தெசலோனிக்கே

எக்னேஷியன் பெருஞ்சாலை வழியே பயணம்செய்து, பவுலும் அவருடைய குழுவினரும் ஆம்ஃபிபோலி, அப்போலோனியா பாதை கடந்து, தற்போது சலோனிகா என்றழைக்கப்படும் தெசலோனிக்கே நகருக்கு வந்து சேர்ந்தனர். இந்நகரம் கிபி. 315ல் காசண்டரால் நிறுவப்பட்டது. அவன் தன் மனைவியை கௌரவிக்க அவளுடைய பெயரை இதற்கு இட்டான். அவர் மகா அலெக்சாண்டருக்கு தாய்வழிச் சகோதரி. அது ஒரு சுதந்திரமான நகரம்; ஒரு கடற்கரை துறைமுகம்; வணிக மையம். இந்நகரின் அதிகாரிகள் பாலிடார்க்குகள் என அழைக்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 17:6).

மக்கெதோனியாவுக்கு ஊழியம்

தெசலோனிக்கேயில் உள்ள யூதக் குடியிருப்பில் ஒரு ஜெப ஆலயம் இருந்தது. அங்கு பவுல் மூன்று வாரங்கள் பிரசங்கித்தார். யூதப் பின்னணி கொண்ட மக்களுக்கு பவுல் கொடுத்த செய்தியை சுருக்கமாக மிகக் கவனமாக லூக்கா எடுத்துரைக்கிறார். அதனுடைய முக்கிய பகுதி வேதவாக்கியங்கள் உரைக்கிற மேசியா மரித்து, பின் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்திருக்க வேண்டும். இது, மேசியாவை ஒரு ராஜாவாக மட்டுமே நினைத்திருந்த யூதருக்கு ஒரு புதுக் கருத்தாகும். இந்த முக்கிய பகுதியின் துணைப்பகுதி நசரேயனாகிய இயேசு தீர்க்கதரிசிகள் உரைத்த வர்ணனைகளுக் கெல்லாம் பொருத்தமானவராக இருக்கிறார். எனவே அவரை மேசியா என்று அறிந்து கொள்ளவேண்டும் என்பதே (அப்போஸ்தலர் 17:3). முடிவு கொடுக்கப்படவில்லை. ஆனால் அதன் பொருளடக்கம் தெளிவாக உள்ளது. தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்ட மேசியா, நசரேயனாகிய இயேசுதானென்றால், உண்மையான யூதரானவராலும் அவர் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

தொடர்ந்து ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சில யூதர் விசுவாசித்தனர், யூத மார்க்கத்தமைந்த கிரேக்கர் பலரும் ஏற்றுக்கொண்டனர். இந்த நிகழ்ச்சியைத் தமது முதலாவது கடிதத்தில் பவுல்...... 'அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல் தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே......' என்று குறிப்பிடுகிறார் (1தெசலோனிக் கேயர் 2:13). மேலும் அவர் அவர்கள் 'விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதாகவும்' கூறுகிறார் (1தெசலோனிக்கேயர் 1:9). மனந்திரும்பியவர்களுக்கும், யூதருக்கும் இடையில் உள்ள இறுக்கமான சூழ்நிலை குறித்து அவர் தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்களில் பலமுறை குறிப்பிடுகிறார். அவர் புறஜாதிகளுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது பற்றி அவர்களுக்கு உண்டான பொறாமையைக் குறித்து அவர் ஆயாசப்படாமலிருக்க முடியவில்லை. சுவிசேஷகர்கள் நகரில் தங்கக் கூடாத அளவுக்கு எதிர்ப்பு அதிகமானது (1தெசலோனிக்கேயர் 2:15,16). இரவோடிரவாக அவர்கள் பெரோயாவுக்குச் சென்று அங்கு மறுபடியும் ஜெப ஆலயங்களில் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள்.

இ. பெரோயா

தெசலோனிக்கேயரைவிட பெரோயாவுக்குச் சென்றதுசமாதானமானதாக இருந்தது. அங்குள்ள யூதர் பவுலின் செய்தியை ஏற்றுக்கொண்டு அவர் சொல்வது உண்மைதானா என்று வேத வாக்கியங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தனர். தெசலோனிக்கேயரைவிட அவருடைய பிரசங்கத்தை ஏற்றுக்கொள்ள ஆர்வமுடையவர் களாயில்லாவிடினும் இதமாக நடந்து கொண்டனர் (அப்போஸ்தலர்17:11). தெசலோனிக்கேயாவிலிருந்து பிரதிநிதிக்கூட்டம் வந்து பவுலைத் தாக்கத் தொடங்கியபோது விசுவாசிகள் பெருகிக் கொண்டிருந்தனர். அவருக்கு வேறு ஒரு உதவியும் செய்ய முடியாதென்பதை உணர்ந்து கப்பலுக்குப் போகிறவர்போலஅவரை அவர்கள் அனுப்பிவிட்டனர். ஆனால் துறைமுகத்துக்குப் போகாமல் தெற்கே திரும்பி யூதர்கள் தொந்தரவு பண்ண இயலாத அத்தேனே பட்டணத்துக்குச் சென்றார்.

பவுலின் நிருபம் குறிப்பிடுவதுபோல உபத்திரவத்தின் மத்தியிலும் தெசலோனிக்கேய திருச்சபை வளம் பெற்றோங்கியது. பவுல் பெரோயாவை விட்டுப் புறப்பட்டபோது, அவர் தொடங்கிப் பின் முடிக்காமல் விட்டிருக்கும் பணியை முடிக்கும்படி, சீலாவும், தீமோத்தேயுவும் அங்கேயே தங்க வைக்கப்பட்டனர். தீமோத்தேயு அத்தேனே நகரில் பவுலைச் சென்று பார்த்து மக்கெதோனியாவில் ஏற்பட்ட குழப்பத்தைப்பற்றி செய்தி கொண்டுவந்தார்.

மக்கெதோனியாவுக்கு ஊழியம்

இந்தக் குழப்பம் திருச்சபையில் உபத்திரவத்தையும் சோதனையையும் கொண்டுவந்தது. திருச்சபையை ஊக்குவிக்கும்படியும், சோதனையை அவர்கள் எவ்வாறு தாங்கிக்கொள்கிறார்கள் என்றறிந்து அறிக்கை அனுப்பும்படியும் பவுல் அவரை உடனே திருப்பி அனுப்பினார் (1தெசலோனிக்கேயர் 3:1-5). சீலா மக்கதோனியாவுக்கு, ஒருவேளை பிலிப்பி பட்டணத்துக்கு திரும்பிச் சென்றார். எப்படியிருப்பினும் பவுல் அத்தேனே பட்டணத்தில் தனித்துவிட்டார். பின்னர் கொரிந்து பட்டணத்தில் சந்திக்கும்வரை பவுல் தமது உதவியாளர்களைக் காணவே இல்லை (அப்போஸ்தலர் 18:5).

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்

வரிசைக் கிரமப்படி பார்க்கும்போது இந்த நிருபங்கள் ஏறத்தாழ கிபி 51ம் ஆண்டின் இறுதியில் பவுல் கொரிந்துவில் தங்கியிருக்கும் போது எழுதப்பட்டவைதான். எனினும் திருச்சபைக்கு அவைகளுடன் உள்ள உறவின் காரணமாக அவைகள் இந்த இடத்தில் கவனிக்கப்படுகின்றன. பவுல் அகாயா ஊழியத்தில் ஈடுபட்டிருந்தபோது அவை ஒருசில மாத இடைவெளியில் எழுதப்பட்டவை. தீமோத்தேயு தனது அறிக்கையைக் கொரிந்துவுக்குக் கொண்டுவந்து கொடுத்துப், பவுல் அதைப் பெற்றவுடன் முதல் நிருபம் எழுதப்பட்டது. அதன் வாழ்த்துதலில் தீமோத்தேயுவின் பெயரும் சீலாவின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளன. அதன் பொருளடக்கம் பொதுவாக இரண்டு நிலைகளைக் கொண்டது. ஒன்று யூதர்களால் வந்த உபத்திரவத்தின் நடுவிலும் உறுதியாக விசுவாசத்தில் நிலைத்திருக்கும் தெசலோனிக்கேயரைப் புகழும் புகழ்ச்சி. அடுத்தது அவர்களிடையே வளர்ந்து விட்ட சில தவறுகளையும், தவறாக புரிந்து கொள்ளுதலையும் திருத்திச் செல்லும் திருத்தம். இதன் முக்கிய கருத்து கிறிஸ்து திரும்ப வருவதைப் பற்றியது. நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினாலே நம்பிக்கையோடே காத்திருக்கிறோம் (கலாத்தியர் 5:5) என்று குறிப்பிடும் ஒரே ஒரு இடத்தில் தவிர, கிறிஸ்து திரும்ப வருவது பற்றி கலாத்தியர் நிருபத்தில் பேசப்படவே இல்லை. அப்போஸ்தலருடைய பிரசங்கங்களில் இது ஒன்றும் புதுமை அல்ல. ஏனெனில் 'உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்று பேதுரு கூறியிருக்கிறார் (அப்போஸ்தலர் 3:21).

பவுலும் கூட அத்தேனே பட்டணத்தில் தாம் ஆற்றிய சொற்பொழிவில் கிறிஸ்துவே உலகத்தின் நியாயாதிபதி என்று சொல்லியிருக்கிறார் (அப்போஸ்தலர் 17:31). யாக்கோபும் கூடக் கர்த்தரின் வருகையைப் பற்றிப் பேசியிருக்கிறார் (யாக்கோபு 5:7,8). இருப்பினும், கிறிஸ்தவ இலக்கியத்தில் இந்த உண்மை, முதல் முதலாக, முழுமையாக விவாதிக்கப்பட்டிருப்பது தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்களில்தான்.

1தெசலோனிக்கேயர் புதிய திருச்சபையின் வளர்ச்சி - பொருளடக்கம்

1. வாழ்த்துதல்	1:1
2. திருச்சபையின் நிலை	1:2-10
திருச்சபையின் பண்பு	1:3
திருச்சபையின் தேர்தல்	1:4-7
திருச்சபையின் புகழ்	1:8-10
3. திருச்சபையுடன் அப்போஸ்தலருக்கு உள்ள உறவு	2:1-3:13
திருச்சபையுடன் பவுல் நடந்து கொண்ட முறை	2:1-12
தெசலோனிக்கேயர் பவுலை ஏற்றுக்கொள்ளுதல்	2:13-16
திருச்சபை பற்றிப் பவுலின் அக்கறை	2:17 - 3:10
திருச்சபைக்காகப் பவுலின் ஜெபம்	3:11-13
4. திருச்சபையின் பிரச்சினைகள்	4:1 -5:11
ஆண்பெண் உறவில் நன்னடத்தை பற்றிய பிரச்சினை	4:1-8

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்

சமுதாய நன்னடத்தை பற்றிய பிரச்சினை 4:9-12

மரித்தவர்களின் நிலை பற்றிய பிரச்சினை 4:13-18

காலங்கள், பருவங்கள் பற்றிய பிரச்சினை 5:1-11

5. முடிவுரையாக மகிமைப் படுத்துதலும் வாழ்த்துதலும் 5:12-28

இந்த நிருபத்தில் உள்ள பிரச்சினைகள், கலாத்தியர் நிருபத்தில் உள்ள பிரச்சினைகளைக் காட்டிலும் வித்தியாசமானவை. பொதுவாக அவை யூத விசுவாசிகளின் பிரச்சினைகளை அல்ல மனந்திரும்பிய புறஜாதிகளின் பிரச்சினைகளே யே எதிரொலிக்கின்றன. குழந்தைப் பருவத்திலிருந்தே நியாயப்பிரமாணம் யூதக் குழந்தைகளின் மனதில் பதிக்கப்படுவதால் விபசாரம், சோம்பேறித்தனம் பற்றிய பிரச்சினைகள் யூத சமுதாயத்தில் எழுவதற்கே வாய்பின்றி தொடக்கத்திலேயே தீர்த்து வைக்கப்பட்டு விடுகின்றன. புறஜாதியாருக்கு அப்படிப்பட்டதொரு பின்னணி கிடையாது. புறஜாதி நன்னெறியாளர்கள் நன்னடத்தை நெறிகளை வகுத்துக் கொடுத்தாலும், 'தேவன் இப்படிச் சொல்கிறார்' என்று அதிகாரத்தோடு அவர்கள் சொல்லவில்லை. எனவே ஆண்பெண் உறவுகள் இன்பம், வசதி ஆகியவற்றின் ஆட்சியின் கீழேயே இருந்தன. ஒரு யூதனுக்குத் தனது குடும்பத்தினாலும், இஸ்ரேல் நாட்டுக்குத் தனது விசுவாச உணர்வின் காரணமாகவும் ஒரு சமுதாய உறுதிநிலை உண்டு.

ஆனால் மனந்திரும்பிய புறஜாதியாரின் நிலை அப்படிப்பட்டதல்ல. புறஜாதிக் கட்டுப்பாட்டிலிருந்தும் கூட, தாங்கள் மனந்திரும்பிய காரணத்தாலேயே விலகி வந்துவிட்டார்கள். ஒரு சகோதரத்துவத்தையும் பரஸ்பரப் பொறுப்புணர்வையும் ஏற்படுத்துவதற்காகவே அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும் உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று (1தெசலோனிக்கேயர் 4:12) தெசலோனிக்கேயர் கட்டளையிடப்படுகின்றனர்.

கர்த்தரின் வருகையைப் பற்றிய போதனை முற்றிலும் புதிதான ஒன்றல்ல. பின்னர் பவுல், தாம் அவர்களிடத் திலிருக்கும் போது இவைகளைச் சொன்னதாகக் கூறியிருக்கிறார் (2தெசலோனிக்கேயர் 2:5). இதனைப் பற்றிய கிறிஸ்துவின் போதனைகள் சிலவற்றை அவர் அறிந்திருக்கக்கூடும். ஏனெனில் "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது" (1தெசலோனிக்கேயர் 4:15) என்று கூறுகிறார். மேலும் இதே காரியத்தைப் போதிக்க ஆண்டவராகிய இயேசு பயன்படுத்தின திருடன் உவமையையே இவரும் பயன் படுத்தினார் (1தெசலோனிக்கேயர் 5:4), மத்தேயு 24:43, லூக்கா 12:39,40). இந்த விவாதத்தின் முதல் பகுதியான உயிரோடிப்பவர்கள் மறுரூபமடைதலும், மரித்தோர் உயிர்த்தெழுதலும் தெசலோனிக்கேயரில் மரித்துப் போனவர்கள் மீதுள்ள அக்கறையினால் தூண்டப்பட்டு வந்த வார்த்தைகளாகும். கர்த்தர் வருவார் என்று அவர்கள் விசுவாசித்தனர். ஆனால் அவர் வருமுன் மரித்தவர்கள் நிலை என்னவாகும்? விவாதத்தின் இரண்டாம் பகுதி கிறிஸ்து எப்போது திரும்ப வருவார் என்றறியும் ஆவலி னால் தூண்டப்பட்டது.

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்

இவற்றுக்குரிய பதில்களெல்லாம் கணக்கிட்டு அறியும் நிலையில் அல்ல. ஆவிக்குரிய உணர்வினாலேயே அறிந்துகொள்ளக் கூடியவை என்று பவுல் பதிலளித்தார். அவர்கள் சுறுசுறுப்பும் ஜாக்கிரதை உணர்வும் உடையவர்களாய் கிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருந்தால் அவர்கள் கோபத்துக்கு விலக்கிக் காக்கப்படுவார்கள். அஞ்சவேண்டிய அவசியமே இல்லை.

2 தெசலோனிக்கேயர்

கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது என்பதைத் தவறாகப் புரிந்து கொள்ளுவதைத் தவிர்க்க தெசலோனிக்கேயருக்கு இரண்டாம் நிருபம் எழுதப்பட்டது *(2தெசலோனிக்கேயர் 2:2)*. பவுல் அந்தக் கருத்தைப் பிரசங்கித்த வேகம், அவருடைய பிரசங்கத்தை அல்லது அவருடைய முதலாம் நிருபத்தில் இருந்த கருத்துக்களை ஒருவேளை தவறாகப் புரிந்துகொள்ளச் செய்திருக்கலாம். ஒருவேளை தவறான இடத்திலிருந்து அவர்களுக்கு சில போதனைகள் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் "ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால் உடனே சஞ்சலப் படாமலும் கலங்காமலும் இருங்கள்" *(2தெசலோனிக்கேயர் 2:2)* என்று பவுல் கூறுகிறார். பவுல் சொன்னதாக யாரோ உரைத்த சில போதனைகளை பவுல் மறுத்துரைப்பதாக இது பொருள்படுகிறது. எப்படியிருப்பினும் 'கர்த்தருடைய நாளை' அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய சில திட்டமான அடையாளங்களை அவர் அவர்களுக்குக் கொடுக்கிறார்.

துரதிஷ்டவசமாக பவுலுக்கும் தெசலோனிக்கேயருக்கும் தெளிவாக இருந்த அந்த அடையாளங்கள், இன்று எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடியவையாக இல்லை. மறைபொருளாகக் கொடுக்கப்பட்டுள்ள 'தடைசெய்கிறவன்' *(2:6,7)* என்னும் சொல் விளக்குவதற்கு சிரமமானது. கர்த்தருடைய வருகைக்கு முன் மூன்று முக்கிய சம்பவங்கள் நடக்குமென்று கூறப்படுகிறது (1) தேவ பக்தியிலிருந்து மாறுபட்டு விரைந்து வரும் விசுவாச துரோகம் (2) ஏதோ ஒரு தடைசெய்யும் சக்தி நீக்கப்படுதல் *(2:6,7)*. (3) மனித உருவில் இருக்கும் தீமை. தன்னை முழுவதுமாய் வெளிப்படுத்தி சாத்தானால் உயிரூட்டப்பட்டு தேவனென்னப்படுவது எதுவோ, ஆராதிக்கப் படுவதெதுவோ, அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துவது *(2:4,9)*. மரணம், மறுவாழ்வு ஆகியவை பற்றி இந்தக் குறிப்பிட்ட போதனை பவுலின் நிருபங்களில் வேறு எங்கும் காணப்படவில்லை. இருப்பினும் இது பவுலின் போதனைகளில் ஒரு பங்காக இருந்தது. அவரால் திருச்சபைகளில் பிரசங்கிக்கப்பட்டது. ஒழுங்கின்மையின் மர்மமும், கிறிஸ்துவின் ரகசியமும் ஒன்றாக இந்த உலகில் முன்னேறி வருகின்றன. இரண்டுக்குமிடையில் தவிர்க்க முடியாத ஒரு போர் மூளும். கிறிஸ்துவே வெற்றி பெறுவார்.

அந்தக் கிறிஸ்துவை அழிக்கவும், தமது பரிசுத்தவான்களுக்கு பலனளிக்கவும் அவர் பூமிக்குத் திரும்ப வருவதே அந்த வெற்றி. மூன்றாவது அதிகாரத்தில் காணப்படும் ஊக்குவிப்பு 1தெசலோனிக்கேயரில் "அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும் உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று" கொடுக்கப்பட்ட *(1தெசலோனிக்கேயர் 4:12)* கட்டளையின் விரிவாக்கமேயாகும். சில தெசலோனிக்கேயர், கர்த்தருடைய வருகை,

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்

அவர்களைத் தீமைகளினின்றும் உலகின் இறுக்கமான சூழ்நிலைகளினின்றும் விடுவிக்கும் என்று எண்ணித் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு, விடுவிப்பவர் வருவதற்காகக் காத்திருக்க ஆரம்பித்தனர். அவர்கள் திருச்சபையினரோடு சேர்ந்து அவர்களைப்போல் நடவாமல் தங்கள் உணவு உடைபோன்ற தேவைகளுக்கு மற்றவர்களைச் சார்ந்திருந்தனர் (2தெசலோனிக்கேயர் 3:6-11). இவர்களைப் பவுல் தங்கள் தேவைக்கு உழைத்துச் சம்பாதிக்கும்படியும், தங்கள் சொந்தக் காரியங்களைக் கவனிக்கும்படியும் தூண்டினார்.

2 தெசலோனிக்கேயர் திருச்சபையின் எதிர்பார்ப்பு- பொருளடக்கம்

1. வாழ்த்துதல் 1:1,2
2. உபத்திரவத்தில் எதிர்பார்ப்பு 1:3-12
   - வளர்ச்சிக்காக நன்றிகூறுதல் 1:3,4
   - நோக்கத்தை விளக்குதல் 1:5
   - விளைவை எதிர்பார்த்தல் 1:6-10
   - ஜெபம் 1:11,12
3. நிகழ்ச்சிகளை விளக்குதல் 2:1-17
   - பதட்டம் அமைதிப்படுத்தப்படுதல் 2:1,2
   - விசுவாச துரோகம் முன்னறிவிக்கப்படுதல் 2:3-7
   - அந்திக் கிறிஸ்து வெளிப்படுதல் 2:8-12
   - விசுவாசத்தின் தன்மை
   - ஊக்குவிக்கப்படுதல் 2:13-17
4. ஆயத்த நிலைக்குப் புகழ்ச்சி 3:1-15
   - ஜெபத்துக்கு 3:1-5
   - உழைப்புக்கு 3:6-15
5. ஆசீர்வாதமும் வாழ்த்துதலும் 3:16-18

முதலாம், இரண்டாம் தெசலோனிக்கேயர் நிருபங்கள் பவுலின் முதல் எழுத்துக்களில் உள்ளவை. பவுலின் பிரசங்கம் புதுமையான ஒன்றல்ல, ஏற்கனவே அது ஒரு விசுவாச உறுதிப்பாட்டை உண்டாக்கி உள்ளது என்பதற்கு அவை சாட்சி பகருகின்றன. தாம் எழுதினவற்றையே அவர்களிடையே பிரசங்கித்ததாகப் பவுல் குறிப்பிடுவது (2தெசலோனிக்கேயர் 2:15). அவர் திட்டமானதொரு விசுவாச அமைப்பை உடையவராயிருந்தார் என்பதைக் காட்டுகிறது. அவர் பயன்படுத்தும் 'முறைமை' என்னும் சொல் (2:15,3:6) இந்தக் கருத்துக்குத் துணை நிற்கிறது. பவுலைப் பொறுத்தவரை 'முறைமை' ஏதோ ஆதாரபூர்வமின்றி தொடர்ந்து வருகின்ற வதந்தி என்று பொருளல்ல. அது ஒரு திடமான போதனையைக் குறிக்கிறது. ஒருவேளை அது வாய்மொழி போதனையாகவே இருந்தாலும் திடமாக வடிவமைக்கப்பட்டு, கவனமாகப் பாதுகாக்கப்பட்டது, அது. கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளை தான் அவர்களுக்கு அறிவித்ததைக் குறிப்பிடும்போது துணை வினைச்சொல்லையே அவர் பயன்படுத்தினார். அவரைப் பொறுத்தவரை கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றிய உண்மைகள் தான் அவருக்கு சுவிசேஷம் (1கொரிந்தியர் 15:3). கண்ணால் கண்ட சாட்சிகள் கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றிய உண்மைகளை எடுத்துரைத்ததை விவரிக்கும்போது லூக்கா அதே வினைச்சொல்லைப் பயன்படுத்தினார் (லூக்கா 1:2).

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்

'முறைமை' என்பதில் சில பூமிக்குரிய கொள்கைகளும் சேர்ந்திருக்கக் கூடும். ஏனெனில் அது சகோதரர் பின்பற்றக் கூடிய நன்னடத்தை பற்றிய கட்டளை என்று அவர் குறிப்பிடுகிறார் (2 தெசலோனிக்கேயர் 3:6).

மேலும் 'முறைமை' என்பது அதிகாரப் பூர்வமானது மட்டுமல்ல, அதிகாரம் உடையது. கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் தனது சுவிசேஷம் தனிச்சிறப்பு வாய்ந்த உண்மைகளைக் கொண்டதென்றும் அதற்கு பதிலாக அதனுடைய இடத்தை வேறெதுவும் பெற முடியாதெனவும் கூறினார். 2 தெசலோனிக்கேயர் 3:14ல் மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற் போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள் என்று பவுல் கூறினார்.

தன் சொந்த அதிகாரத்தில் தனிப்பட்ட முறையில் இவ்வாறு வலியுறுத்தியிருப்பாராயில் அவரை ஒரு மதவெறி கொண்டவர் என்றோ, அரக்கத்தனம் உடையவர் என்றோ அழைப்பதிலிருந்து அவர் தப்பமுடியாது. அதே சமயம் அவர் தமது செய்தியை தேவனிடத்திருந்து பெற்று, பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு தேவனுடைய வார்த்தையைப் பேசியிருப்பாரானால் (1 தெசலோனிக்கேயர் 2:13) தமது அதிகாரத்துக்கு அவர் உரிமை உடையவரே.

இந்த இரு சின்ன நிருபங்களிலும் விசுவாச அட்டவணையில் உள்ள ஒவ்வொரு முக்கியமான கொள்கையும் இடம் பெற்றுள்ளது. அவைகள் கொள்கை உடன்படிக்கை களாகவோ அல்லது நூலாசிரியனின் பொதுவான இறையியல் நோக்கத்தை வெளிப்படுத்துவனவாகவோ இல்லாவிட்டாலும் அவைகளில் ஒரு முழுமையான இறையியல் போதனை உண்டு.

பவுலும், அவருடைய நிருபத்தைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களும் ஜீவனுள்ள (1 தெசலோனிக்கேயர் 1:9) ஒரே தேவனை-பிதாவை (2 தெசலோனிக்கேயர் 1:2) விசுவாசித்தனர். அவர் மனிதரை நேசித்து அவர்கள் தமது இரட்சிப்பை அனுபவிப்பதைத் தெரிந்து கொண்டவர் (2 தெசலோனிக்கேயர் 2:16 ; 1 தெசலோனிக்கேயர் 1:4). அவர் தமது குமாரனான இயேசு கிறிஸ்துவின் மூலம் கோபத்துக்கு தப்பும் விடுதலையை அனுப்பினார் (1 தெசலோனிக்கேயர் 1:10). இந்த விடுதலையை சுவிசேஷச் செய்தியின் மூலம் வெளிப் படுத்தினார் (1 தெசலோனிக்கேயர் 1:5; 2:9; 2 தெசலோனிக்கேயர் 2:14). இந்தச் செய்தி பரிசுத்த ஆவியினால் உண்மையாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது (1 தெசலோனிக்கேயர் 1:5; 4:8). சுவிசேஷம் யூதர்களால் கொலை செய்யப்பட்ட கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றியது (1 தெசலோனிக்கேயர் 2:15) அவர் மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தார் (1 தெசலோனிக்கேயர் 1:10; 4:14; 5:10). இப்போது அவர் பரலோகத்திலிருக்கிறார் (1 தெசலோனிக்கேயர் 1:10) ஆனால் அவர் திரும்பவும் வருவார் (1 தெலோனிக்கேயர் 2:19, 4:15, 5:23, 2 தெசலோனிக்கேயர் 2:1). அவர் தெய்வம் ஏனெனில் அவர் கர்த்தரென்று அழைக்கப்படுகிறார் (1 தெசலோனிக்கேயர் 1:10). அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (1 தெசலோனிக்கேயர் 1:1,3; 5:28; 2 தெசலோனிக்கேயர் 1:1). விசுவாசிகள் (1) தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டு (1 தெசலோனிக்கேயர் 1:6) (2) விக்ரகங்களிலிருந்து திரும்பி தேவனை சேவித்து கிறிஸ்து திரும்பிவரக் காத்திருக்கிறார்கள் (1 தெசலோனிக்கேயர் 1:9,10). பரிசுத்தமாகுதலில் அவர்களுடைய வளர்ச்சி இருக்கிறது (1 தெசலோனிக்கேயர் 4:3,7; 2 தெசலோனிக்கேயர் 2:13).

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்கள்

தங்களுடைய சொந்த வாழ்க்கையில் அவர்கள் சுத்தமானவர்களாகவும் (1 தெசலோனிக்கேயர் 4:4-6) உழைக்கிறவர்களாகவும் (1 தெசலோனிக்கேயர் 4:11,12) ஜெபிக்கிறவர்களாகவும் (1 தெசலோனிக்கேயர் 5:17) சந்தோஷமுள்ளவர்களாகவும் (1 தெசலோனிக்கேயர் 5:16) இருக்கவேண்டும். இவ்வாறாக எந்த நிலையில் பார்த்தாலும் கொள்கையளவிலும் சரி, நடைமுறையிலும் சரி தெசலோனிக்கேயர் நிருபங்களில் கிறிஸ்தவ உண்மைகள் அனைத்தும் பொதிந்துள்ளன.

காயாவுக்கு ஊழியம்

அத்தேனே

பண்டைய உலகத்தின் அதிசயங்களில் ஒன்று அத்தேனே பட்டணம். அதன் பொற்காலத்தில், அதாவது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் பண்டைய எந்த நகரத்தையும்விட அதிகமான இலக்கிய அறிஞர்களையும், தத்துவ அறிஞர்களையும் சிற்பக்கலை எழிலையும் தன்னுள் கொண்டிருந்தது. பவுலின் காலத்தில் அதன் அரசியல், வணிக முக்கியத்துவம் வெகுவாகக் குறைந்துவிட்டிருந்தது. ஆனால் அறிவும் பண்பாடும் பற்றிய சுற்றொளி ஒன்று இன்னும் சற்றே அதன்மீது தொக்கி நிற்பதுபோல் ஓரளவு புகழ் மட்டும் எஞ்சியிருந்தது. அத்தேனே பட்டணத்து மக்கள் தங்கள் பாரம்பரியத்தைப் பற்றிய உணர்வும் தங்கள் கடந்த காலத்தைப் பற்றிய பெருமையும் உடையவர்களாக இருந்தனர். அத்தேனே பட்டணத்தின் பொற்காலத்தில் கட்டடங்களான ஏரக்கியம், பார்தினான் போன்றவை இன்னும் கூட இருக்கின்றன. அந்நகரின் அறிவுப் பூர்வமான சூழ்நிலை அதன் தத்துவ பாரம்பரியத்தைப் பாதுகாத்தது. நகரின் முற்றங்களிலும், தெருமுனைகளிலும் உலவிய ஞானிகளுக்கு பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரைப் போன்ற உருவாக்கும் ஞானம் இல்லாவிடினும் மற்ற இடங்களில் காணப்படாத அளவுக்கு அறிஞர்களை அறிந்துணர்ந்து ரசிக்கும் தன்மை இருந்தது.

மக்கெதோனியாவிலிருந்து தீமோத்தேயுவும், சீலாவும் வருவதற்காக அத்தேனே பட்டணத்தில் காத்துக் கொண்டிருந்த போது, வழக்கம்போல் பவுல் ஊழியத்தில் ஈடுபட்டார். அங்கு அவருக்கு இரண்டு பணித் தளங்கள் திறக்கப்பட்டிருந்தன. ஒன்று அவர் வழக்கமாக, யூதரையும், யூதமார்க்கத் தலைந்தவர்களையும் சந்திக்கும் ஜெப ஆலயம்.

மற்றது அவர் புறஜாதி சிந்தனையாளர்களைச் சந்தித்த சந்தை வெளி. இங்கு அவர் ஒரு புதுவிதமான எதிரொளியைச் சந்தித்தார். அது கல்வி அறிவு கொண்ட நம்பிக்கையற்ற புறஜாதியார். இப்படிப்பட்ட புறஜாதியார் எதையும் கேட்க ஆயத்தமாக இருந்தனர். ஆனால் அவர்கள் எதையும் நம்பத் தயாரில்லை. விக்ரக ஆராதனையை வெறுக்கும் யூதக் கிறிஸ்தவரான பவுலுக்கும் தங்கள் சொந்த தெய்வங்கள் மீதே நம்பிக்கையற்ற, அதே சமயம் மதசகிப்புத் தன்மையுடைய புறஜாதியாருக்கும் நடந்த வித்தியாசமான போராட்டத்தை விளக்க லூக்கா நிறைய இடம் எடுத்துக் கொண்டிருந்தார். இந்தப் புறஜாதியார் பவுலின் செய்தியையும் கருத்தாக எடுத்துக்கொள்ளவில்லை.

பவுலுடைய பிரசங்கம் அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டியது. எனவே அதைப்பற்றி விபரமாக விசாரித்துக் கேட்க பவுலை அவர்கள் அரியோ பேகுக்கு அழைத்துச் சென்றனர். உண்மையில் அரியோபேகஸ் என்பது மார்ஸ் மேடை. அது அத்தேனே பட்டணத்தில் உள்ள மேடானதொரு பாறைப் பிரதேசம். பொதுக்கூட்டங்கள் நடத்தக்கூடிய அளவுக்கு அங்கு இடவசதி உண்டு. அதன் பெயர் காட்டுவதுபோல் அவ்வளவு பெரிய இடமில்லை. கல்விக் கொள்கைகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நகரின் ஆட்சிக்குழு வெளிநாட்டுப் போதகர்களுக்குப் பேசுவதற்கு அனுமதி வழங்கியது. ஒரு குற்றம் அவர்மீது சுமத்தப்பட்ட காரணத்தால் அவர் விசாரணையில் நிற்பதாகக் குறிப்பிடப்படவில்லை. தமது போதனைகளின் முக்கிய கருத்துக்களை மட்டுமே எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சொற்பொழிவு (17:22-31) சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலின் தலைசிறந்ததொரு எடுத்துக்காட்டு. அங்கு காணப்பட்ட எழில் மிகு சிற்பங்களையும் நகரை அலங்கரித்துக்கொண்டு தெய்வ வணக்கத்துக்கென வைக்கப்பட்டிருந்த

காயாவுக்கு ஊழியம்

சிலைகளையுமே தொடர்புப் புள்ளியாகக் கொண்டு தொடங்கி வானத்தையும் பூமியையும் படைத்தவரும் மனிதருடைய வாழ்க்கையைத் தமது ஆட்சிக்குள் வைத்திருப்பவருமான ஒரே தேவனைக் குறித்து அவர் பேசினார். எப்பிக்கூரியரின் அறியப்படாத தெய்வத்துடன் ஒப்பிட்டு தேவனுடைய நித்திய தன்மையையும் எங்கும் தெய்வம் எல்லாம் தெய்வம் என்னும் ஸ்தோயிக்கரின் கொள்கைக்கு முரணாக தேவனுடைய ஆளத்துவத்தையும், விதி பற்றிய ஸ்தோயிக்கரின் கொள்கைக்கு எதிராக மனந்திரும்புதலின் அவசியத்தைப் பற்றியும் அவர் பேசினார். கூடியிருந்த கூட்டத்தாரின் வெறுப்பு நிறைந்த குறுக்கீடு கிறிஸ்தவ வெளிப்பாட்டின் விபரங்களை அவர் தொடர்ந்து சொல்லவிடாமல் தடுத்தது. எனவே அந்தச் சொற்பொழிவு முடிக்கப்படாமலே நின்றுவிட்டது. சிலர் மனந்திரும்பினர்.

பார்க்கப்போனால் அத்தேனேயில் செய்யப்பட்ட ஊழியம் பவுலுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. ஜெப ஆலயத்திலும் அவர் எழுச்சி ஏதும் ஏற்படுத்திவிடவில்லை. புறஜாதி மக்களும் எள்ளி நகையாடி அவரைத் தள்ளி விட்டனர். நகரத்தை விட்டு வெளியே தள்ளப்படுவது அவருக்குப் பழக்கமான விஷயம்தான். வெறுப்போடு கண்டுகொள்ளாமல் அலட்சியப் படுத்தப்படுவது அவருக்குப் பழக்கமில்லாத ஒரு காரியம். உண்மையிலேயே அது அவரை அதிக ஆழமாகக் காயப்படுத்தியிருக்கவேண்டும். ஏனெனில் அத்தேனே பட்டணத்திலிருந்து திரும்பி கொரிந்து மக்களிடையே வந்து சேர்ந்ததைப் பற்றி அவர் கொரிந்தியருக்கு எழுதும்போது "அல்லாமலும் நான் பலவீனத்தோடும், பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்" (1 கொரிந்தியர் 2:3) என்று எழுதினார். இந்த நடுக்கத்துக்கு சரீர சம்பந்தமான காரணமும் இருந்திருக்கக்கூடும்.

ஆனால் அத்தேனே பட்டணத்து ஜனங்கள் வழக்கமில்லாத முறையில் அவரை நிராகரித்துத் தள்ளியதுதான் அவர் அவ்வாறு நிலைகுலைந்து போகும்படி செய்துவிட்டதென்று தோன்றுகிறது. தன்னுடைய செயல்முறைகள் தவறோ என்று அவர் எண்ணிப்பார்க்குமாறு அது செய்துவிட்டது.

கொரிந்து

அத்தேனே பட்டணத்திலிருந்து பவுல் கொரிந்து பட்டணத்துக்குச் சென்றார். இது அத்தேனே பட்டணத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட பண்புகளை உடைய நகரம். இந்த நகரம் கி.மு.146ல் ரோமரால் கொள்ளையிடப் பட்டு எரிக்கப்பட்டது. கி.மு.46ல் ஜூலியஸ் சீசரால் திரும்பக் கட்டப்பட்டு அகாயாவின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைநகரமாயிற்று. சட்டசபை அந்தஸ்துடைய ஒரு மாநிலமாகவுமிருந்தது. அப்போஸ்தலர் 18:12 குறிப்பிடுவதுபோல ஆட்சி புரியும் அதிபதிகள் வசிக்கும் நகராமாகவும் அது இருந்தது. மேற்கே லெக்கியம் வளைகுடாவுக்கும் கிழக்கே ஏஜியன் கடலுக்குமிடையில் பெலோபோனிசசை முக்கிய தீவுடன் இணைக்கின்ற குறுகிய நிலப்பரப்பில் கொரிந்து நகரம் அமைந்திருந்தது. இந்நகரம் ஒரு வியாபார மையமாக இருந்தது. கப்பல் பயணம் அபாயகரமானதானது. பெலோபோனிசின் தென் முனையுமான மலியா முனையை சுற்றிக்கொண்டு போவதை விட கொரிந்துவில் தங்கள் சரக்குகளைக் கப்பல் மாற்றிக்கொள்வதையே அநேகக் கப்பல் தலைவர்கள் தெரிந்துகொண்டனர். அங்கிருந்து அந்தச் சரக்குகள் மேற்கே லெக்கியத்திலிருந்து இத்தாலியாவின் அட்ரியாட்டிக் துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டன. கொரிந்துவின் மேற்கே லெக்கியம் துறைமுகமும் கிழக்கே சென்கிரியா துறைமுகமும் இருந்தன. இவ்வாறு வணிகத்தில் ஏகச் சக்ராதிபதியாக இருந்த கொரிந்து விரைவாக செல்வச் செழிப்படைந் தோங்கியது.

காயாவுக்கு ஊழியம்

அரசியலைப் பொறுத்தவரை, பிலிப்பியைப் போலவே இதுவும் ஒரு ரோமக் குடியேற்றப்பகுதி. பல்வேறு இனத்தவரும் கலந்து காணப்படும் ஜனத்தொகையைக் கொண்ட நகரம் இது. முதன் முதலில் இந்நகரம் அழிக்கப்பட்டபோது இங்கிருந்த மக்கள் கொல்லப்பட்டனர் அல்லது துரத்திவிடப்பட்டனர். யூதர்கள் அங்கு வியாபாரத்துக்காக வந்தனர். ரோமர் அரசியல் அலுவலாக வந்தனர். அல்லது முதலில் குடியேறிய ரோமரின் வம்சத்தினர் அங்கிருந்தனர். கிராமப் புறங்களிலிருந்து நகர வாழ்க்கை முறையினால் ஈர்க்கப்பட்டவர்களாக கிரேக்கர் அங்கு வந்தனர். வியாபார ஸ்தலங்களில் வழக்கமாகக் காணப்படுவதுபோல, மாலுமிகள், வியாபாரிகள், பணம் கொடுக்கல் வாங்கல் செய்பவர்கள் போன்ற பலதரப்பட்ட மக்கள் மத்தியதரை உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்து கலந்திருந்தனர்.

செல்வப் பெருக்கம் போலியான ஒரு கலாச்சாரத்தை வளர்த்தது. ஆடம்பரம், கண்காட்சி, காமம், விளையாட்டு ஆகியவற்றைத் தேடுகிற திடீர் வளர்ச்சி பெற்றதொரு நகரமாக கொரிந்து இருந்தது. புறஜாதியாரின் தாழ்வான அளவீட்டின்படியே பார்க்கும்போதுகூட நன்னடத்தையில் கொரிந்து நகரத்தார் மிகத் தாழ்வான நிலையில் காணப்பட்டனர். ரோம நாடகங்களில் பொதுவாக அவர்கள் குடிபோதையில் உள்ளவர்களாகக் காட்டப்பட்டனர். மோசமான பாவ வாழ்க்கையைக் குறிப்பிட "கொரிந்தியனைப் போல வாழ்கிறான்" என்று குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. கொரிந்துவில் உள்ள அஃப்ரோடைட்டின் கோவிலில் ஒரே சமயத்தில் ஓராயிரம் பெண் பூசாரிகள் தங்கி இருந்தனர். இவர்கள் அனைவரும் தொழில் முறைவேசிகள்.

பயணம், வணிகம் ஆகிய அலைகள் மாறிக்கொண்டே இருக்கும். மக்கள் கூட்டத்தை கொரிந்துவுக்குள் கொண்டுவந்தன. அவர்களுடன் மத்தியதரைப் பகுதியின் அழுக்குகளும் அவலங்களும் கூட அந்நகருக்குள் வந்தன. வளமும் வறுமையும் அழகும் அலங்கோலமும் கலாச்சாரமும் கழிசடையாக கொரிந்துவில் அருகருகே காணப்பட்டன.

பவுல் அத்தேனே பட்டணத்தில் நீண்ட நாட்கள் கழிக்கவில்லை. எனவே அவர் மக்கெதோனியாவை விட்டுப் புறப்பட்ட அதே ஆண்டின் இறுதியிலேயே கொரிந்துவுக்கு வந்திருக்கவேண்டும். பவுல் கல்லியோனுக்கு முன்பாக விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டிருந்தார். அந்தக் கல்லியோனுடைய ஆட்சிக்காலம் ரோம அரசாங்க ஆண்டுத் துவக்கத்தில் அதாவது ஜூலை மாதத்தில் கிபி 52ம் ஆண்டு தொடங்கியது. பவுல் கொரிந்துவில் தங்கியிருந்த மொத்தக் காலம் ஒன்றரை ஆண்டுகளே (அப்போஸ்தலர் 18:11). இந்த ஒன்றரை ஆண்டில் விசாரணைக்கு முந்தின காலம் எவ்வளவு அதற்குப் பின்னுள்ள காலம் எவ்வளவு என்பது தெரியவில்லை. கல்லியோன் அவரது வழக்கைத் தள்ளிவிட்ட பிறகு பவுல் "அநேகநாள்" அங்கே தரித்திருந்ததாக லூக்கா கூறுகிறார். எனவே பவுல் கொரிந்துவுக்கு வந்து சேர்ந்த காலம் கி.பி. 51ன் இறுதி என்றும் அங்கிருந்து புறப்பட்டது கி.பி.53ன் வசந்த காலத்தின் ஆரம்பத்தில் என்றும் கொண்டால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமையும்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, அத்தேனே பட்டணத்தில் அவருடைய செய்தி வெறுப்போடு எள்ளி நகையாடப்பட்டதால் சோர்ந்துபோன உள்ளத்துடன் அவர் கொரிந்துவுக்கு வந்து சேர்ந்தார். அவருடைய உடன் ஊழியர்கள் இன்னும் மக்கெதோனியாவிலிருந்து வரவில்லை. அநேகமாக அவருடைய கையிருப்புப் பணம் கூடக் குறைந்து போயிருக்கும்.

காயாவுக்கு ஊழியம்

அவர் கொரிந்து பட்டணத்தை அடைந்தபோது அங்கு ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவுடன் தமது பழைய வேலையாகிய கூடாரம் செய்யும் வேலையில் சேர்ந்து கொண்டார். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் கிளாடியசின் ஆணைப்படி ரோமிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள். அவர்கள் கொரிந்துவுக்கு வருவதற்கு முன்னரே மனந்திரும்பிய கிறிஸ்தவர்களா அல்லது பவுலுடன் கொண்ட தொடர்பினால் விசுவாசிகளானவர்களா என்பது தெரியவில்லை. எப்படியிருப்பினும் அவர்களிடம் பவுலுக்கு உறைவிடம், பணி, தோழமை ஆகியவை கிடைத்தன.

சிறிது காலத்திற்குள்ளாகவே சீலாவும் தீமோத்தேயுவும் திருச்சபைகளின் வளர்ச்சி பற்றிய செய்திகளுடன் மக்கெதோனியாவிலிருந்து திரும்பினர். பவுல் பிலிப்பியர் நிருபத்தில் குறிப்பிடுகின்ற பண உதவி, பவுலுக்காக இந்தச் சமயத்தில்தான் அனுப்பப்பட்டிருக்கவேண்டும்.

"மேலும் பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதே யல்லாமல் வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்த போதும் என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொரு தரம் அனுப்பினீர்கள்" (பிலிப்பியர் 4:15,16).

பவுல் அவர்களை விட்டுச் சென்ற பின்பு மக்கெதோனியா திருச்சபைகள் அவருக்கு தாராளமாய்க் கொடுத்துதவின என்பதை இந்தப் பகுதி காட்டுகிறது.

நல்ல செய்தியினாலும், மக்கெதோனியாவிலிருந்து வந்த உதவியினாலும் ஊக்குவிக்கப்பட்டவராக, பவுல், இயேசுவே மேசியா என்று மிகுந்த வைராக்கியத்துடன் திட்டவட்டமாகப் பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 18:5).

இதற்கு ஜெப ஆலயங்களில் ஏற்பட்ட எதிர் விளைவின் காரணமாக, யூதரை அவர்களுடைய அவிசுவாசத்துக்கே விட்டு விட்டுத்தான் புறஜாதியாரிடத்தில் போவதாகக் கூறி பவுல் அவ்விடம் விட்டகன்றார். அவர் ஜெப ஆலயத்தை விட்டு வெளியேறியதுடன் தனது தலைமை இடத்தையும் கூட அருகில் வசித்த யூத மார்க்கத்தமைந்தவராக தீத்து யுஸ்து என்பவருடைய வீட்டுக்கு மாற்றிக் கொண்டார். ஜெப ஆலயத் தலைவன் விசுவாசியானான். கொரிந்தியரில் அநேகரும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர்.

கொரிந்து பட்டணத்தில் பவுலின் ஊழியம் இந்தக் காலகட்டத்தில் ஓரளவு சிரமமான நிலையிலிருந்து. தனது மிஷனெரிப் பணியின் செயல் திட்டத்தை அவர் மாற்றியமைத்துக் கொண்டிருந்தனர். ஏனெனில் 1கொரிந்தியரில் அவர் "நான் உங்களிடத்தில் வந்தபோது தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை" என்று கூறுகிறார் (1கொரிந்தியர்2:1). தாம் எத்தனை பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்பது அவருக்கு நினைவில்லை. அக்கிரமும், விக்ரக ஆராதனையும் நிறைந்த இந்தப் பட்டணத்தில் பதினெட்டு மாதங்களாக அவர் உழைத்த உழைப்பு அவரது சரீரத்தின் பலத்தையும் நரம்புகளின் பலத்தையும் பாதித்தது.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவுடன் பவுல் கொரிந்து பட்டணத்தை விட்டு கீழ்த்திசை செல்லப் புறப்பட்டார். வழியில் அவர்கள் எபேசுவில் தங்கினார்கள்.

காயாவுக்கு ஊழியம்

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அங்கு தலைமை இடத்தை ஏற்படுத்திக்கொண்டு தங்கள் ஊழியத்தைத் தொடங்கினர். பவுல் ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். ஆனால் அவர் விரைவில் பாலஸ்தீனாவுக்குப் போக விரும்பினதால் அங்கு கொஞ்சக்காலமே தங்கியிருந்தார்.

அவருடைய பயணத்தைப்பற்றி எந்த விபரமும் தரப்படாமல், அவர் போய் சேரவிரும்பிய இடத்தை அடைந்ததாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் செசரியா பட்டணத்தில் கரையிறங்கி "சபையை சந்தித்தார்". இது செசரியாவிலா அல்லது எருசலேமிலா என்பது தெளிவாக இல்லை. பின்னர் அந்தியோகியாவுக்குப் போனார். முதன் முதலில் தம்மை ஊழியத்துக்கு அழைத்த அந்தத் திருச்சபைக்கு அவர் செல்லும் கடைசித் தடவை இதுதான். அநேகமாக கிழக்குமுகமாக அவர் செய்த பயணம் கோடைக்காலத்தின் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டிருக்கக்கூடும். எனவே கி.பி.53ன் இறுதியின் மறுபடியும் அவர் மேற்கு முகமாகப் பயணம் செய்து கொண்டிருந்தார். (அப்போஸ்தலர் 18:22,23).

கோடைக்காலத்தின் பின்பகுதியும், இலையுதிர் காலத்தின் ஆரம்பப் பகுதியும் கலாத்தியாவுக்கும் பிரிகியாவுக்கும் சென்ற பயணத்தில் செலவழிக்கப்பட்டிருக்கக்கூடும். எருசலேம் அவை கூடின சமயத்தில் (கி.பி.48 அல்லது 49) தொடங்கிய கலாத்திய திருச்சபைகளின் குழப்பம் முற்றுமாக அடங்கிப் போயிருந்திராது. எனவே தான் பவுல் சீடர்களை "நியமிக்க" வேண்டியதாயிற்று. குளிர்காலம் வரும் முன்னர் பவுல் எபேசுவுக்குத் திரும்பி வந்துவிட்டார். அங்கு அவர் தமது அனுபவத்தில் மிக நீண்டதும், மிகக் குழப்பம் நிறைந்ததுமான ஆசிய ஊழியத்தைத் தொடங்கினார்.

ஆசியாவுக்கு ஊழியம்

எபேசு

ஆசியா மைனரின் மேற்குக் கரையோரம் உள்ள பழமையான குடியேற்ற நகரங்களில் எபேசுவும் ஒன்று. அது ஆசியாவில் உள்ள ரோம மாநிலத்தின் தலைசிறந்த நகரம். அதன் ஆரம்பம் அதன் பழமையில் மீட்கப்பட்டுவிட்டது. ஆனால் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் அது பெயர்பெற்ற குடியேற்ற நகரமாயிருந்தது. விரைவிலேயே கிரேக்கர்களால் கைப்பற்றப் பட்டது. இது கடலிலிருந்து மூன்று மைல் தொலைவில் கேய்ஸ்டர் நதிக்கரையில் அமைந்துள்ளது. இந்த நதியில் அந்தக் காலத்தில் கப்பல் போக்குவரத்து நடக்கக் கூடியதாக இருந்தபடியால் எபேசு ஒரு கடல்துறைமுகமாக இருந்தது. கேய்ஸ்டர் நதிப்பள்ளத்தாக்கு நிலப்பகுதியில் வெகுதூரம் உள்நோக்கிச் சென்றபடியால் அங்கு கிழக்கு நோக்கிச் செல்லும் வண்டிப் பாதைகள் அமைந்திருந்தன. எபேசுவிலிருந்து செல்லும் சாலைகள் மாநிலத்தின் எல்லா முக்கிய நகரங்களோடும் எபேசுக்குத் தொடர்பு ஏற்படுத்தின. மேலும் அந்தச்சாலைகள் மூலம் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள வணிகமையங்கள் அனைத்துடனும் எபேசுவை இணைத்தன. சுவிசேஷ ஊழியத்துக்கு மிக வாய்ப்பான இடமானது. ஏனெனில் எபேசுவில் உள்ள பணியாளர்கள் ஆசியாவின் உள்நிலப் பகுதியில் தொடர்பு வைத்துக்கொள்ள முடியும்.

எபேசுவின் சிறப்பு அம்சம், அந்த ஊரின் தெய்வமான ஆர்டிமிசின் பெரிய கோவிலே. இந்த ஆர்டிமிஸ் தான், கிரேக்கர்களுடைய ஆர்டிமிஸ் என்னும் தெய்வம் என்றும் ரோமருடைய தியானாள் என்றும் பின்னர் கூறப்பட்டது. இந்த தெய்வத்தின் சிலைக்கு பொன் முகமும் பல மார்பகங்களும் உண்டு. கால்களிருக்க வேண்டிய பகுதியில் முழுசாக ஒரு கால் மட்டுமே உண்டு.

முதல்கோவில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது. ஆனால் கி.மு. 400 வரை முடிவுறவில்லை. பின்னர் கி.மு.356ல் அது எரித்துரை மட்டமாக்கப்பட்டது. அதற்கு பதிலாக நானூற்று இருபத்தைந்துக்கு இருநூற்று இருபதடி அளவுள்ள ஒரு புதிய பெரிய அமைப்பு அமைக்கப்பட்டது. இதற்கு ஆசியா முழுவதிலிருந்து நிதியுதவி கொடுக்கப்பட்டது. இது உலக அதிசயங்களில் ஒன்றாகவும் அது பீடத்தில் வணங்க வரும் யாத்திரீகர்களின் யாத்திரை மையமாகவும் இருந்தது.

இந்தக் கோயில் ஒரு சமயத் தொழுகை மையமாக மட்டுமல்ல. அதன் அறைகளும் தரைகளும் கூடப் புனிதமானவை என்றும் பக்தி சிரத்தையுடன் பாதுகாக்கப்படவேண்டியவை என்றும் மதிக்கப்பட்டன. இது ஒடுக்கப் பட்டவர்களுக்கு அடைக்கலமான இடமாகவும் இருந்தது. மேலும் நிதிசேர்ப்புக் கருவூலமாகவும் அது பயன்பட்டது.

எபேசுவின் நாணயங்களில் அந்தக் கோவிலின் படம் காணப்பட்டது. அதனுடன் அப்போஸ்தலர் நடபடிகளில் அந்நகரத்தின் பெயராகக் குறிக்கப்பட்டுள்ள ஆர்டிமிசின் 'கோவிற் பரிசாரகி' (அப்போஸ்தல் 19:35) என்னும் பெயரும் காணப்பட்டது. பண்டைய உலகின் மாநில வணக்கத்துக்கு மாறாக ஆசியாவிலும், குறிப்பாக எபேசுவிலும் உள்ள மக்கள் எறத்தாழ பைத்தியம் என்று கூறுமளவுக்கு தேவதை பக்தி உடையவர்களாக இருந்தனர். அதன் தீவிரம் அந்த அரங்கத்தில் இரண்டு மணிநேரமாக 'எபேசியாவின் தியானாளே பெரியவள்' என்று கூக்குரலிட்டுக் கொண்டிருந்த கூட்டத்தின் செயலிலிருந்து தெரிகிறது (19:34).

எபேசு ஒரு சுதந்திர நகரம். அதற்கே உரிய அரசியலமைப்பு அதற்கு உண்டு.

ஆசியாவுக்கு ஊழியம்

நகரத்தின் தலைவர்கள் அல்லது ஆட்சிக் குழுவினர் மைய சட்ட அமைப்பாக செயல்பட்டனர். சட்டப் பிரச்சனைகள் எழும்போது அதிகாரம் நியாயசங்கத்தினிடம் (19:39) இருந்தது. பதிவேடுகளைப் பாதுகாக்கும் பொறுப்பும், காரியங்களை சங்கத்துக்கு எடுத்துரைக்கும் பணியும் பட்டணத்துச் சம்பிரதியானவனுக்குரியவை (19:35). தொழிலாளர் செல்வாக்கும் மிக அதிகமாக இருந்தது. ஏனெனில் தியானாளின் கோவிலைப் போன்று வெள்ளியினால் சிறிய கோவில்களையும் மற்றும் வெள்ளியினாலான சமயசம்பந்தமான நினைவுப்பொருட்களையும் செய்யும் வெள்ளித் தட்டார்களின் சங்கம் தான், பவுலின் சுவிசேஷப் பணி தங்கள் தொழிலைப் பாதிக்கிறதென்று அவரை எதிர்த்தார்கள்.

எபேசுவில் பல முக்கியமான பிரச்சினைகளைப் பவுல் சந்தித்தார். முதலாவது யோவான் ஸ்நானன் மரித்தபின்னரும் அவருடைய சீடர்கள் சுறுசுறுப்பாயிருந்து அவருடைய போதனைகளை உயிருடன் காத்து வந்தது. அலெக்சாந்திரியா நகரைச் சேர்ந்தவனும், கல்விமானுமான அப்பொல்லோ என்னும் யூதன் ஏற்கனவே ஆண்டவராகிய இயேசுவைப்பற்றி எபேசுவில் பிரசங்கித்துக் கொண்டிருந்தான். இவன் 'யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தான்" (அப்போஸ்தலர் 18:24,25). மேசியா வரப்போகிறார் என்பதையும், தேவனுக்கு ஊழியம் செய்ய அவர் ஏற்கனவே அபிஷேகிக்கப்பட்டிருப்பவர் என்றும் அவருடைய ஊழியத்துக்கு ஆயத்தம் செய்வதில் மனந்திரும்புதலும் விசுவாசமும் கட்டாயம் இருக்கவேண்டுமென்றும் அவனுக்குத் தெரியுமென்பதில் சந்தேகமில்லை. அவனுடைய அறிவு அரைகுறையானதேயன்றித் தவறானதல்ல.

அவன் போதுமான அளவு தூரத்துக்குப் போகவில்லை. அவன் ஜெப ஆலயங்களில் பிரசங்கித்து சில விளைவுகளையும் ஏற்படுத்தியிருந்தான்.

பிரிஸ்கில்லா, ஆக்கில்லா ஆகியோரின் போதனையின் கீழ் அவனுடைய அறிவு விரிவடைந்தது. பயன்படுத்தப்பட்டுள்ள வித்தியாசமான சொற்கள் காரியத்தை நன்கு விளக்குகின்றன. லூக்கா முதலில் 'அவன் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு (அப்போஸ்தலர் 18:25) என்று கூறுகிறார். ஆனால் பின்னர் அவர் .... ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும்...... தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" என்று கூறுகிறார். அங்குள்ள விசுவாசிகளின் சிபாரிசுடன் அவன் அகாயாவுக்கு வந்து வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம் பண்ணி இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தம் பண்ணினான் (அப்போஸ்தலர் 18:28). பின்னர் அவன் பவுலுடைய நம்பிக்கைகுரிய நண்பர்களிலும் உடன் ஊழியர்களிலும் ஒருவனானான் (1கொரிந்தியர் 16:12 ; தீத்து 3:13).

பவுல் எபேசுவுக்கு வருவதற்கு முன்னரே அப்பொல்லோ எபேசுவை விட்டுப் போய்விட்டான்.ஆனால் அவனைப் போன்றோர் இன்னும் பலர் அங்கிருந்தனர். யோவான் ஸ்நானனின் சீஷரான இந்த மனிதர் தனிப்பட்ட ஆவிக்குரிய அனுபவத்தில் ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். பவுல் அவர்களுடன் தொடர்பு கொண்ட உடனேயே அவர்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றார்களா என்று கேட்குமளவுக்கு இந்த உண்மை வெளிப்படையாகத் தோன்றுகிறது. பரிசுத்த ஆவி உண்டென்பதைத் தாங்கள் கேள்விப்படவே இல்லை என்று அவர்கள் பதிலளித்தனர்.

ஆசியாவுக்கு ஊழியம்

ஆண்டவராகிய இயேசு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான்ஸ்நானன் முன்னறிவித்திருந்ததை பார்க்கும்போது அவருடைய பேரை அவர்கள் கேள்விப்படாமல் இருந்திருக்கமுடியாது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் வாக்குத்தத்தம் நிறைவேறியதை அவர்கள் ஒருவேளை கேள்விப்படாமலிருந்திருக்கலாம். ஒரு முழுமையான கிறிஸ்தவ அனுபவத்தை உண்டாக்குவதற்கு யோவான் கொடுத்த ஞானஸ்நானம்போதுமானதல்ல என்பதே பவுலின் பதில். ஏனெனில் விசுவாசி பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்புவது மட்டுமன்றி ஆவியினால் நிரப்பப்படவும் வேண்டும். எனவே எபேசுவில் பவுல் சந்தித்த முதல் பிரச்சினை. உண்மையான ஆனால் முதிர்ச்சியற்ற விசுவாசிகளைப் பூரண நிலைக்குக் கொண்டு வருவதே.

ஆசிய ஊழியத்தின் இரண்டாவது பிரச்சினை மந்திரவாதம் மூட நம்பிக்கையும், பிசாசுகளின் ஆர்ப்பாட்டமும் ஆகும். இது எந்த அளவுக்கு அங்கு பரவியிருந்தன என்பதற்கு ஸ்கேவா என்னும் யூதனின் குமாரரான ஏழு பேர் பிசாசுகளைத் துரத்துகிறவர்களென்ற பேரில் இருந்ததும் பெயர் சொல்லப்படாத நூற்றுக்கணக்கானோர் தங்கள் மந்திரம் சம்பந்தப்பட்ட நூல்களை எரித்த சம்பவமுமே நிரூபிக்கும். இந்த பிரச்சினைக்குப் பதில் இரு வகையானது. பிசாசு விரட்டுபவர்கள். பிசாசின் மந்திரவாதம் ஆகிய அனைத்தையும் விடக் கிறிஸ்துவின் வல்லமையே மகாப் பெரியது என செயல்படுத்திக் காட்டப்பட்டது. மந்திரவித்தைகள் செய்து வந்தவர்கள் தங்கள் வழிகளின் தீமையை உணர்ந்தவர்களாகத், தாங்கள் சார்ந்திருந்த மந்திரவாத நூல்களைத் தாங்களே அழித்துப்போட்டனர் (அப்போஸ்தலர் 19:19).

எதிர்மறைப் பக்கமாகப் பார்க்கும்போது சுவிசேஷத்தின் தனித்தன்மை செயல்படுத்தப் பட்டது. ஒரு கிறிஸ்தவன் தனது கிறிஸ்தவத்தை மற்ற சமயங்களுடன் சேர்க்கமாட்டான். தனது பழைய சமயங்களை அவன் விட்டுவிட்டான். மற்றெந்த சமயத்துடனும் ஒத்துப்போகிற, சகித்துப்போகிற தன்மை கிறிஸ்தவத்துக்குக் கிடையவே கிடையாது. இந்தக் கொள்கை எபேசுவைத் தவிர வேறெங்கும் இந்த அளவுக்கு நடைமுறையில் செயலாக்கப்படவில்லை.

எபேசுவில் பவுல் செய்த ஊழியம் குறிப்பிடத்தக்க அளவு சிறந்த விளைவுகளைக் கொடுத்தது. ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக (19:8,10) முதலில் ஜெப ஆலயத்திலும் பின்னர் திறனு என்பவனுடைய பள்ளியிலும் (19:9) அவர் தடையின்றி அவர் பிரசங்கிக்க முடிந்தது. சிறப்பான அற்புதங்களை அவர் நடப்பித்தார் (19:11). வேறெங்கும் இல்லாத அளவுக்கு, எபேசுவிலும் ஏன் அந்த மாநிலம் முழுவதிலுமே உள்ள மக்களனைவரையும் அவர் சந்தித்தார். லூக்கா......"ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்" என்று கூறுகிறார் (19:10). மேலும் "இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது" என்றும் (19:20) அநேகர் விசுவாசித்ததால் விக்ரக ஆராதனைக்குப் பொருளாதார நஷ்டம் ஏற்பட்டது என்றும் (19:26,27) அவர் கூறுகிறார். எபேசு திருச்சபை ஒரு மிஷனெரி மையமானது. மேலும் ஆசியாமைனரில் பல நூற்றாண்டுகளாககிறிஸ்தவத்தின் ஒரு உறுதியான இடமாக அது இருந்தது.

கொரிந்திய நிருபங்கள்

பவுல் எபேசுவில் தங்கியிருந்தபோது முந்தின பயணத்தில் தாம் ஸ்தாபித்த அகாயாவின் திருச்சபைகளுடன் கொண்டுள்ள உறவை விட்டுவிடாமல்காத்துக்கொண்டார். கொரிந்து திருச்சபை, அதனுடைய நிலைபற்ற தன்மை காரணமாக அவருக்குத் தீராத பிரச்சினையாக இருந்தது. கொரிந்து திருச்சபையில் பெரும்பாலும் புறஜாதியினரே இருந்தனர். அவர்களுக்குப் பழைய ஏற்பாட்டு வேதாகமத்தில் எந்தப் பயிற்சியும் கிடையாது. கிறிஸ்தவர்களாவதற்கு முன்னர் அவர்களுடைய சமய நன்னெறிகள் கிறிஸ்தவக் கொள்கைக்கு நேர் எதிர்மாறானவை. இதன் காரணமாக அவர்களை ஆவிக்குரிய முதிர்ச்சி நிலைமைக்குக் கொண்டுவர நிறைய உபதேசங்கள் தேவையாயிருந்தது (1கொரிந்தியர் 3:1-3).

அவர்களிடையே அப்பொல்லோ செய்திருந்த ஊழியம் பல வழிகளில் உதவியாயிருந்தது. தன்னுடைய கல்வியின் மூலமாகவும், உண்மைகளை மெருகேற்றிக்கூறும் தன் திறமையினாலும் அநேக கொரிந்தியரை அவர் கவர்ந்திருந்தான். யூதர்களுடன் பழகிப் பணியாற்ற அவன் சிறப்பாகப் பயனுடையவனாயிந்தான். ஏனெனில் அவன் பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்தவன். அத்துடன் கேட்பார். வியக்கும் விதத்தில் பகிரங்கமாக விவாதிக்கக்கூடியவன் (அப்போஸ்தவர் 18:27, 28). அவனுடைய ஊழியத்தை உணர்ந்து ரசித்து பவுல் அவனைப் பாராட்டினார் (1கொரிந்தியர் 16:12).

கொரிந்துவில் பேதுருவின் ஊழியத்தைக் குறித்து எதுவும் கூறப்படவில்லையெனிலும் அவரும் கொரிந்து பட்டணத்துக்கு வந்திருக்கக்கூடும். பவுல், கொரிந்தியர்கள் பேதுருவை அறிந்திருந்தனர் (1கொரிந்தியர் 1:12) என்றும், அவரும்கூட இடைபராத ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்றும் (1கொரிந்தியர் 9:5) குறிப்பிடுகிறார்.

பேதுரு தாமே அந்தச் சமயம் நேரடியாகக் கொரிந்தியருடன் தொடர்பு கொண்டிருந்திராவிடில் கொரிந்தியத் திருச்சபையில் ஒரு பகுதியினர் தாம் கேபாவை (பேதுருவைச்) சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ள முடியாது.

காணாமற் போன கடிதம்

அப்பொல்லோவும், அநேகமாக அவருடன் கேபாவும் கொரிந்துவுக்குச் சென்று பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது பவுல் பாலஸ்தீனாவுக்குத் திரும்பி வந்து அங்கிருந்து எபேசுவுக்குச் செல்லும் பயணத்தில் ஈடுபட்டிருந்திருக்கவேண்டும். இந்தக் கால கட்டத்தில் அல்லது எபேசுவுக்குத் திரும்பி வந்ததும் பவுல் ஒரு கடிதம் எழுதினார். இந்தக் கடிதத்தைப் பற்றி 1கொரிந்தியா 5:9ல் “விபச்சாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்” என்று குறிப்பிடுகிறார். திருச்சபை உயிரோடு பிழைத்திருக்க வேண்டுமாயின் தீமையை விட்டு முற்றுமாய் விலகியிருக்க வேண்டுமென்று கூறுமளவுக்கு கொரிந்து பட்டணத்தின் நடத்தைபற்றிய சூழ்நிலை அமைந்திருந்தது. அவருடைய போதனைகள் பற்றி ஏதோ தவறான புரிந்து கொள்ளுதல் இருந்திருக்கவேண்டும். ஏனெனில் 1கொரிந்தியரில் உலகத்தை விட்டு ஒதுங்கியிருக்க வேண்டுமென்று தாம் சொல்லவில்லை என்பதாக அவர் குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு தொடர்ந்து பாவத்தில் ஜீவிப்பவர்களை விட்டு விலகியிருந்துதானாக வேண்டும்.

அந்த முந்தின கடிதம் காணாமற்போய் விட்டதால் அதில் எழுதப்பட்ட காரியங்கள் அனைத்தும் ஒருபோதும் அறியப்படாமலே போய்விட்டது.

கொரிந்திய நிருபங்கள்

காணாமற்போன கடிதத்தின் சிலபகுதிகள் கையெழுத்துப் பிரதிகளாகப் பாதுகாத்து கொரிந்துவில் வைக்கப்பட்டுள்ளன. 1கொரிந்தியர் 6:12-20, 2கொரிந்தியர் 6:14-7:1 ஆகிய பகுதிகள் அந்தக் கடிதத்தின் ஒரு சில பகுதிகள் ஆகும். இவை பிந்திய நிருபங்களுக்குள் புகுத்தப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன என்றும் ஒரு புதுமையான கொள்கை வழங்கப்படுகிறது. இந்தக் கொள்கை தனிப்பட்ட சொந்தக் கருத்தையே பொறுத்துள்ளது. அது எவ்வளவு தான் ஏற்றுக்கொள்ளத் தக்கதாய்த் தோன்றினாலும் அதை நிரூபிக்க வெளிப்படையான ஆதாரங்கள் இல்லை. புறஜாதி உலகெங்கிலும் இருந்தது போல நடத்தை சுத்தமே கொரிந்துவில் மிக முக்கியமான பிரச்சினையாயிருந்தது. ஆரம்ப காலத்தில் பவுல் தீர்க்கவேண்டிய பிரச்சினைகளில் இதுவும் ஒன்றாக இருந்தது.

1கொரிந்தியர்

முதல் நிருபத்தின் விளைவு திருப்திகரமானதாக இல்லை. அப்பொல்லோவும் கேபாவும் வேறு பணித் தளங்களுக்குச் சென்று விட்டனர். எனவே போதுமான தலைவர்கள் இல்லாத நிலையில் திருச்சபை குழப்பத்தில் விழுந்தது. கொரிந்துவிலிருந்து வியாபார விஷமாய் எபேசுவுக்கு வந்த ஒரு குடும்பத்தின் அடிமைகள் மூலம் திருச்சபையைக் குறித்து அமைதியைக் கெடுக்கும் வதந்திகள் எபேசுவுக்கு வரலாயின. இறுதியாக பவுலுக்குக் காணிக்கையையும், கொரிந்தியர்கள் விளக்கம் பெற விரும்பிய கேள்விகள் சிலவற்றையும் எடுத்துக்கொண்டு ஸ்தேவான்......பார்சுனோடஸ், அகாய்க்ஸ் எனப்படும் திருச்சபையின் உறுப்பினர் மூவர் பவுலிடம் வந்தனர். அந்தக் கடிதத்துக்குப் பதிலாக பவுல் 1கொரிந்தியரை எழுதினார்.

இது, அவர் எபேசுவில் தங்கியிருந்த காலத்தின் இறுதியில் எழுதப்பட்டது. ஏனெனில் ஆசியாவை விட்டுப் புறப்படுவதற்கும் மக்கெதோனியாவுக்கும் அகாயாவுக்கும் செல்வதற்கும் அவர் ஏற்கனவே திட்டங்கள் வகுத்துவிட்டார் (1கொரிந்தியர் 16:5-7). அது குளிர்காலத்தில் அல்லது இலையுதிர் காலத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டும் - ஏனெனில் தமது பணியின் வெற்றியின் காரணமாக (1கொரிந்தியர் 16:8) பெந்தெகொஸ்தே வரைக்கும் எபேசுவில் தங்கப்போவதாகக் கூறினார். அவர் எருசலேமின் எளியவர்களுக்கு உதவி செய்வதற்காக நிதி திரட்டிக் கொண்டிருந்தார். அந்நகரத்துக்கு இறுதி முறையாக அவர் சென்றபோது அந்த நிதியைக் கொண்டு சென்றார் (அப்போஸ்தலர் 24:17). அவர் பாலஸ்தீனாவுக்கு விரைவில் திரும்பி விட எண்ணினார். அநேகமாக இந்த மடல் கி.பி.55ன் குளிர் காலத்தில் எபேசுவில் அவருடைய பணி வளம் பெற்றோங்கி இருக்கும்போது எழுதப்பட்டிருக்கும்.

பவுலின் எல்லா நிருபங்களையும் விட 1கொரிந்தியர் பொருளடக்கத்திலும் மொழி நடையிலும் மிகவும் வேறுபட்டுள்ளது. கொள்கைப் பிரிவினையிலிருந்து நிதி நிலைமை வரையில், திருச்சபையின் ஒழுங்கு முறையிலிருந்து உயிர்த்தெழுதல் வரை விதவிதமான தலைப்புகள் இதில் விவாதிக்கப்படுகின்றன. எழுத்துலகில் உள்ள எல்லா இலக்கிய முறைகளும் அதன் பக்கங்களின் பயன்படுத்தப் பட்டுள்ளன.காரண காரியத்தோடு பேசும் அறிவியல், எள்ளி நகையாடுதல், வேண்டிக் கொள்ளுதல், வசை, செய்யுள், கதைபோல் உரைத்தல், விளக்கம் கூறுதல் ஆகிய எல்லா முறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன. சுருக்கக் கூறின் கொரிந்து சபையின் மூப்பர்கள் நேரில் இருந்தால் பவுல் எவ்வாறு அவர்களுடன் உரையாடுவாரோ அதே நடையிலேயே இந்த நிருபம் எழுதப்பட்டுள்ளது. இறையியல் சம்பந்தமான காரியங்களைப் பற்றிய ஒரு கட்டுரைத் தொகுப்பாக இராமல் முழுக்க முழுக்க சாதாரண பேச்சு நடையிலேயே இது எழுதப்பட்டுள்ளது. ஏனெனில் ஒரு மையக் கருத்தும் இதில் உண்டு.

கொரிந்திய நிருபங்கள்

பின்னாலே அதை 'சமுதாயத்தில் பயன்படுத்தக்கூடிய நிலையில் சிலுவையின் கொள்கை' என்று அழைக்கப் படுகிறது. கிறிஸ்தவ அனுபவமும், கிறிஸ்தவ நடத்தைக்குரிய கருத்துக்களும் புறஜாதி உலகின் கொள்கைகள் அல்லது நடைமுறைகளுடன் மோதும் போது உண்டாகிற போராட்டத்தை இது எதிரெலிக்கிறது. இதில் விவாதிக்கப்பட்டிருக்கிற பிரச்சினைகள் என்றோ நடந்தவை அல்ல. கிறிஸ்தவர்கள் புறஜாதி நாகரிகத்தை சந்திக்கும் இடங்களிலெல்லாம் அவை காணப்படுகின்றன.

1கொரிந்தியர்: கொரிந்துவிலுள்ள பிரச்சினைகள்

1. வாழ்த்துதல் 1:1-9

2. குலோவே வீட்டாரிடமிருந்து வந்த அறிக்கைக்குப் பதில் 1:10-6:20

குழுக்களின் சண்டை 1:10-3:23

பவுலின் ஊழியத்துக்கு சாதகமாகப் பேசுதல் 4:1-21

துன்மார்க்கத்தை விமரிசித்தல் 5:1-13

வழக்குகளை விமரிசித்தல் 6:1-11

ஒழுங்கற்ற நடத்தைக்குப் பதில் 6:12-20

3. கடிதத்தில் உள்ள கேள்விகளுக்குப் பதில் 7:1-16:9

திருமணம் 7:1-24

கன்னியர் 7:25-40

விக்ரகங்களுக்கு பலியிடப்பட்டவை 8:1-11:1

விக்ரகங்களினால் மதிப்பீடு செய்யப்படுதல் 8:1-13

சுதந்திரத்தால் மதிப்பீடு செய்யப்படுதல் 9:1-27

தேவனுடன் உள்ள உறவினால் மதிப்பீடு செய்யப்படுதல் 10:1-22

மற்றவர்களுடன் உள்ள உறவினால் மதிப்பீடு செய்யப்படுதல் 10:23-11:1

தொழுகை பற்றிய பிரச்சினைகள் 11:2-34

முக்காடிட்டுக் கொள்ளுதல் 11:2-16

கர்த்தரின் பந்தி 11:17-34

ஆவிக்குரிய வரங்கள் 12:1-14:40

சரீரம் உயிர்த்தெழுதல் 15:1-58

காணிக்கை சேகரித்தல் 16:1-9

4. முடிவான வாழ்த்துதல்கள் 16:10-24

கொரிந்துவிலிருந்து வந்தவர்கள் பவுலின் கவனத்துக்குக் கொண்டு வந்த விஷயங்களின் வரிசையின் படியுமே 1கொரிந்தியரின் அமைப்பு அமைந்துள்ளது. அப்பொல்லோவினாலும், காணிக்கைப் பணத்தைக் கொண்டுவந்த மூவராலும் எவ்வளவு விஷயங்கள் சொல்லப்பட்டன,

கொரிந்திய நிருபங்கள்

என்பது கூறப்படவில்லை. திருச்சபைக்குள்ளே பிரிவினைகள் உண்டென்பதைக் குறித்தும் அமைதியைக் கெடுக்கும் துன்மார்க்கமும் வழக்குகளும் இருப்பதைக் குறித்தும் 'குலோவே வீட்டார்' (1:11) மூலம் அறிந்ததாக பவுல் நேரடியாகக் கூறுகின்றார். இவைகளைப் பற்றி முதல் ஆறு அதிகாரங்களில் விரிவாகப் பேசினார். ஏழாவது அதிகாரம் முதல் ஒரு புதிய பகுதி தோன்றுகிறது. "நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து......" தொடர்ந்து திரும்பத்திரும்ப வரும் சொற்கள் அவர்கள் எழுதிக் கேட்ட கேள்விகளுக்கு அவருடைய பதிலில் உள்ள துணைப் பிரிவுகளைக் குறிக்கின்றன *(7:25; 8:1 (11:2) 12:1, (15:1); 16:1.*

புதிய ஏற்பாட்டின் மற்றெந்தப் பகுதியையும் விட 1கொரிந்தியர் வளர்ந்துவரும் ஒரு புதிய திருச்சபையின் பிரச்சினைகள் பற்றி மிகச் சிறந்த ஒரு பார்வையைக் கொடுக்கிறது. ஒவ்வொரு பிரச்சினையும் ஒரு மனோதத்துவப் பயிற்சியை விட மேலானது. ஒரு ஆவிக்குரிய கொள்கைகளைக் கொண்டு சந்திக்கப் பட்டுள்ளது. பிரிவினைகளுக்கு ஆவிக்குரிய முதிர்ச்சியே மருந்து *(3:1-9)*. விபசாரத்துக்கு - தவறிழைத்தவன் தன் தவறை உணர்ந்து மனந்திரும்பித் திரும்புமளவும் சபையின் ஒழுங்குக் கட்டுப்பாடு மருந்தாகிறது *(5:1-5)*. ஒழுங்கற்ற தன்மைக்கு, கிறிஸ்தவ சமுதாயத்தில் சீரான கட்டுப்பாடு இருந்தாக வேண்டுமென்பதே பதில் *(6:1-6)*. ஒரு விசுவாசிக்கும் அவிசுவாசிக்குமிடையே திருமணம் நடைபெறுமாயின் விசுவாசியின் அக்கறை அவிசுவாசியை இரட்சிப்பதில் இருக்க வேண்டுமேயன்றி, அவனை அல்லது அவளைப் பகைக்கக் கூடாது *(7:16)*. திருமணமாகாத கன்னியருக்கு சுயகட்டுப்பாடு அல்லது சட்டப்படியான திருமணம் *(7:36,37)*.

விக்ரகத்துக்கு படைக்கப்பட்டதை உண்ணும் தொழுகை பற்றிய விவரங்களுமான மனசாட்சி பற்றிய கேள்விகளுக்கு அதைத் தீர்மானிக்க வேண்டியது விசுவாசி, தேவனுடன், கொண்டுள்ள உறவுதான் *(10:31; 11:13,32)*. அதேபோல் சபைக்குள் வரங்களும் தேவனாலேயே அருளப்படுகின்றன *(12:28)*.

தற்காலக் கிறிஸ்தவர்களைத் திகைக்க வைக்கக்கூடிய சபையின் வாழ்க்கைமுறை, செயல்கள் பற்றி 1கொரிந்தியரில் கூறப் பட்டுள்ளது. ஏழாம் அதிகாரத்தில் கன்னியரின் அந்தஸ்து பற்றி சொல்லப்படும்போது இடம்பெறுகிற 'புத்திரி' என்னும் சொல் மூலநூலில் இல்லை *(7:36-38)*. சபை ஒழுங்கில் 'சாத்தானுக்கு ஒப்புக்கொடுப்பதும்' *(5:5)* மரித்தோர்களுக்காக ஞானஸ்நானம் பெறுவதும் *(15:29)* ஆகிய காரியங்கள் பற்றி எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை. இவையெல்லாம் பவுலும் அவருடைய வாசகர்களும் நன்கறிந்தவைகள். அவைகளைக் குறிப்பிட்டிருப்பதால் அவை பரவலாக நடைபெற்று வந்த விஷயங்கள் என்று கூறமுடியாது. மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெறுவதுகூட கொரிந்தியத் திருச்சபையிலே பின்பற்றப்பட்டு வந்த வழக்கமாக இருந்திருக்கலாம். ஆனால் அது அங்கீகரிக்கப் பட்டதாகத்தானிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உயிர்த்தெழுதல் பற்றிய தன் விவாதத்துக்கு ஆதாரவாகப் பவுல் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசியிருக்கக்கூடும்.

1கொரிந்தியர் தீமோத்தேயுவின் மூலமாக அது சேரவேண்டிய இடத்துக்குக் கொடுத்தனுப் பட்டது *(16:10)*. சபையின் பிரச்சினைகளைச் சரியாக்கும் பொறுப்பைப் பவுல் அப்பொல்லோ ஏற்றுக்கொள்ளும்படி செய்ய நினைத்தார். ஆனால் அப்பொல்லோ மறுத்துவிட்டார். தான் அங்கு இருப்பதே விசுவாசிகளுக்கிடையே இன்னும் அதிகப் பிரச்சினையையே உண்டாக்கும் என்று அவர் எண்ணியிருக்கலாம். தீமோத்தேயுவின் திறமையைக் குறித்துச் சில தவறான கருத்துக்கள் பவுலுக்கு இருந்தன. ஏனெனில் அவனை பயப்படுத்திவிடக் கூடாதென்றும், அற்பமாய் எண்ணக் கூடாதென்றும் அவர் கொரிந்தியரிடம் கேட்டுக் கொண்டார் *(16:10,11)*.

கொரிந்திய நிருபங்கள்

தீமோத்தேயுவின் ஊழியத்தின் விளைவைப் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. ஆனால் அது தோல்வி அடைந்தது போலத் தோன்றுகிறது. 2கொரிந்தியரில் பவுல் இரண்டு முறை தமது திட்டங்களைக் குறித்துப் பேசினார். "இதோ உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்......" (2கொரிந்தியர் 12:14, 13:1) அவர் கொரிந்துவுக்குச் சென்ற முதல் பயணத்தில் திருச்சபையை ஸ்தாபித்ததினாலும், அவர் கொரிந்துவுக்கு வருவதற்காக எபேசுவில் காத்திருந்து விட்டு, அங்கிருந்து புறப்பட்ட பின் மக்கெதோனியா விலிருந்து அக்கடிதம் எழுதப்பட்டபடியினாலும், தீமோத்தேயு வந்ததற்கும் பவுல் ஆசியாவுக்குப் புறப்பட்டதற்குமிடையில் ஏதோ ஒரு கால கட்டத்தில் பவுல் கொரிந்துக்கு சென்றது பதிவு செய்யப் படாமலிருந்திருக்க வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகளில் அப்படி ஒரு பயணத்தை லூக்கா பதிவு செய்யவில்லை. இது போன்ற சுவாரஸ்யமான, அல்லது முக்கியமான இன்னும் பல சம்பவங்களையும் அவர் எழுதாமல் விட்டிருக்கிறார். 2கொரிந்தியரை ஆராய்ந்தால் தீமோத்தேயு செய்ய முடியாமல் விட்டுவிட்ட காரியத்தை செய்து முடிக்கப் பவுல் கொரிந்துக்குச் சென்றார் என்பது சந்தேகமின்றித் தெளிவாகிறது. மேலும் அவர் அங்கிருந்த போது பயங்கரமாக அவமானப் படுத்தப்பட்டார் என்பதும் அவருடைய ஆலோசனை நிராகரிக்கப்பட்டுவிட்டது என்பதையும் அது காட்டுகிறது. போட்டியாக, எழுந்த சுயமான நடைமுறைப் பழக்கங்களை உடைய 'அப்போஸ்தலர்' கொரிந்துவுக்கு வந்து திருச்சபைக்கு முன்பாகப் பவுலை தாழ்த்தி விட்டனர். அவர்கள் தங்களது யூதப் பாரம்பரியத்தைப் பற்றியும், கிறிஸ்துவின் ஊழியர்களாகத் தாங்கள் செய்யும் பணியைப் பற்றியும் பெருமை பாராட்டிக் கொண்டு திருச்சபைகளிலிருந்து ஆதரவு பெற்று வாழ்ந்து கொண்டிருந்தனர் (2கொரிந்தியர் 10,11)

மேலும் இவ்வாறு திருச்சபைக்குப் பங்கம் விளைவிக்கும் உறுப்பினர்கள் திட்டமாக மனந்திரும்பாத வர்களாகவுமிருந்தனர். (12:21) எனவே ஒரு இறுக்கமான சூழ்நிலை நிலவியது.

திருச்சபை தனது வழியை சீர்படுத்திக் கொண்டு சரியான பாதையில் செல்லும்வரை தாம் மறுபடியும் கொரிந்துவுக்கு வரக் கூடாதென்று பவுல் தீர்மானித்துக் கொண்டார். (1:23) அகாயாவில், எருசலேமுக்காக ஓரளவு நிதி திரட்டலாம் என்று அவர் நம்பினார். தனது ஆரம்பத் திட்டத்தை செயல்படுத்தும் முகமாக மக்கெதோனியாவுக்கும் அகாயாவுக்கும் போகத் தீர்மானித்து திருச்சபையைக் கவனிக்கும்படி தீத்துவை முன்னால் அனுப்பிவிட்டு எபேசுவில் பணியை முடித்துக் கொண்டு மேற்கு வழியாகத் துரோவாவுக்குச் சென்றார்.

ஒரு வேளை பவுல் இந்தச் சமயத்தில் மறுபடியும் ஒரு முறை கொரிந்துவுக்கு எழுதியிருக்கலாம். 2கொரிந்தியர் ஒரே ஒரு நிருபம் தானா அல்லது இரண்டு நிருபங்கள் இணைந்ததா என்ற சந்தேகம் உண்டு. 2கொரிந்தியர் 2:4ல் கொரிந்தியருக்குத் தாம் அவர்கள் மீது கொண்டுள்ள அன்பை உணர்த்துவதற்காக 'மிகுந்த கண்ணீரோடு, தாம் எழுதின ஒரு நிருபத்தைப் பற்றிப் பவுல் குறிப்பிட்டுள்ளார். 1கொரிந்தியர் இந்த வருணனைக்குப் பொருத்தமானதாக இல்லை. 2கொரிந்தியர் அதைத் தொடர்ந்து எழுதப்பட்டது. பல அறிஞர்கள் 2கொரிந்தியர் 10 முதல் 13 வரையுள்ள அதிகாரங்கள் மூன்றாவது நிருபமாக இருக்கலாமென்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இது 1கொரிந்தியருக்கும், 2கொரிந்தியர் 1 முதல் 9 அதிகாரங்களுக்குமிடையில் எழுதப்பட்டிருக்கு மென்றும், தனக்கு ஆதரவாக இதனை எழுதிய பவுல், திருச்சபைக்கு இதனைத் தீத்துவின் கைவசம் கொடுத்தனுப்பினாரென்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

கொரிந்திய நிருபங்கள்

ஏனையோர் இடையில் எழுதப்பட்ட அந்தத் துயரமான நிருபம் காணாமற் போயிருக்கக் கூடும் என்று எண்ணுகின்றனர். முதல் கடிதத்தைப் போலவே 2கொரிந்தியரையும் பிரிப்பதற்கு சரியான வெளிப்படையான ஆதாரங்கள் இல்லை. பவுலின் நிருபங்களின் ஒவ்வொரு கையெழுத்துப் பிரதியும் அப்படியே உள்ளன. எனவே கையெழுத்துப் பிரதிகளில் வேறுபாடு என்று காரணம் காட்டி இதன் உண்மையை சந்தேகிக்க முடியாது. 10 முதல் 13 அதிகாரங்கள் மூன்றாவதான ஒரு நிருபத்தையும், 1 முதல் 9 வரையுள்ள அதிகாரங்கள் நான்காவதானதொரு நிருபத்தையும் குறிப்பதாயின் உண்மையில் மூலப் பிரதியில் எந்த ஒரு பிரிவின் அடையாளமும் காணப்படவில்லை.

எபேசுவை விட்டுப் புறப்பட்டு துரோவாவை அடைந்த போது அவர் தீத்துவை ஆவலுடன் எதிர்பார்த்தார். ஆனால் தீத்து வரவில்லை. (2:12,13). கொரிந்துவில் நடந்திருக்கக்கூடிய காரியங்களினால் ஏற்பட்ட கவலையினால் துன்புற்றவராக மக்கதோனியாவுக்குச் சென்றார். அங்கு அவருடைய துன்பங்கள் பெருகின (2கொரிந்தியர் 7:5) அவர் அங்கு உழைத்துக் கொண்டு மக்கெதோனியா திருச்சபைகளிடமிருந்து எருசலேமுக்கு உதவிகள் பெற ஒழுங்கு செய்து கொண்டிருந்த போது திடீரென்று தீத்து வந்து சேர்ந்தார். கொரிந்தியத் திருச்சபையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதன் கவலையும், அழுத்தமும் மாறி மனந்திரும்புதல் ஏற்பட்டிருக்கிறது என்னும் நல்ல செய்தியை தீத்து கொண்டு வந்தார். மகிழ்ச்சியுடன் அமர்ந்து சந்தோஷமான விளைவைத் தரும் என்று நாம் நம்புகிற மூன்றாவது பயணத்துக்கு ஆயத்தமாக 2கொரிந்தியரை பவுல் எழுதினார். இந்த நிருபம் முழுவதும் இந்த சமயத்தில் எழுதப்பட்டிருக்குமெனில், தனது ஊழியத்துக்கு ஆதரவாக ஒரு நீண்ட பகுதியை சேர்த்து எழுதியிருக்கிறார். (2:14-7:4) அத்துடன் மக்கெதோனியர் எருசலேமுக்கு நிதி உதவி செய்தது போல, கொரிந்தியரும் அவர்களுடைய உடனூழியர்களான அகாயா திருச்சபையினரும் செய்ய வேண்டுமென்றும் அவர் வேண்டிக் கொண்டிருக்கிறார் (8,9 அதிகாரங்கள்)

2கொரிந்தியர்

தத்துவ உபதேசங்களைப் பற்றியோ, இறையியல் ஒழுங்கு பற்றியோ, பேசாமல் தனிப்பட்ட விஷயங்களைப் பேசுவதில் இது 1கொரிந்தியரிலிருந்து வேறுபடுகிறது. பவுல் என்னும் மனிதன் இங்கு அதிகமாகக் காட்டப்படுகிறார். அவருடைய உணர்வுகள், விருப்பங்கள், வெறுப்புகள், குறிக்கோள்கள், சலுகைகள் எல்லாம் அவருடைய வாசகர் முன் விரித்து வைக்கப்படுகின்றன. இந்த நிருபம் 1கொரிந்தியரைவிடக் குறைவு அளவு ஒழுங்கான போதனைகளும் அதிக அளவு தனிப்பட்ட உணர்வுகளின் வெளிப்பாடும் கொண்டுள்ளது. முந்தின நிருபத்தைப் போலவே இதன் வடிவமைப்பும் தெளிவாக வடிவமைக்கப்பட்டதாக இல்லை.

2 கொரிந்தியர்: பவுலின் ஊழியம் பற்றிய நிருபம்

1 வாழ்த்துதல் 1:1,2	
2 சுய நடத்தைக்கு விளக்கம்	1:3-2:12
3 ஊழியத்துக்கு தற்காப்பு விவாதம்	2:14-7:4
ஊழியத்தின் இயல்பு	2:14-3:18
ஊழியத்தின் உண்மை	4:1-6
ஊழியத்தின் விடாமுயற்சி	4:7-15

கொரிந்திய நிருபங்கள்

ஊழியத்துக்கு வாய்ப்புகள்	4:16-5:10
ஊழியத்துக்கு சலுகைகள் ஒத்துக்கொள்ளப்படுதல்	5:11-19
ஊழியத்துக்கு எடுத்துக்காட்டு	5:20-6:10
ஊழியத்தின் விண்ணப்பம்	6:11-7:14
4 நிருபத்தின் விளைவின் மீதான விமர்சனம்	7:5-16
5 கொடுப்பதில் உள்ள கிருபை	8:1-9:15
6 சுய தற்காப்பு	10:1-12:13
7 பயணத்துக்கு ஆயத்தம்	12:14-13:10
8 இறுதி வாழ்த்து	13:11-14

பவுலின் பணிக்குள் சென்று நோக்குகிற ஒரு வாய்ப்பை 2கொரிந்தியர் நிருபம், வேறு எந்த நிருபமும் அளிக்காத வகையில் அளிக்கிறது. கொரிந்தியத் திருச்சபை அவ்வப்போது அவரை விமர்சிக்க விமர்சனங்களுக்கு எதிராக மட்டுமன்றி எங்கெல்லாம் அவர் பிரசங்கித்தாரோ அங்கெல்லாம் அவருடைய பகைவர்கள் அவர் மீது காட்டும் குற்றச்சாட்டுகளுக்கும் பழிச்சொற்களுக்கும் எதிராகவும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இந்த நிருபம் எழுதப்பட்டது. கலாத்தியாவில் எழுந்த முரண்பாடு பவுலுக்கு எதிராக ஆற்றல் மிக்க யூத சமயத்தைச் சேர்ந்த எதிரிகள் கூட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தது. இவர்கள் பவுலை கேவலப்படுத்துவதற்கு நல்லதோ கெட்டதோ எந்த முறையையும் எடுத்தாளத் தயங்காதவர்கள்.

ஆவிக்குரிய செயலற்ற நிலையுடன் மட்டுமன்றி பாரம்பரிய புறமதத்தின் தீமைகளுடனும் அவர் போராட வேண்டியிருந்தது. மேலும் அவர் பொறாமையின் தீங்கையும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பட்சபாத நோக்குக் கொண்ட தலைவர்களையும் அவர் சந்திக்க வேண்டியதாயிற்று.

அவருடைய எதிரிகளால் கொண்டுவரப் பட்ட குற்றச்சாட்டுகள் ஏராளம். அவர் 'மாம்சத்தின் படி நடக்கிறவர்' என்று அவரைக் குறை கூறினார்கள். அவர் இடி முழக்கம் போன்ற கடிதங்கள் எழுதினாலும் நேரில் பார்க்கும்போது எலிபோன்று பலவீனமானவர் என்றும் அதனால் அவர் ஒரு கோழை என்றும் அவர்கள் கூறினார்கள். (10:10) திருச்சபைகளிலிருந்து உதவி பெற்றுக் கொண்டு கௌரவமாக வாழ்க்கை நடத்தாமல் தம்முடைய ஜீவனத்துக்காக வேலை செய்து தம்மைத்தாமே கேவலப்படுத்திக் கொண்டார் (11:7) அவர் ஆரம்ப (மூல) அப்போஸ்தலர்களில் ஒருவரல்ல எனவே உபதேசிக்கும் தகுதி அவருக்கு இல்லையென்றார்கள் (11:5,12:11,12) அவர் பெருமையுடன் காட்டிக் கொள்ளக் கூடிய பெருமைகள் ஏதும் அவருக்கு இல்லை என்றுரைத்தனர். அவர் மாம்சத்தின்படி நடப்பவர் என்றும் (10:2) பெருமை பேசுபவரென்றும் (10:8,15) தந்திரக்காரரென்றும் அவருடைய நடத்தையைக் குற்றம் சாட்டினார்கள். அவரிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பணத்தை அவர் கையாடல் செய்ததாகவும் அவர்மேல் குற்றம் சாட்டினார்கள் (8:20-23)

குற்றம் சாட்டியவர்கள் அநேகமாக யூதர்களே. (11:22) அவர்கள் 'கிறிஸ்துவின் ஊழியக்காரர்' (11:23) மற்ற திருச்சபைகளிலிருந்து சிபாரிசுப் பெற்றுக் கொண்டு அதை புத்திசாலித்தனமாக பயன்படுத்திக் கொண்டு பவுல் நிறுவின திருச்சபைக்குள் புகுந்து விட்டவர்கள் இவர்கள் (3:1)கொரிந்து சபையில் பாகுபாடுகளும் பிரிவினைகளும் உண்டானதில் இவர்களுக்கும் பொறுப்பு உண்டு என்பதில் சந்தேகம் இல்லை

கொரிந்திய நிருபங்கள்

அவர்கள் கர்வம் உடையவர்களாகவும் கைபோங்கி நிற்கும் இயல்புடையவர்களாகவும் இருந்தனர் (11:19,20) ஆரம்பப் பணிகளைச் செய்யவோ அல்லது கிறிஸ்துவுக்காகத் துன்பங்களை அனுபவிக்கவோ அவர்கள் தயாராக இல்லை (11:23) சுருங்கக் கூறின் அவர்கள் 'கள்ளச் சகோதரர்'.

பவுலின் வார்த்தைகளைக் கொண்டு வரையப்பட்ட இந்தப்படம் அப்போஸ்தலர் காலத் திருச்சபையில் போராட்டங்களும் பாவங்களும் இருந்தன. அது குறையுள்ளதாக இருந்ததில் வியப்பேதுமில்லை. அது ஜீவித்திருந்தது தான் வியப்புக்குரியது. கொரிந்து திருச்சபை போன்ற பெலவீனமான மாம்ச சிந்தையுடைய திருச்சபை இதையெல்லாம் தாங்கிக் கொள்ள பெலன் பெற்றிருக்க வேண்டுமெனில் ஒரு தெய்வீக ஆற்றல் அதற்குக் கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

இந்த நிருபத்தின் எதிர் மறையற்ற போதனைகள் புதிய ஏற்பாட்டின் மிகுந்த விலைமதிப்புடைய நூல்களில் இதையும் ஒன்றாக்குகின்றன. ஊழியத்தைப் பற்றி இது தருகிற காட்சி மரணத்துக்குப்பின் உள்ள வாழ்வைப் பற்றி இந்நூல் எடுத்துரைக்கும் சத்தியங்கள் (5ம் அதிகாரம்) கொடுப்பதைப் பற்றி இந்நூல் தரும் போதனைகள் (8,9 அதிகாரங்கள்) இவை அனைத்துமே மிகச் சிறப்பான பகுதிகளாகும்.

கொரிந்துவுக்குக் கடைசிப் பயணம்

கொரிந்தியத் திருச்சபையின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தீத்து கொண்டுவந்த செய்தியினால் (2கொரிந்தியர் 7:6-16) ஊக்கமடைந்தார் பவுல். எனவே அந்தச் செய்தி அவர் தம் பயணத்தைப் பயமின்றித் தொடங்கும்படி செய்தது. அவர் அகாயாவில் மூன்று மாதங்கள் தங்கினாரென்று மட்டுமே லூக்கா சொல்கிறாரேயன்றி விபரங்களேதும் தரவில்லை. அவருடைய யூதப் பகைவரால் அவருடைய ஜீவனுக்கெதிராகச் சதித்திட்டம் தீட்டப்படுகிறது என்பதை அவர் அறிந்தார் (அப்போஸ்தலர் 20:3) அப்போது கிபி56ன் வசந்த காலத்தில் காணிக்கையுடன் எருசலேமுக்குத் திரும்ப அவர் திட்டமிட்டார். கப்பலில் அவர்கள் அவரை எளிதாகக் கொலை செய்துவிட முடியும் என்று அவர் உணர்ந்தார். எனவே தமது நண்பர்களைத் துரோவாவுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் லூக்காவுடன் தரை மார்க்கமாக வடக்கே பிலிப்பிக்குச் சென்றார். பஸ்காப் பண்டிகையை அடுத்து வரும் புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் இறுதியில் பிலிப்பியிலிருந்து துரோவாவுக்குக் கடல் மார்க்கமாக வந்தார்.

அப்போஸ்தலர் நடபடிகளில் இந்த இடத்தில் (அப்போஸ்தலர் 20:5,6) 'நாங்கள்' பகுதி மறுபடி தோன்றுகிறது. பவுலுடன் லூக்காவும் அகாயாவில் பிரயாணம் செய்தார் என்பதை இது காட்டுகிறது. பண்டைப் பாரம்பரியத்தைப் பின்பற்றிப் பார்க்கும்போது "சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சி பெற்ற ஒரு சகோதரனை அவனோடே கூட அனுப்பியிருக்கிறோம் .... தர்மப் பணத்தைக் கொண்டு போகையில் எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படி அவன் சபைகளில் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாயுமிருக்கிறான்" (2கொரிந்தியர் 8:18,19) என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர் லூக்காவாயிருக்கலாம். ஆனால் இங்கு பெயரெதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்தப் பெயர் குறிப்பிடப்படாத நபர் அப்போஸ்தலர் 20:4ல் உள்ள பவுலின் நண்பர்களில் எவராகவேண்டுமானாலும் இருக்கலாம். அதே சமயம் ஒரே குடும்பத்தின் நபர்களைக் குறிப்பிடும்போது இவ்வாறு குறிப்பிடுவதுண்டு. தீத்துவும் லூக்காவும் சகோதரரெனில் அந்தியோகியாவோடு ஆரம்பகாலத்தில் இவர்களிருவருக்குமிருந்த தொடர்பு இவ்விருவரைப் பற்றியும் அப்போஸ்தலர் நடபடிகளில் எதுவும் சொல்லப்படாமலிருப்பது ஆகியவை எளிதில் விளக்கப்படமுடியும். எப்படி இருப்பினும் இந்தக் கால கட்டத்தில் பவுலின் மக்கெதோனியா அகாயா ஊழியம் முழுவதிலும் லூக்கா சுறுசுறுப்பான உதவியாளனாக இருந்தார். தொடர்ந்து வந்த சிறைப்பட்ட காலத்திலும் அவர் பவுலின் மிக நெருங்கிய உதவியாளரானார்.

ஒரு பெரிய ஊழியத்தின் இடைப்பட்ட பகுதியாகவே பவுல் எருசலேமுக்குத் திரும்ப விரும்பினார். தான் முன்னர் சுவிசேஷ ஊழியம் செய்த எல்லா நகரங்களையும் விட ஒரு சிறந்த குறிக்கோளின் மீது அவர் கண்வைத்திருந்தார். அவர் ரோம சாம்ராஜ்யத்தின் பிரஜையான படியால் ரோம் அவரை அழைத்தது. அவர் சுவிசேஷத்துடன் ரோம் நகரை அடைய முடியுமானால் சுவிஷேத்தை அங்கிருந்து ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பரப்ப முடியும். ஏனெனில் எல்லாச் சாலைகளும் ரோம் நகருக்குத் தான் வழி நடத்தின.

உண்மையான மிஷனெரி ராஜதந்திரத்துடன் அவர் தமது செயல்களைத் திட்டமிட்டார். "இவைகள் முடிந்த பின்பு, பவுல், மக்கெதோனியா, அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம் பண்ணிக் கொண்டு நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்க வேண்டியதென்று சொல்லி" (அப்போஸ்தலர் 19:21) என்று லூக்கா கூறுகிறார்.

ரோமருக்கு எழுதின நிருபம்

தமது மிஷனெரிப் பணியில் இந்த அடுத்த அடியை எடுத்து வைப்பதற்கு ஆயத்தமாக அவர் ரோமாபுரியாருக்கு இந்த நிருபத்தை எழுதினார். பாரம்பரியத்தின்படி பார்த்தால் இது கொரிந்துவிலிருந்து அனுப்பப்பட்டது. அல்லது துரோவாவுக்குச் செல்வதற்கு சற்று முன்னர் பிலிப்பியிலிருந்து அனுப்பப்பட்டது. ஏனெனில் இந்நிருபத்தின் கடைசி அதிகாரங்களில் தாம் இல்லிரிக்கம் வரை பிரசங்கித்து முடித்தாயிற்று என்றும் (ரோமர் 15:19) மக்கெதோனியா, அகாயா திருச்சபைகள் எருசலேமின் ஏழைகளுக்குக் கொடுத்த காணிக்கைப் பணம் தனது கையிலிருக்கிறது என்றும் (15:26) தான் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ண எத்தனமாயிருப்பதையும் (15:25) பவுல் எழுதுகிறார். ரோமர் 16ம் அதிகாரமும் இந்த நிருபத்தின் ஒரு பகுதியென்று கருதினால் அது அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய பெபேயாளின் வசமாகக் கொடுத்தனுப்படுகிறது. (16:1)

பவுலுக்கு ரோமில் எண்ணற்ற நண்பர்கள் இருந்தனர். அவர்களைச் சென்று பார்க்க வேண்டுமென்று அவர் அடிக்கடி முயற்சித்தார். ஆனால் ஒவ்வொரு முறையும் தடை செய்யப்பட்டார் (ரோமர் 15:22,1:13). பெரும்பாலும் புறஜாதியினரையே கொண்ட திருச்சபையாக இருந்திருக்கக் குறிப்பிடுகிறார். (1:13) மேலும் அப்போஸ்தலர் நடபடிகளில் கொடுக்கப்பட்டுள்ள அவருடைய பிந்திய ரோமாபுரிப் பயணத்தைப் பற்றிய குறிப்பில் யூதர்களிடத்தில் கிறிஸ்தவ சத்தியம் பற்றிய அறியாமை இருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இந்த இயக்கத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தனர். ஆனால் அதென்னவென்று அவர்கள் ஆராயவில்லை.

மற்ற எவரும் அவர்களிடத்தில் அதைப்பற்றிக் கூறவுமில்லை. (அப்போஸ்தலர் 28:21) ரோம் நகரின் புறஜாதித் திருச்சபையில் யூதர் எண்ணிக்கை மிகக்குறைவு. இளாடியஸினால் விரட்டப்பட்டு அந்நகருக்கு வந்து அங்கு தங்கிய யூதர் திருச்சபையில் உள்ளவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளவும் இல்லை.

ரோமத் திருச்சபையின் தொடக்கம் பற்றி எதுவும் தெரியவில்லை. எருசலேமில் பெந்தேகொஸ்தே நாளின்போது 'இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும்' (அப்போஸ்தலர் 2:10) இருந்தனர். இவர்கள் கிறிஸ்துவைப் பற்றிய செய்தியுடன் திரும்பியிருக்கக் கூடும். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் ரோமிலிருந்து வந்தவர்கள். ரோமர் 16:3ன் படி அவர்கள் ரோமுக்கே திரும்பிச் சென்றனர். இந்தச் சபையை பேதுரு ஸ்தாபித்தார் என்றெண்ணுவதற்குப் புதிய ஏற்பாட்டில் எந்த ஆதாரமும் இல்லை. உலகின் மற்ற பகுதிகளிலிருந்து ரோமுக்குச் சென்ற மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தச் சபை விசுவாசிகளிடையே தானாகத் தோன்றியிருக்கவேண்டும்.

இந்தச் சபையில் பவுல் ஆர்வம் காட்டுவதற்குப் பல காரணங்கள் உண்டு. இந்த ராஜ நகரத்தைக் காண வேண்டுமென்ற அவருடைய ஆவல், போதிப்பதற்குக் கிறிஸ்தவர்களின் தேவை, சக்திவாய்ந்த முக்கியமான குழுக்களில் யூத சமயத்தவரின் குறுக்கீடுகளைத் தடை செய்தல், அவர் ஸ்பெயினுக்குப்போகும் போது அவர்களிடமிருந்து ஆதரவை எதிர்பார்த்தது (ரோமர் 15:24) எல்லாமாகச் சேர்ந்து அவர் ரோமில் கொஞ்ச நாட்களைக் கழிக்க வேண்டும் என்ற முடிவுக்கு அவரைக் கொண்டு சென்றது.

ரோமருக்கு எழுதின நிருபம்

நேரடித் தொடர்பு கொள்ள முடியாததால் அதற்கு பதிலாக ரோமர் நிருபம் எழுதப்பட்டது. பவுல் பணியாற்றிய நகரங்களான அந்தியோகியா, எபேசு பிலிப்பி போன்ற நகரங்களைப் போல ரோம திருச்சபையை அவைகளோடு ஒப்பிடத்தக்கதொரு மிஷனெரி மையமாக்குவதற்கு ஆயத்தமாகவும் இம்மடல் எழுதப்பட்டது. எனவே கொரிந்தியரைப்போல் தவறுகளைத் திருத்துவதில் ஆழ்ந்த ஆர்வம் உள்ளவர்களாக ரோமர் இருக்கவில்லை. சத்தியத்தைப் போதிப்பதில்தான் அவர்களுக்கு ஆர்வம் அதிகம் இருந்தது. அதில் கிறிஸ்தவத்தின் எல்லா பகுதிகளையும் பற்றிக் கூறப்படவில்லை. மரணத்துக்குப் பின் வாழ்வைப் பற்றிய விஷயங்கள் இதில் இல்லை. இருப்பினும் கூட எபேசியரைத் தவிர பவுலின் வேறெந்த நிருபத்தையும் விட கிறிஸ்தவத்தின் இதயத்தை முழுமையாகவும் ஒழுங்காகவும் இது காட்டுகிறது. பவுலின் நிருபங்கள் பல முரண்பாடுகளைப் பற்றியதாகவும் தவறுகளைத் திருத்துவனவாகவும் இருக்கின்றன. ரோமர் நிருபம் தேவனுக்கேற்ற போதனைகளைக் கொண்டது.

ரோமர் நிருபத்தின் முக்கிய கருத்து தேவனுடைய நீதியை மனிதனுக்கு வெளிப்படுத்துவதும் அதை மனிதனின் ஆவிக்குரிய தேவைகளுக்கு பயன்படுத்துவதுமே. இவ்வாறாக இதன் மையக் கருத்து கிறிஸ்தவ அனுபவங்களுக்கெல்லாம் அடித்தளமாக அமைந்துள்ளது. ஏனெனில் சரியான அணுகுமுறையின்றி மனிதன் தேவனுடன் சம்பந்தம் கொள்ள முடியாது. இந்த நிருபம் குறிப்பாகப் புறஜாதியாருக்கென்றே எழுதப்பட்டது. அவர் தாம் புறஜாதியாருக்கு அப்போஸ்தலனென்று தம்மைக் குறித்துக் கூறினார் (ரோமர் 1:5) வெளிப்படுத்துதலுக்கு முன்னுரையாக அவர் புறஜாதி உலகின் வரலாற்றை எடுத்துக் கூறுகிறார் (1:18-32) தேவனுடைய இரட்சிப்பு 'புறஜாதிகளுக்கும் கூடத்தான்' (3:29) என்று அவர் உறுதியாகக் கூறுகிறார். விசுவாசத்தின் பாதையில் யூதனென்றும் கிரேக்கனென்றும் 'வேறுபாடே இல்லை' என்றும் அவர் எடுத்துரைக்கிறார். இரட்சிப்பு எல்லாருக்கும் உரியது என்று ரோமர் நிருபம் உறுதியாகக் கூறுகின்றது.

அதனுடைய வடிவமைப்பில் தேவனுடைய நீதி என்னும் அதன் மையக் கருத்து படிப்படியாக உருவாகி வருவதைக் காணலாம்.

ரோமர்: தேவனுடைய நீதியின் சுவிசேஷம்

1 முன்னுரை	1:1-17
வாழ்த்து	1:1-7
நூலாசிரியர்	1:1-5
போய் சேரவேண்டிய இடம்	1:6-7
நல்வாழ்த்து	1:7
சந்தர்ப்பம்	1:8-15
கருத்து	1:16,17
2 தேவநீதியின் அவசியம்	1:18-3:20
புறஜாதி உலகின் வீழ்ச்சி	1:18-32
குறை கூறுபவர்களின் அழிவு	2:1-16
யூதரின் கலக்கம்	2:17-3:8
எல்லாருக்கும் தண்டனை	3:9-20
3 தேவ நீதி செயல்படுதல்	3:21-8:39

ரோமருக்கு எழுதின நிருபம்

நீதியின் ஊடகம்:- விசுவாசம்	3:21-31
நீதியின் அடிப்படை:-	
வாக்குத்தத்தம்	4:1-25
நீதியின் பலன்	5:1-21
நடைமுறை நீதியின் அம்சங்கள்	6:1-7:25
நீதியின் விளைவு:-	
ஆவியில் ஜீவன்	8:1-39
4 நீதியுடன் யூதனுக்குள்ள உறவு	9:1-11:36
இஸ்ரவேலின் தேர்ந்தெடுப்பு	9:1-33
இஸ்ரவேலின் இரட்சிப்பு	10:1-21
இஸ்ரவேலின் தோல்வி	11:1-36
5 திருச்சபையின் வாழ்வில் நீதி பயன்படுத்தப்படுதல்	12:1-15:13
அர்ப்பணிப்புக்கு அழைப்பு	12:1,2
வரங்களின் பயன்கள்	12:3-8
தனிப்பட்ட உறவுகள்	12:9-21
அரசியல் உறவுகள்	13:1-7
பொதுமக்களுடன் உறவுகள்	13:8-14
பெற்றோர் - பிள்ளைகள் உறவுகள்	14:1-15:13
6 முடிவுரை	15:14-33
சொந்தத் திட்டங்கள்	15:14-29
ஜெபத்துக்கு வேண்டுகோள்	15:30-33
7 பின் குறிப்பு	16:1-27
நல்வாழ்த்துக்கள்	16:1-24
ஆசீர்வாதம்	16:25-27

நீண்ட காலமாக ரோமர் நிருபம் கிறிஸ்தவ இறையியலின் ஒரு முக்கிய ஆதார நூலாகக் கருதப்பட்டு வருகிறது. நீதிமானாக்கப்படுதல், சுவீகரித்துக் கொள்ளுதல் பரிசுத்தமாக்கப்படுதல் போன்ற பல இறையியல் சம்பந்தமான சொற்கள் இந்த நிருபத்தின் சொற்களஞ்சியத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன. இதன் விவாத அமைப்பு கிறிஸ்தவ சிந்தனைக்கு முதுகெலும்பைத் தருகிறது. இதன் காரண காரிய முறைகள் வெளிப்படையாக உள்ளன. முதலாவது மையக் கருத்து அறிவிக்கப்படுகிறது..." சுவிசேஷம்... விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16) யூதரும், புறஜாதியாரும் வேறுபாடின்றி உலகம் முழுவதுமே விழுந்து போனதால் அந்தப் பெலன் அவசியம் என்பது காட்டப்படுகிறது. "அந்தப் படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (3:10) அப்படியானால் எல்லாரும் உதவியற்றவர்களும் தண்டனைக் குறியவர்களுமாகிப் போனதினால் விடுதலை வெளியிலிருந்து வந்து தனிப்பட்ட முறையிலும் சட்டப்படியும் நீதியை அளிக்க வேண்டும்.

ரோமருக்கு எழுதின நிருபம்

இந்த நீதி கிறிஸ்துவில் காணப்படுகிறது. "தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும் தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும் கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் இருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:25,26) தனக்கு இரட்சிப்பைத் தானே சம்பாதித்துக் கொள்ள முடியாது. எனவே இந்த நீதி விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தனித் தனியாகவும் இனவாரியாகவும் கிறிஸ்துவில் செயல்படும் கிருபையினால் மனிதன் தேவனுக்கு முன்பாக அவனுடைய சரியான நிலைக்கு மீட்டுக் கொண்டுவரப்பட்டான்.

புதிய ஆவிக்குரிய உறவுகளால் உண்டாகும் தனிப்பட்ட பிரச்சினைகள் பற்றி 6 முதல் 8 வரையிலுள்ள அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது. "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்காலம் என்று சொல்லுவோமா?" (6:1) நாம் நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவஞ்செய்யலாமா? (6:15) 'நியாயப்பிரமாணம் பாவமோ?' (7:7) இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? (7:24) ஆவியில் வாழும் தனிப்பட்ட வாழ்வை விவரிப்பதன் மூலம் எட்டாம் அதிகாரத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கொடுக்கப்பட்டுள்ளது.

9 முதல் 11 வரை உள்ள அதிகாரங்கள் ஒரு பெரிய கேள்வியைப் பற்றிக் கூறுகின்றன. விசுவாசத்தைக் கொண்டு எல்லாருக்கும் இரட்சிப்பை அளிப்பதன் மூலம் நியாயப் பிரமாணத்தின் வழியாக இஸ்ரவேலருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை தேவன் சொல்லாமற்போகப் பண்ணிவிட்டாரா? தேவன் புறஜாதிகளைத் தெரிந்து கொண்டது ஆதியில் அவர் ஏசாவைத் தள்ளி யாக்கோபைத் தெரிந்து கொண்டதை ஒத்திருக்கிறது என்று பவுல் சுட்டிக் காட்டுகிறார். தமது வெளிப்படுத்துதலின் காரணமாகத் தேவன் இஸ்ரவேலைத் தெரிந்து கொண்டது எவ்வளவு சரியானதோ அவ்வாறேதான் அவர் புறஜாதிகளைத் தெரிந்து கொண்டதும் சரியானது. அவரது சித்தமே முடிவானது. அதற்குமேல் அப்பீல் செய்ய எந்த வழக்கு மன்றமும் இல்லை. இஸ்ரவேலின் அவிசுவாசம் தனது நிலையை தானே வேண்டாமெனத் தள்ளிவிட்டது. எனவே புறஜாதியானுக்கு தேவனுக்கு முன் அவனுடைய நாள் கொடுக்கப்படுகிறது. புறஜாதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் முடிவடையும் காலம் வரும் (11:25) அப்போது இஸ்ரவேலின் விசுவாசிகள் தங்கள் சுதந்திரத்துக்குள் பிரவேசிப்பார்கள். இப்போது தேவன் புறஜாதியாருக்குக் கொடுத்த சந்தர்ப்பம் நினையாமல் விபத்துப்போல் கொடுக்கப்பட்டதல்ல. முற்றிலும் அது தேவ திட்டத்தை ஒத்தே கொடுக்கப்பட்டுள்ளது.

முதல் பதினொரு அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள இரட்சிப்பைப் பயன்படுத்தும் விதம் முடிவுற்று நடைமுறைப் பகுதி தொடங்குகிறது. இரட்சிக்கப்பட்ட நபர் நீதியுள்ள ஒரு வாழ்க்கை நடத்தியாக வேண்டும். "நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம். நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம். ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்" (ரோமர் 14:8,9).

ரோமருக்கு எழுதின நிருபம்

முடிவுரை (15:14-33). சுவிசேஷத்தைத் தாம் அறியும்படி செய்த தேவனுக்கு பவுல் தாம் கடன்பட்டவராயிருப்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும் கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்தும் கொள்வார்களென்றும்..." (15:20) நம் நீதியின் சுவிசேஷத்துக்குட்டிருந்த கடனை மிஷனெரி ஊழியமாக மாற்றினார்.

கொள்கையும் மிஷினெரி நோக்கமும் ஒருங்கிணைந்து இருப்பதற்கு ரோமர் நிருபம் ஒப்பற்றதொரு எடுத்துக்காட்டு. மனுஷர் பாவத்தில் வீழ்ந்து விட்டார்கள் என்பதையும் தேவன் அவர்களுக்கு நீதியை வைத்து வைத்திருக்கிறார் என்பதையும் பவுல் விசுவாசித்திராவிட்டால் அவர் ஒரு மிஷனெரியாயிருக்கமாட்டார். அவர் ஒரு சுறுசுறுப்பான மிஷனெரியாக இருந்திராவிட்டால் இப்படி சத்தியங்களை ஒழுங்கான முறையில் தொகுத்து வழங்கக்கூடிய ரோமர் நிருபம் போன்றதொரு நூலை எழுதியிருக்கவும் மாட்டார். அவர் தமது திருச்சபைகளில் விசுவாசிகளை ஸ்திரப்படுத்திய போது என்ன செய்தார் என்பதை அது எடுத்துரைக்கிறது.

BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு ஓர் அறிமுகம்

அப்போஸ்தலர் பவுலின் ஊழியம்

GOOD NEWS PUBLISHERS

பவுல் அப்போஸ்தலரின் ஊழியம் முடிவுற்றது

அப்போஸ்தலர் இருபதாம் அதிகாரத்தில் பாலஸ்தீனாவுக்குச் செல்லும் வழியில் இருமுறைகள் குறுகிய காலம் பயணம் நிறுத்தப்பட்டதாகக் கூறுகிறது. முதலாவது துரோவாவில் நடைபெற்ற கூட்டத்தில் பவுல் பேசினார். இது நமக்குக் கிடைத்திருக்கிற மிகப்பழைய கிறிஸ்துவ வழிபாட்டு முறைகளில் ஒன்று. கூட்டம் வாரத்தின் முதல் நாள் மாலை வேளையில் நடைபெற்றது. சீடர்கள் அப்பம் பிட்கும்படி கூடிவந்தனர் அது 1 கொரிந்தியர் 11:17-26ல் கூறப்பட்டிருப்பதுபோல கர்த்தருடைய அப்போஜனத்தில் வந்த முடிந்த (ஆஞ்ஹல்ங்) ஸ்நேகம் எனப்படும் அன்பு விருந்தாயிருந்திருக்கக்கூடும். பிரசங்கம் அல்லது சொற்பொழிவு ஆராதனையின் ஒரு பகுதியாயிருந்தது. பவுல் மறுநாள் புறப்பட்டுச் செல்வதாயிருந்தபடியினாலும், ஒரு வேளை அவர் திரும்பி வரமுடியாமல் போகலாம் என்பதனாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் பிரசங்கித்து இரா முழுவதும் உபதேசித்தார்.

இரண்டாவதாக மிலேத்துவில் தாமதித்தார். மிலேத்து ஆசியாவின் மேற்குக் கரையோரம் உள்ளதொரு பட்டணம். பெந்தெகோஸ்தே நாளுக்குள் எருசலேமுக்குப் போய் சேர்ந்துவிட வேண்டும் என்பதற்காக. எபேசுவைத் தொடாமல் விலகிச் செல்லும் வேகக் கப்பலில் பவுல் பயணம் செய்தார். கப்பல் மிலேத்துவை அடைந்தபோது அவர் ஒரு பிரிவுச் செய்தியை இறுதியாக வழங்குவதற்காக எபேசுவின் திருச்சபை மூப்பர்களைத் தம்மிடமாக வரவழைத்தார்.

பவுலின் மிஷனெரிக் கொள்கைகளையும், அன்றுவரை அவரடைந்த வெற்றிகளையும் விளங்க வைப்பதற்கு லூக்கா இந்தச் சொற்பொழிவைப் பயன்படுத்திக் கொண்டார். தனக்கென எதுவுமின்றித் தன் வாழ்க்கையை முற்றுமாய்க் கிறிஸ்துவின் கரத்தில் விட்டுவிட்டதும், தமது ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரால் முழுவதும் வழி நடத்தப்பட்டதுமான ஒரு பெரிய ஆத்துமாவின் வாய்மொழிகள் அவை. தனது பணி ஆசியாவில் முடிந்து விட்டதென்றும் (அப்போஸ்தலர். 20:25) எருசலேமில் அவருக்குத் துன்பம் காத்திருக்கிறதென்பதை (அப்போஸ்தலர். 20:22,23) அவர் தன் உள்ளத்தில் உணர்ந்திருந்தார் என்பதையும் இது வெளிப்படுத்துகிறது ஏனெனில் தனது அடுத்த பயணத்தில் மேற்கே தூரமாகப் போக வேண்டும் என்று அவர் எண்ணினார். ஒருவேளை முதுமை தன்னை மேற்கொள்ளத் தொடங்கியிருப்பதை அவர் உணர்ந்திருக்கக்கூடும். முந்திய பயணங்களில் செய்தது போல, விசுவாசிகளை உறுதிப்படுத்துவதற்காகத் தான் திரும்ப வருவதென்பது இனிக் கூடாத காரியம் என்பதையும் அவர் உணர்ந்திருக்கக்கூடும் மிகுந்த பிரியத்துடன் அவர்களிடம் பிரியாவிடை பெற்றார். (20:36-38).

எருசலேமை விட்டு விலகியிருக்கும்படி அடிக்கடி வந்த எச்சரிக்கைகளைத் (21:4,10,11) தவிர அவருடைய மீதிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவுமில்லை. தமது நண்பர்கள் மீண்டும் மீண்டும் வேண்டிக் கொண்டபோதும் அவர் தாம் முதலில் போட்ட திட்டத்திலிருந்து மாறவே இல்லை. எனவே மற்றவர்கள் தங்களுக்கு விருப்பமில்லாமலே "கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது" (அப்போஸ்தலர் 21:14) என்று அவருடைய திட்டத்துக்குச் சம்மதித்தனர்.

எருசலேமுக்குச் சென்றடைவுடன், பவுலுடைய மிகச் சுறுசுறுப்பான மிஷனெரிப் பணி முடிவுற்றது.

பவுல் அப்போஸ்தலரின் ஊழியம் முடிவுற்றது

பத்து வருடங்களுக்குள்ளாகவே நியாயப்பிரமாண நுகத்திலிருந்து புறஜாதி விசுவாசிகளுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார். சீரியாவின் அந்தியோகியா, சிசிலியாவின் தர்சு ஆகிய பட்டணங்களிலிருந்து ஆசியா மைனரின் குறுக்கே எபேசு, துரோவா பட்டணங்கள் கடந்து மக்கெதோனியா வழியாக அகாயாவிலிருந்து இல்லிரிக்கம் வரைக்கும் ஒரு பலம் வாய்ந்த திருச்சபையின் சங்கிலியை அவர் ஏற்படுத்திருந்தார். அவர் உடன் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பணியைத் தொடந்து கவனிக்கக் கூடிய தகுதிவாய்ந்த, லூக்கா, தீமோத்தேயு, சீலா, அரிஸ்தர்கு, தீத்து போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட பலருக்கு அவர் நல்ல பயிற்சியளித்திருந்தார். விசுவாசத்துக்கும், நடைமுறை வாழ்வுக்கும் ஏற்கனவே அளவு கோல்களாகக் கருதப்பட்ட நிருப இலக்கியத்தை அவர் தொடங்கினார் தம்முடைய போதனைகளில் எதிர்கால கிறிஸ்தவ இறையியலாருக்கும் தற்காப்பு விவாதங்களுக்கும் அடித்தளம் அமைத்துக் கொடுத்திருந்தார். தம்முடைய திட்டங்கள் மூலம் ராஜ தந்திரத்தோடு மிஷனெரி ஊழியம் செய்ய முயற்சித்தார். ராஜரீகப் பொதுவுடைமையுடன் ராஜரீக விசுவாசத்தைப் பொருந்தச் செய்யும் அவருடைய முயற்சியை ரோமுக்கும் ஸ்பெயினுக்கும் செல்ல அவர் வகுத்த திட்டங்கள் காட்டுகின்றன. தம்முடைய கசப்பான சுறுசுறுப்பான விரோதிகளாகப் பாதிக்கப்படாமல், ஒரு உறுதியான அடித்தளத்தின் மீது புறஜாதித் திருச்சபையை அவர் நிறுவினார். தேவனுடைய ஆவியானவர் வெளிப்படுத்தினபடியே கிறிஸ்தவ இறையியலின் சாராம்சத்தை அவர் வடிவமைத்து வைத்தார்.

பவுலின் சிறையிருப்பு

அப்போஸ்தலர் 21:17 முதல் 28:31 வரை உள்ள வேதவசனப்பகுதி பவுலின் சிறை வாசத்தை விளக்குகிறது.

பவுல் சிறை வைக்கப்பட்டது, விசாரணைகள், ரோமுக்குக் கடல் பயணம் ஆகியவை பற்றிய விபரங்கள் அடங்கிய அப்போஸ்தலர் நடபடிகளின் இறுதிப் பகுதி உச்சக் கட்டத்திலிருந்து வீழ்ந்து விட்ட வீழ்ச்சி போல ஏறத்தாழத் தோற்றமளிக்கிறது. பார்க்கும் போது திருச்சபையின் கொள்கை முன்னேற்றத்துக்கோ அல்லது மிஷனெரிப் பணி முன்னேற்றத்துக்கோ எந்த சம்பந்தமும் இல்லாத நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுவதற்கு நூலில் கால் பகுதிப் பாகம் கொடுக்கப்பட்டுள்ளது. ரோமிலும், ஸ்பெயினிலும் திருச்சபை எவ்வாறு விரிவடைந்தது என்பதை விளக்காமல், பவுல் தானே வாடகைக்கு எடுத்த வீட்டில் காவலில் வைக்கப்பட்டார் என்பதுடன் அந்த விபரம் முற்றுப்பெற்று விடுகிறது. சக்கரவர்த்தியின் முன்னிலையில் நடந்த பவுலின் விசாரணை பற்றியோ அல்லது விசாரணை விடுதலையில் முடிந்திருக்குமாயின் தொடர்ந்து பவுலின் ஊழியம் பற்றியோ எதுவும் கூறப்படவில்லை. கதை இடையில் அப்படியே நின்று விடுகிறது. வழக்கமான முறையில் சிந்தித்துப் பார்த்தால் அது திருப்திகரமாக முடியவில்லை என்று கூறலாம்.

இவ்வாறு அது திடீரென முடிவடைந்தற்குக் காரணம் நூலாசிரியர் தமக்குத் தெரிந்ததை எல்லாம் எழுதி முடித்துவிட்டதாக இருக்கலாம். அன்றைய நிலைமை வரை தெயோப்பிலுவுக்குச் சொல்ல விரும்பி எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் பவுலின் ஊழியத்தில் கடைசி நிகழ்ச்சிகள் வரை கூறிவிட்டார். சொல்வதற்கு இனி எதுமில்லை. இவ்வாறு பவுல் சிறைப்படுத்தப்பட்டது அளவுக்கு அதிகமாக வலியுறுத்திக் கூறப்பட்டிருப்பதற்கு, தாமே கண்ணாரக் கண்ட விஷயங்களை லூக்கா இன்னும் அதிக சுதந்திரத்துடன் முழுமையாகவும் எழுத முடிந்தது என்று காரணம் கூறலாம். ஆனால் இந்தக் காலகட்டத்தை இவ்வளவு விவரமாகக் கூறுவதற்கு இதைவிட இன்னும் சிறந்த காரணம் ஏதாவது ஒருவேளை இருக்கக்கூடும். கிறிஸ்தவம் நாளுக்கு நாள் யூதசமயத்திலிருந்து பிரிந்து கொண்டே வந்தது. கவனித்துக் கொண்டிருந்த பொது மக்களுக்குக் கிறிஸ்தவத்தின் தனித்தன்மை மேலும் மேலும் தெளிவாகத் தோன்றலாயிற்று. ரோம் அதை அப்படி எடுத்துக் கொள்ளுகிறது என்பது அதன் எதிர்காலத்தைப் பொறுத்தவரை மிக முக்கியமானது. இது ஒரு அபாயகரமான இயக்கமென்று ரோம் கருதுமாயின் உடனே அடக்குமுறை இதனைப் பின் தொடரும்.

ரோம அதிகாரியாக இருக்கக்கூடிய தேயோப்பிலுவுக்கு எழுதப்படும் இந்த விபரங்களில் கிறிஸ்தவத்துக்கு அரசியல் ஆர்வமேதும் இல்லை என்பதையும் ரோம அதிகாரத்துடன் அதன் உறவு எப்போதும் நட்புறவாகவே உள்ளது என்பதையும் எடுத்துக் காட்டிவிட லூக்கா விரும்பினார். மதத்தின் அடிப்படையில் யூதர்கள் மூலம் உபத்திரவம் வந்தது. பிலிப்பி பட்டணத்தில் கூறப்பட்டது போல் அது ரோம அதிகாரத்துக்கு எதிரானது (அப் 16:20,21) என்னும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள மற்ற பகுதிகளை விட இந்த அதிகாரங்கள் பவுலின் உள்ளான சிந்தனைகள் போதனைகள் என்று வெளிப்படுத்துவதால் சரித்திர ரீதியாகவும் இறையியல் ரீதியாகவும் இவை மதிப்பு மிக்கவை.

எருசலேம்

பவுல் எருசலேமுக்கு வந்தபோது யூதத்திருச்சபைக்குள்,

பவுலின் சிறையிருப்பு

சமாதானப்படுத்த முயலும் அவருடைய முயற்சிகளையெல்லாம் மீறி சச்சரவு ஏற்பட்டது. யாக்கோபுடைய ஆலோசனைப்படி சில யூதர்கள் தங்கள் நசரேய விரதத்தை நிறைவேற்றுவதற்குரிய பொருளாதாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். (அப்போஸ்தலர். 21:23,24) முன்னொரு சந்தர்ப்பத்தில் பவுல் கூட இந்த விரதத்தை மேற்கொண்டிருந்தார். (அப்போஸ்தலர். 18:18) சுய விருப்பத்துடன் நியாயப் பிரமாணத்தைக் காத்து நடப்பது குறித்து பவுலுக்கு வெறுப்பேதும் கிடையாது என்பதை நிரூபிக்க இது நல்லதொரு வழி என்று யாக்கோபு எண்ணினார். சிதறுண்ட யூதருக்கெல்லாம், தங்கள் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்விக்க வேண்டியதில்லை என்றும், நியாயப் பிரமாணத்தின்படியுள்ள வழக்கங்களின்படி நடக்க வேண்டுவதில்லை என்றும் பவுல் போதிப்பதாகப் பரவிவரும் வதந்திகளை, இவ்வாறு செய்வதால் தடுத்து நிறுத்திவிடலாம் (அப்போஸ்தலர். 21:21).

இந்தச் செயல் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே தவிர்க்க முடியாத மோதல் ஒன்று ஏற்பட்டது. எபேசுவிலும் மற்றெல்லா இடங்களிலும் பவுலுக்குக் கசப்பான எதிரிகளாக இருந்த ஆசிய யூதர் சிலர் அங்கு வந்தனர். புறஜாதியார் பிரவேசிக்கக் கூடாத பரிசுத்த பகுதிக்குள் பவுல் தனது புறஜாதி நண்பர்களை அழைத்துக் கொண்டு வந்து விட்டதாக அவர்களே எண்ணிக்கொண்டனர். எனவே பவுல் மீது பகிரங்கமாக அக்குற்றத்தைச் சாட்டி அவரைச் சாடினார். தொடர்ந்து ஏற்பட்ட கலகம். ரோம அதிகாரி, தமது படை பலத்துடன் குறுக்கிடுமளவுக்கு அதிகமாக இருந்தது. கூட்டத்தினரின் கோபத்திலிருந்து அவர்கள் பவுலை மீட்டு, மேலதிகாரியின் விசாரணைக்காக அன்டோனியா அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

பவுல் கோட்டைக்குச் செல்லும் படிகளின் மீது நின்று பேசுவதற்கு சேனாபதியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு அராமிக் மொழியில் தனது செய்தியை எடுத்துரைத்தார். (21:40) தனது மனந்திரும்புதலைப் பற்றி அவர் சொன்னபோது கூட்டத்தினர் மரியாதையுடன் கவனித்தனர். கண்ணைக் குருடாக்கக் கூடிய அந்த ஒளியின் உண்மையைக் குறித்து எந்த ஒரு எதிர்ப்பும் எழவில்லை. யூதமனதுக்கு அந்த ஒளி ஆண்டவராகிய இயேசுவின் மகிமைப் படுதலையோ அல்லது மனந்திரும்புதலுக்கும் ஞானஸ்நானத்துக்கும் அடையாளமாக உள்ள காரியங்களையோ குறிப்பிடவில்லை. ஷேக்கினா எனப்படும் தேவனுடைய மகிமையையே அது குறித்தது. புறஜாதிகளுக்குரிய ஒரு அழைப்பைக் குறித்துப் பவுல் குறிப்பிட்ட போதுதான் கூட்டத்தாரின் வெறுப்பு நெருப்பாய் எரிந்தது. பாதுகாப்புக்காகப் பவுலைக் கோட்டைக்குள் கொண்டுபோக வேண்டியதாயிற்று.

தொடர்ந்து பவுலை பரீட்சித்துப் பார்த்ததிலும் விசாரணை செய்ததிலும் இரண்டு உண்மைகள் வெளிப்பட்டன. ஒன்று அரசியல் ரீதியிலோ, அல்லது குற்றவியல் ரீதியிலோ பவுல் குற்றமேதும் செய்யாத களங்க மற்ற நபர் என்பதும் மற்றொன்று அவருடைய ரோமக் குடியுரிமை பற்றியதும் ஆகும். பாதுகாப்பான காவலில் அவர் நான்காண்டுகள் இருந்தார். பவுல் தாம் விடுதலை செய்யப்படுவதற்கு லஞ்சம் கொடுப்பாரென்று பேலிக்ஸ் நம்பி எதிர்பார்த்திருந்ததால் இரண்டாண்டுகள் செசரியாவில் கழிந்தன. (அப்போஸ்தலர். 24:26) தனது பதவிக்காலம் முடிந்து போகும்போது கூட அவன் அவரை விடுவிக்கவில்லை. இப்படிச் செய்ததால் யூதர்களிடம் நற்பெயர் பெறலாம் என்று அவன் எண்ணினான். (24:27) அடுத்ததாக பெஸ்து அந்த இடத்துக்கு வந்தான்.

பவுலின் சிறையிருப்பு

யூதர்களின் வெறுப்புக் குறையாதென்றும் அவர்கள் தங்கள் குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெறமாட்டார்கள் என்பதையும் உணர்ந்த பவுல், பெஸ்து யூதருக்குச் சாதகமாகச் செயல்பட்டு முடிவில் தன்னை சிறையிலேயே இருக்கும்படி செய்துவிடுவானோ என்று பயந்தார். எனவே பெஸ்துவின் கைகளிலிருந்து வழக்கை எடுத்து போடும்படி, பவுல் இராயனுக்கு அபயமிட்டார். (அப்போஸ்தலர் 25:10-12) பவுல் ஒரு ரோமப் பிரஜை என்று அறிந்த பெஸ்து அவருடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு விசாரணைக்கு நிற்கும்படி பவுலை ரோமுக்கு அனுப்பினான். விசாரணை நடை பெறுவதற்காகக் காத்திருந்ததில் இன்னும் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. (28:30) குறிப்பிட்ட காலத்துக்குள் வழக்கு விசாரணைக்கு வராததால் பவுல் விடுவிக்கப் பட்டாரா அல்லது விசாரிக்கப்பட்டுக் குற்றவாளி அல்ல என்பது கண்டு விடுவிக்கப்பட்டாரா என்பது கூறப்படவில்லை.

இவ்வாறு செயலின்றி இருக்கும்படி செய்யப்பட்ட காலங்கூட பலனின்றிப் போக வில்லை. எருசலேமிலும் பவுல் வெளியாருடன் தொடர்பு கொள்வது தடுக்கப்படவில்லை. (அப்போஸ்தலர். 23:16) ரோம் நகரில் தாமே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கினார். அங்கு அவரைக் காண வந்தவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர் வேறு எங்கும் பயணப்படக் கூடாதேயன்றி தனது வீட்டுக்குள் போதிக்கவும், எழுதவும் அவருக்கு சுதந்திரம் இருந்தது.

இந்தக் கால கட்டத்தில் எழுதப்பட்ட நிருபங்கள். பவுல் சிறைப்பட்டதால் திருச்சபையின் வளர்ச்சி நின்றுவிடவில்லை என்பதை காட்டின.

மேலும் ரோமர் நிருபத்தைத் தவிரவேற எந்த நிருபமும் இவ்வளவு உறுதி வாய்ந்ததாகவும் தெய்வீகப் போதனைகள் நிறைந்ததாகவும் இருக்கவில்லை. ஆரம்பகாலப் பயண நிருபங்களைக் காட்டிலும் சிறை நிருபங்கள், தனிப்பட்ட கேள்விகளை விடப் பொதுவான போதனைகளையே கொண்டவைகளாக உள்ளன. ஒரு திருச்சபை என்பது ஆர்வமும் நிச்சயமற்ற தன்மையும் உடையவர்களும் நடைமுறைப் பிரச்சினைகளினால் கலங்கிப் போய் நிற்பவர்களுமான மனந்திரும்பிய ஒரு சிலர் சேர்ந்த அமைப்பிழந்த கூட்டம் அல்ல. வேகமாக முதிர்ச்சி அடைந்து கொண்டு வரும் ஸ்தாபனம். இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் தோன்றுதவற்கான அடையாளங்கள் காணப்பட்டன. குழப்பமல்ல, சுயதிருப்தியே அவர்களுடைய பிரச்சினை, அவர்கள் விசுவாசத்தின் ஆரம்பப் பாடங்களை ஏற்கனவே கற்றறிந்தவர்கள். அவர்களைப் பிரகாசிப்பித்து உறுதிப்படுத்தும் ஆழமான போதனைகள் தான் அவர்களுக்குத் தேவை.

சிறைப்படுத்தப்பட்டதால் பவுலின் திட்டங்களில் மாறுதல் ஏற்பட்டாலும், தம்மை ரோமுக்கு அனுப்புவது தேவனுடைய நோக்கம் என்ற விசுவாச உணர்விலிருந்து அவர் மாறவில்லை. சனகரீம் சங்கத்தின் முன் அவர் கொண்டு வரப்படுவதற்கு முன் உண்டான தரிசனம் “நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுக்க வேண்டும்” என்று அவருக்கு அறிவித்தது. சுப்பற் தேசத்தின் நடுவில் தேவதூதனால் தேவனுடைய வாக்குத்தத்தம் புதுப்பிக்கப்பட்டது. “பவுலே, பயப்படாதே. நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டு”மென்று தூதன் கூறினான். அதற்கு பவுல் அளித்த “தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்” என்ற பதில் குறிப்பிடத்தக்கது.

பவுலின் சிறையிருப்பு

இந்தக் கால கட்டம் முழுவதும் பவுலின் சுவிசேஷ ஊழியத்தில் மெதுவாக ஆனால் திட்டவட்டமாகச் செயல்படுகிற தேவனுடைய கரத்தின் செயல் தெளிவாகத் தெரிகிறது.

அவருடைய செய்தியின் முன்னேற்றம் கூட உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்காக அவர் மறுபடியும் மறுபடியும் வாதாடுதலில் குறிப்பிடப்படுகிறது. இந்தப் பகுதியில் உள்ள பவுலின் பிரசங்கம் போதனைகளின்றி தற்காப்பு விவாதங்கள் நிறைந்ததென்றே வைத்துக் கொண்டால், அவை "உயிர்த்தெழுதல்" பவுலின் சிந்தனையில் மைய இடத்தைப் பெற்றுள்ளது என்பதையே அது காட்டுகிறது. சனகரீம் சங்கத்தின் முன்பாகத் தனக்காக அவர் பேசும் போது "சகோதரரே, நான் பரிசேயனும், பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன். மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கைக்காக நான் நியாயம் விசாரிக்கப் படுகிறேன். *(23:6)* என்றார். ஃபேலிக்ஸின் முன் விசாரிக்கப்படும்போது தான் சார்ந்திருக்கும் கூட்டத்தாரின் நம்பிக்கையை விளக்கி "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று" தான் நம்புவதாகக் கூறுகிறார். இறைபியல் சிந்தையுள்ளவன் என்று அழைக்கப்படவே முடியாத ரோம கவர்னரான பெஸ்து கூட பவுலை அகிரிப்பாவுக்கு அறிமுகப்படுத்தும்போது, யூதர்கள் "தங்களுடைய மார்க்கத்தைக் குறித்தும், மரித்துப் போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறானென்று பவுல் சாதித்ததைக் குறித்தும் சில தர்க்க விஷயங்களை அவன் பேரில் விரோதமாய்ச் சொன்னார்கள்". (அப்போஸ்தலர். *25:19)* என்றே கூறுகிறான். தனக்காக பேசும்படி அகரிப்பா பவுலை அழைத்தபோது பவுல்

"தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன"? என்று கேட்டார். உயிர்தெழுந்த கிறிஸ்துவின் செயல்களை சொல்லிக் கொண்டே வந்த பவுல் தொடர்ந்து தன்னுடைய செய்தி தீர்க்க தரிசனத்தை அடிப்படையாகக் கொண்டது என்று உறுதியாகக் கூறினார். "தீர்க்க தரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து பாடுபட வேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுய ஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப் படுத்துகிறவரென்றும் சொல்லுகிறேனேயன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான்" (அப் *26:23)*

உயிர்த்தெழுதலுக்குக் கொடுக்கப்படும் இந்த அழுத்தம், முதலிலிருந்தே பவுலின் நிருபங்கள் அனைத்திலும் திட்டமாகக் காணப்படுகிறது. (கலாத்தியர் 1:1; 4:14 1கொரிந்தியர் 15:1-8; 2கொரிந்தியர் 5:15, ரோமர் 1:4) அதனுடைய பெரிதாக்கப்பட்ட பொருள் விசுவாசிகளுக்காக ரோமர் ஆறாம், எட்டாம் அதிகாரங்களில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. அவருடைய பூமிக்குரிய, பக்திக்குரிய வாழ்க்கையில் அதன் பாதிப்பு கொலோசெயர் நிருபத்திலும், எபேசியர் நிருபத்திலும் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. ஒருவேளை சிறையிருப்பின் காலத்தில் கிடைத்த கட்டாய ஓய்வின்போது தமக்கு நன்கு அறிமுகமான சத்தியத்தின் பொருளை இன்னும் முழுமையாக சிந்திக்கவும் கிறிஸ்தவ வாழ்வில் அதன்பயனை மிக விரிவாக எடுத்துரைக்கவும் அவருக்கு முடிந்திருக்கக் கூடும்.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

சிறை நிருபங்களான பிலிப்பியர், கொலோசேயர் எபேசியர், பிலேமோன் ஆகிய நான்கும் கிபி 56 அல்லது 57 முதல் கிபி60 அல்லது 61 வரையுள்ள கால கட்டத்தில் எழுதப்பட்டவை. அவைகளைக் குறித்துச் சில சிக்கலான கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. அவை செசரியாவில் எழுதப்பட்டனவா அல்லது ரோமில் எழுதப்பட்டனவா? அவை அனைத்தும் உண்மையிலேயே பவுல் எழுதியவைதானா? அவைகளின் முடிவு என்ன?

அவைகள் பவுலின் சிறையிருப்பின் காலத்தில் தான் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் அவை அனைத்தும் பவுலின் கட்டுகளைக் குறித்துக் குறிப்பிடுகின்றன (பிலிப்பியர் 1:12,13, எபேசியர் 3:1; 4:1, 6:20 கொலோசெயர் 1:24 பிலேமோன் 1) அநேகமாக அவை ரோம் நகரிலிருந்து எழுதப் பட்டிருக்க வேண்டும் என்னும் பாரம்பரியமும் சரியானதே. ஏனெனில் இராயனுடைய அரண்மனையில் உள்ளவர்களைக் குறித்தும் (பிலிப்பியர் 4:22) காவலரைக் (1:13) குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் செசரியாவை விட ரோம நகருக்கே பொருத்தமானவை. அவர் தமது நண்பர்கள் எளிதில் வந்து போகக்கூடிய பயண மையத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. இது செசரியாவை விட ரோம் நகருக்கே பொருத்தமானது.

எபேசியர் நிருபத்தின் உண்மைத் தன்மை குறித்து சமீப வருடங்களில் ஏதோ கேள்வி எழுகின்றது. ஒருசிலர் பவுலின் நிருபங்களை யெல்லாம் சேகரித்து ஒழுங்குபடுத்தின ஒரு மனிதனால், அந்த நிருபங்களுக்கு முன்னுரையாக எபேசியர் நிருபம் எழுதப் பட்டிருக்கக்கூடும் என்று கருதுகின்றனர். இந்தக் கடிதம் பவுலின் பெயரைக் கொண்டுள்ளது. அதில் அவரைக் குறித்துக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் யாவும் அவருடைய வாழ்வில் நடந்த அனைவரும் அறிந்த உண்மைகளே. அது கொலோசேயர் நிருபத்தை ஒத்திருக்கக் காரணம் இரண்டும் ஒரே சமயம் எழுதப்பட்டது என்பதுதான். அதனால்தான் இரண்டிலும் காணப்படும் கருத்துக்கள் ஒன்றை ஒன்று ஒத்துள்ளன. எபேசியர் நிருபம் பவுலைத் தவிர வேறு யாராலோ எழுதப்பட்டிருக்கக்கூடும் என்பதற்கு வெளிப்படையான ஆதாரங்கள் ஏதும் இல்லை. உள்ளான ஆதாரங்கள் எனப்படுவனவற்றிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் உள்ளன. எபேசியர் நிருபம் எபேசியருக்கு மட்டும் எழுதப்படாமல் பவுல் சிறைப்படு முன்னர் தனது ஊழியத்தைச் செய்த ஆதித் திருச்சபைகள் அனைத்துக்கும் பொதுவாக எழுதி சுற்றுக்கு விடப்பட்டதாயிருக்கலாம். "எபேசுவில் உள்ள" (எபேசியர் 1:1) என்னும் சொல் சில பழைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படவில்லை. இதுபல திருச்சபைகளுக்குப் பொதுவானதாக எழுதப்பட்டிராவிடில், பவுல் எப்போதும் வழக்கமாக எழுதும் தனிப்பட்ட வாழ்த்துக்கள் மூன்றாண்டுகள் தான் உழைத்த சபைக்கு எழுதும் இந்த நிருபத்தில் இல்லாதது வியப்பை ஏற்படுத்துகிறது. அந்தக் குறிப்பிட்ட சபையின் தனிப்பட்ட பிரச்சனைகளைப் பற்றியதாக இல்லாமல் இந்த நிருபத்தில் காணப்படும் பொதுவான பரந்த போதனை இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகிறது. இது ஆசிய சபைகளனைத்துக்கும் சுற்றுக்கு அனுப்பப்படும் நிருபமாயின் இதன் ஒரு படி எபேசு திருச்சபைக்கும் அனுப்பப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எபேசு அந்த மாநிலத்தின் பெரிய திருச்சபை என்பதால் அதன் கையில் இருந்த படி எளிதில் எவருக்கும் கிடைக்கக் கூடியதாயிருந்திருக்கும்.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

அதிலிருந்துதான் மேற்கொண்டு படிகள் எடுக்கப்பட்டிருக்கும் மற்ற சிறை நிருபங்களுக்கெல்லாம் அவை எங்கு போய்ச் சேரவேண்டும் என்பது குறிப்பிடப் பட்டிருப்பதால் இவை விவாதத்துக்குரியவையாக இருக்கவில்லை.

பிலேமோன்

எபேசியரையும் கொலோசெயரையும் போலவே அவை எழுதப்பட்ட அதே சந்தர்ப்பத்தில் அதே சூழ்நிலையில் தான் பிலேமோனுக்கு எழுதின நிருபமும் எழுதப்பட்டது. ஒநேசிமு என்பவர் கொலோசே பட்டணத்து வியாபாரியான பிலேமோன் என்பவருடைய அடிமை. இந்த ஒநேசிமு தனது எஜமானரின் பணத்தில் ஓரளவு திருடிக்கொண்டு ஓடிப் போய்விட்டார். பட்டணத்தின் கூட்டத்தில் வாழ்ந்து மறைந்துவிடக்கருதி ரோம் நகருக்குச் சென்றார். எப்படியோ பவுலுடன் தொடர்பு ஏற்பட்டு மனந்திரும்பினார் (பிலேமோன் 10)

ஒநேசிமு செய்த தவறினை சரியாக்க வேண்டும் என்னும் அவசியத்தை உணர்ந்தவராய் ஒநேசிமுவை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டிக்கொண்டு தாம் பிலேமோனுக்கு எழுதிய ஒரு நிருபத்துடன் பவுல் அவரை அவருடைய முன்னாள் எஜமானரிடம் அனுப்பி வைத்தார். ஒநேசிமுவினால் ஏற்பட்ட பொருளாதார நஷ்டத்தைத் தான் ஈடு செய்து விடுவதாகப் பவுல் ஒத்துக் கொண்டார். (18,19) சீக்கிரத்தில் தமக்கு விடுதலை கிடைக்குமென்று தான் எதிர்பார்ப்பதாகவும், அதன்பின் திருச்சபைகளைத் தான் மறுபடியும் சென்று பார்க்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிருபத்தின் பொருளடக்கமும், வடிவமைப்பும் இறையியல் சம்பந்தப்பட்டதாக இல்லாமல் முழுக்க முழுக்க ஒரு தனிப்பட்ட சொந்த மடலாக இருப்பினும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற, மன்னிப்பின் பொருளை எடுத்துக்காட்டுகிற மிகச்சிறந்த நிருபமாக இது அமைந்துள்ளது. இதன் வடிவமைப்பே இதன் சுருக்கத்தை முழுவதுமாக உணர்த்தி விடும்.

பிலேமோன் ஒரு கிறிஸ்தவ மன்னிப்பின் மடல்

குடும்பம் 1-3

ஐக்கியம் 4-7

நன்மை 8-20

பிரிவு விடைபெறுதல் 21-25

இந்தக் கடிதத்தில் மன்னிப்பின் எல்லா அம்சங்களும் காணப்படுகின்றன; தீங்கு (11,18) பரிவு (10) பரிந்து பேசுதல் (10,18,19) பதிலீடு (18,19) மறுபடியும் நன்மதிப்பைப் பெறுதல் (15) ஒரு புதிய உறவுக்கு உயர்த்தப்படுதல் (16) ஒநேசிமுவுக்காகப் பவுல் தேடிய மன்னிப்பில் தெய்வீக மன்னிப்பின் ஒவ்வொரு அம்சமும் காணப்படுகிறது. "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிப்பது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்னும் ஜெபத்தின் நடைமுறைப் பாடம் இது.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

எபேசியர்

பிலேமோனுக்கு ஒரு கடிதம் எழுதவும் அதை ஆசியாவுக்கு அனுப்பவும் ஏற்பட்ட அவசியம் மற்ற கடிதங்களையும் அனுப்ப ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது. எபேசியத் திருச் சபைக்கும் கொலோசெயத் திருச்சபைக்குமாக சுற்றுக்கு அனுப்ப ஒரு நிருபமும், கொலோசெயத் திருச்சபைக்கு நேரடியாக ஒரு நிருபமும் இந்தக் காலகட்டத்தில், ஏறத்தாழ கிபி.60 அல்லது 61ல் எழுதப்பட்டன. இந்தக் கடிதங்களைக் கொண்டு சென்ற தூதுவர் தீகிக்கு என்பவர் இவருடன் சென்றார். (எபேசியர் 6:21; கொலோசெயர் 4:7-9) இந்தக் கடிதங்களை எழுதும்போது எருசலேமிலிருந்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரான அரிஸ்தர்க்கும் (அப்போஸ்தலர். 20:4) ஆசிய நாட்டைச் சார்ந்த எப்பாபிராவும் "பிரியமுள்ள வைத்தியனான" லூக்காவும், தேமாவும் உடனிருந்தனர். இந்தச் சமயத்தில் மார்கும் பவுலுடன் வந்து சேர்ந்து கொண்டு ஆசியாவுக்குப் போகவேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருந்தார். (கொலோசெயர் 4:10) ஏனெனில் பவுல் அவரைக் கொலோசெயருக்கு அனுப்பினார். யூத உடன் ஊழியனான ஏசு என்னப்பட்ட யுஸ்துவைக் குறித்து வேறெதுவும் தெரியவில்லை. இந்த மனுஷரெல்லாம் கொலோசெயர் நிருபத்திலும் பிலேமோனுக்கெழுதின நிருபத்திலும் குறிப்பிடப் பட்டிருப்பது இந்த இரண்டு நிருபங்களும் ஒரே சமயத்தில் எழுதப்பட்டன என்பதைக் குறிக்கிறது.

பல திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் புதிதாக வந்த இந்தப் புதிய பொருளின் அர்த்தம் பற்றி சிந்திக்க பவுலுக்கு அவகாசம் கிடைத்த பின்னர் எபேசியர் நிருபம் எழுதப்பட்டது. திருச்சபை என்னும் சொல் உள்ளூருக்குள் அமைந்த ஒரு சிறிய கூட்டத்தினரைக் குறிக்காமல் எங்குமுள்ள திருச்சபைகளைக் குறிப்பது இந்த ஒரு இடத்தில் மட்டுமேதான். புறஜாதியினருக்கு அவர்களுடைய புதிய அழைப்பைப் பற்றி அறிவிக்க வேண்டுமென்ற கருத்துடன் அது எழுதப்பட்டது. கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் யூதனென்றோ புறஜாதியானென்றோ, அடிமையென்றோ, சுயாதீனனென்றோ ஒரு வேறுபாடுமில்லை என்பதை அது வெளிப்படுத்தியது.

எபேசியர் நிருபம் முழுவதிலும் திருச்சபையின் ஒரே ஒரு கருத்து ஊடுருவி உள்ளது. கிறிஸ்தவ விசுவாசத்துக்குப் புதியவர்களுக்கு இந்த நிருபம் எழுதப்படவில்லை. ஆவிக்குரிய அனுபவத்தில் ஒரு முதிர்ச்சி அடைந்து இன்னும் முழுமையான ஞானத்துக்குள்ளும் ஜீவனுக்குள்ளும் போக விரும்புகிறவர் களுக்கே எழுதப்பட்டது. சில கருத்துக்கள் ஓயாமல் மறுபடி, மறுபடி இந்நூலில் இடம் பெறுகின்றன. திருச்சபையை நிறுவியதில் தேவனுடைய ராஜரீக நோக்கம் இந்த நிருபத்தின் முதல் பாதியில் ஊடுருவி நிற்கிறது. (1:4, 5,9,11,13,20, 2:4,6,10, 3:11) இந்தப் பகுதியில் இரட்சிப்பைக் குறித்த தெய்வீகத் திட்டம் விரிவாக விளக்கப் பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் நன்னடத்தையின் முன் மாதிரியை விவரிக்கிற "நடத்தல்" என்னும் சொல்லில் விசுவாசியின்நடத்தை விசுவாசி முன்னர் உலகில் நடந்து கொண்ட முறையிலிருந்து முரண்படுத்திக் காட்டப்படுகிறது. கிறிஸ்துவின் செயல்களின் நோக்கம் "உன்னதங்களிலே" இருக்கிறது (1:3,10,20,2:6 3:10, 6:12) இந்தச் சொல் பூமிக்குரிய இடத்தையல்ல. ஆவிக்குரிய நிலையையே குறிப்பிடுகிறது. திருச்சபையின் வாழ்வின் ஆற்றல் பரிசுத்த ஆவியே. அவர் ஏற்றுக் கொள்ளப்படுதலின் முத்திரை (1:13) பிதாவினிடத்தில் சேரும் வழி (2:18) வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின் ஊற்றுக்கண் (3:5) ஆற்றலின் ரகசியம் (3:16)

பவுலின் சிறைவாச நிருபங்கள்

சமாதானக் கட்டு (4:3,4) வார்த்தைக்கும் சிந்தனைக்கும் ஆலோசகர் (4:30) சந்தோஷத்தைத் தூண்டுபவர் (5:18) போராட்டத்தில் ஆயுதம் தருபவர் (6:17) எபேசியர் நிருபத்தின் கீழ்க்கண்ட பிரிவுகள் ஒழுங்கான வரிசையில் ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்றன. அவை தேவனைப் பற்றிய எண்ணத்திலும் செபலிலும் ஒரு கிறிஸ்தவர் தனது இரட்சிப்பின் ஊற்றுக் கண்ணைப் புரிந்து கொள்ளும்படி செய்வதிலிருந்து அன்றாட வாழ்வில் இந்த இரட்சிப்பை நடை முறையில் பயன்படுத்தும் அளவுக்குக் கொண்டு செல்கிறது.

எபேசியர் திருச்சபையின் நிருபம்-----

1. முன்னுரை 1:1,2
2. திருச்சபையின் அமைப்பு 1:3-14

   பிதாவினால் 1:3-6

   குமாரனில் 1:6-12

   பரிசுத்த ஆவியின் மூலமாக 1:13,14
3. திருச்சபையின் மனச்சாட்சி ஒரு ஜெபம் 1:15 2:34.

திருச்சபை உண்டாக்கப்படுதல்

நோக்கம்: நற்கிரியைகளுக்காக

திருச்சபையின் ஒருங்கிணைவு 2:11 12

யூதரும் புறஜாதியாரும் கிறிஸ்துவில் ஐக்கியப்படுதல்

திருச்சபையின் அழைப்பு தேவனுடைய ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு 3:1 13

தேவனுடைய பரிபூரணத்தை அனுபவிப்பதற்கு ஒரு ஜெபம் 3:14-21

சபையின் நடத்தை 4:16:

அதன்ஊழியம்:ஐக்கியத்தில் பல பிரிவுகள் 4:1 16

அதன் நன்னெறி அளவு 4:17 5:14

உலகத்தை நோக்கி அதன் ஒன்றுபட்ட நடத்தை 5:15-21

அதன்உள்ளான(வீட்டுக்குரிய) 5:22-6:9

அளவுகள்

திருச்சபையின் போராட்டம் 6:10 20

5. முடிவுரை 6:21 24

திருச்சபைகளை முதலில் சந்திக்கும்போது, பவுல் தரக்கூடிய போதனைகளுக்கு ரோமர் நிருபம் ஒரு எடுத்துக்காட்டானால், அவர் "வேதாகமக் கருத்தரங்கு" நடத்தும் முறைக்கு எபேசியர் நிருபம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

அதில் எழுதப்பட்டுள்ளவைகளில் பல விஷயங்கள் மற்ற நிருபங்களிலும் காணப் படுகின்றன. மற்ற நிருபங்களில் காணப்படாத இறையியல் கருத்துக்களோ அல்லது நன்னெறி முறைகளோ எபேசியர் நிருபத்தில் இல்லை. எல்லாம் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டு, யூதராலும் புறஜாதியாராலும் உருவாக்கப் பட்டதும், தனக்கே உரிய நன்னெறி அளவுகளைக் கொண்டதும் ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதும் பணி செய்வதுமான ஒரே சரீரமாக திருச்சபையின் புதிய வடிவம் உருவாக்கப்படுகிறது. அதனுடைய குறிக்கோள். "நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராவதே" (எபேசியர் 4:11)

கொலோசெயர்

கொலோசெயர் நிருபமும் எபேசியர் நிருபமும் இரட்டை நிருபங்கள். எபேசிய நிருபம் உண்மையில் பவுல் எழுதியது தானா என்று சிலர் சந்தேகிக்கின்றனர். கொலோசெயர் நிருபத்தை அப்படியே எடுத்தெழுதிக் கூடக் கொஞ்ச விஷயங்கள் சேர்க்கப்பட்டது என்று உறுதியாகக் கூறுமளவுக்கு அவை ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன. கொலோசே பட்டணம் ஆசியாவின் கடற்கரையை அடுத்துள்ள பாறைப் பகுதிகள் மீது லூகஸ் நதியின் பள்ளத்தாக்கை நோக்கியபடி அமைந்துள்ளது. ஹிராபோலி, லவோதிகேயா நகரங்களுக்கு அருகாமையில் இது உள்ளது.

கி.மு. 5ம் நூற்றாண்டில், பெர்சியப் போர் நடந்த காலத்தில் கொலோசே பட்டணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஹாபோலி, லவோதிகேயா பட்டணங்கள் வளர வளர இதன் வியாபார முக்கியத்துவம் குறைந்து போனது. அருகில் உள்ள மலைப் பிரதேசத்தில் மேய்ப்பர்கள் தயாரிக்கும் பளபளப்பான கறுப்புக் கம்பளிக்கு சிறப்பாகப் பெயர் பெற்ற நகரம் இது. பவுலின் நாட்களில், இன்னும் பெரிய நகரமாகவே இருந்தாலும் அதன் புகழ் குறையத் தொடங்கிவிட்டது.

"சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற" (கொலோசெயர் 2:1) என்று குறிப்பிட்டிருப்பதால், அநேகமாக பவுல் கொலோசேக்கோ அல்லது அதன் சுற்றுப்புற நகரங்களுக்கோ நேரடியாகப் போயிருந்திருக்க மாட்டார். பவுல் ஆசியாவில் தங்கி எபேசுவில் பிரசங்கித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் அவரோடு பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த தீமோத்தேயு, எப்பாப்பிரா என்பவர் (1:7)களால் அந்நகரத்தாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டிருக்கலாம்.

இந்த நிருபம் எழுதப்படுவதற்குக் காரணமாக அமைந்த இந்நகரில் காணப்பட்ட கிறிஸ்தவத்துக்கு எதிரான போதனை அந்நகரின் விசித்திரமான அமைப்பின் காரணமாக எழுந்தது. கொலோசே பட்டணம் கிழக்கே இருந்துவரும் வணிகப் பாதையின் மீது இருந்தது. இதன் வழியாகக் கிழக்கிலிருந்து வியாபாரச் சரக்குகளும் மதங்களும் ரோமுக்கு அனுப்பப்பட்டன. கொலோசெயர் பிரிகிற புறஜாதியினர் (1:27) அவர்கள் ஏற்கனவே பின்பற்றி வந்த சமயம் உணர்ச்சிமிக்கதாகவும் ஆவி சம்பந்தப்பட்டதாகவும் இருந்தது. அவர்கள் தேவனுடைய பரிபூரணத்தைப் பெறத் தேடினார்கள். தேவனைப்பற்றி ஆவிக்குரிய ஒரு அறிவை வாக்குப் பண்ணுகிற ஒரு தத்துவக் காரத்துடன் போதனையாளர் யாரேனும் வந்தால் அதனால் அவர்கள் கவரப்பட்டனர்.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

அந்நகரின் மக்களிடையே ஒருவேளை தேவ பக்திக்குரிய பயிற்சிகளினால் தங்களைத் தாங்களே தாழ்மைப் படுத்திக்கொள்ளுவதும் (2:18,20,21) தேவதூதர் வழிபாடும் சிலவகை உணவுகளை உண்ணாமலும் சிலவகைப் பானங்களைப் பருகத்தடையும், விருந்துகள், பண்டிகைகள் அனுசரிப்பும் இருந்தன. தேவதூதர் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் புகழ்பெற்ற மத்தியஸ்தர்கள் என்று கருதப்பட்டனர். (2:16,18) இந்தப் போதனைகளில், ஆசியா மைனரில் உள்ள யூதர்களுடன் கொண்ட தொடர்பினால் யூத நியாயப் பிரமாண மறைகளும் கூடக் கலந்திருக்கலாம். பண்டிகைகளைப் பற்றியும் பண்டிகைகளும் போஜன பானங்களும் வருங்காரியங்களுக்கு அவை நிழலாயிருப்பது பற்றியும் (2:17) பவுல் கூறுவது யூதமதம் சம்பந்தப்பட்டதாக தோன்றுகிறதேயன்றி, புறஜாதி மதம் சம்பந்தப்பட்டதுபோலில்லை.

கொலோசெயருடைய சமய நம்பிக்கை. கலாத்தியரின் சமய நம்பிக்கை போன்றதே. ஆனால் கிருபையின் மூலம் ரட்சிப்புக்கு எதிராக கிரியையின் மூலம் இரட்சிப்பு என்பதை விட்டு கிறிஸ்து என்னும் நபரையே இது மையமாகக் கொண்டுள்ளது.

இந்த நம்பிக்கைக்கு பதில் நீளமாய் விவாதிப்பதில் இல்லை. கிறிஸ்து என்னும் நபரை சந்தோஷமாக அவர்களுக்கு அளிப்பதிலேதான் உள்ளது. கிறிஸ்துவுக்கு எல்லாத் தத்துவங்களும், ஆவிக்குரிய வல்லமைக்கும், சடங்காச்சாரங்களும், கட்டுப்பாடுகளும் இரண்டாம் பட்சமானவையே.

கிறிஸ்துவைப் பற்றி பவுல் கூறும் 1:14-20 வரையுள்ள பகுதியே கொலோசெயர் நிருபம் முழுவதிலும் சிறப்பு வாய்ந்தது.

இது ஒரு தனிப்பகுதியாக இல்லாமல் 1:9ல் இந்தப் பாராவை ஆரம்பிக்கும்போது பவுல் செய்த ஜெபத்தின் ஒரு பகுதியாக இருந்தது. "தமது அன்பின் குமாரன்" என்னும் விளக்கத்துடன் தொடங்கி (1:13) ஒரு தெய்வத்துக்கே உரிய சொற்களால் கிறிஸ்துவை வருணித்து இறுதியில் 'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது என்று முடிகிறது. படைப்பிலும் இரட்சிப்பிலும், திருச்சபையிலும் சொந்த வாழ்விலும் கிறிஸ்துவே முதல் முக்கியத்துவம் பெற்றவராக இருக்கவேண்டும்.

கொலோசெயரின் போதனைகளில் இரட்சிப்பு தான். மிக முக்கியமானதாக உள்ளது. கிறிஸ்துவில் மனிதருக்குப் பாவ மன்னிப்பு உண்டு. (1:14) அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தால் மனிதர் தேவனோடு ஒப்புரவாக்கப்படுகின்றனர். (1:20,22) "நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த சாசனம் சிலுவையில் அழிக்கப்பட்டது. (கொலோசெயர் 2:14) கிறிஸ்து மரித்ததையும் உயிர்த்தெழுந்ததையும் வாழ்வுக்கு எப்படி பயன்படுத்துவது என்றும் கொலோசெயர், நிருபம் கற்பிக்கிறது. நீங்கள் கிறிஸ்துவுடனே உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின் படியே............என்ற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? (1:20,21) நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்தில் உள்ள மேலானவைகளை நாடுங்கள் (2:20, 3:1).

பவுலின் சிறைவாச நிருபங்கள்

கொலோசெயர் : கிறிஸ்துவே முக்கியமானவர்

1. வாழ்த்துதல் 1:1,2
2. தனிப்பட்ட சொந்த உறவுகளில் கிறிஸ்துவுக்கே முதலிடம் 1:3-2:7
   - சொந்தத் தொடர்புகளில் 1:3-8
   - தன்னை வெளிப்படுத்துதலில் 1:9-23
3. கொள்கையில் கிறிஸ்துவே முதல்வர் 2:8-3:4
   - கிறிஸ்துவுக்கு எதிராக பொய்யான தத்துவம் 2:8-15
   - கிறிஸ்துவுக்கு எதிராகப் பொய்யான வழிபாடு 2:16-19
   - கிறிஸ்துவுக்கு எதிராக பொய்யான சடங்காச்சாரங்கள் 2:20-3:4
4. சன்மார்க்க நெறிகளில் கிறிஸ்துவே முதல்வர் 3:5-4:6
   - எதிர்மறையாக "விட்டுவிட" 3:5-11
   - உடன்பாடாக "செய்யவேண்டிய" 3:12-17
   - குடும்ப உறவுகளில் 4:2-6
   - பொதுவானவை 4:7-18
5. முடிவாக தனிப்பட்ட முறையில் வாழ்த்துதல் 4:7-18

மர்மங்களையும், இரகசிய அறிவையும், ஞானத்தையும் பற்றி அலப்பினதும் கிறிஸ்துவை ஒரு போலியான தத்துவத்தால் ஒதுக்கித் தள்ளிவிட்டதுமான அறிவின் தத்துவத்துக்கு எதிரான மருந்தாக கொலோசெயர் நிருபம் எழுதப்பட்டது. கிறிஸ்துவில் தேவன் பூரணமாகச் சித்தரிக்கப்படுகிறார். (1:15) என்பதையும், தெய்வத்துவத்தின் பூரணம் அவரில் இருக்கிறது என்பதையும் (1:19) அறிவு, ஞானம் என்பவைகளின் பொக்கிஷமனைத்தும் (2:3) பவுல் காட்டுகிறார். மேலும் கிறிஸ்தவ வாழ்க்கையின் பூமிக்குரிய தேவைகள் அந்த வாழ்வின் அறிவின் அளவோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன, "பூமியிலுள்ளவை களையல்ல மேலானவைகளையே நாடுகள்" (கொலோசெயர் 3:2) இதைத் தொடர்ந்து வரும் நடைமுறைப்பகுதி (3:5-4:6) "எனவே" என்னும் ஒரு சொல்லினால் இதனுடன் இணைக்கப் பட்டுள்ளது. இது ஞானத்துக்கும் நடத்தைக்கும் இடையே மனதார முயற்சி செய்வதைக் குறிக்கிறது. பவுல் சோம்பேறிக் கொள்கைகளை வழங்குகிறவரல்ல. அவரைப் பொறுத்த வரை சுவிசேஷத்துக்குத் தெளிவான பூமிக்குரிய விளைவுகள் உண்டு.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

பிலிப்பியர்

தனிப்பட்ட நபருக்கு எழுதப்படாவிடினும் பவுலின் நிருபங்களிலெல்லாம் மிகவும் சொந்தம் பாராட்டி எழுதப்பட்டுள்ள நிருபம் பிலிப்பியர் நிருபம். சாதாரணமான அளவில் இந்த நிருபம் நான்கு பக்கங்களை நிரப்புகிறது. இந்த நான்கு பக்கங்களில் நூறு தடவைக்குக் குறையாமல் தன்மைப் பெயர்ச்சொல் இடம் பெறுகிறது. பவுல் தன்னைப்பற்றியே தற்பெருமை கொண்டு பேசவில்லை. அல்லது 2கொரிந்தியரில் போல் தனது ஊழியத்தை ஆதரித்துப் பேசும் முயற்சியிலும் ஈடுபடவில்லை. பிலிப்பிய திருச்சபை அவரிடத்தில் மிகுந்த விசுவாசத்துடன் நடந்து கொண்டது. எனவே அவர்களுடன் தான் சுதந்திரமாக தனது துன்பங்கள் பற்றியும் தன் ஆவிக்குரிய ஆசைகள் பற்றியும் பேசலாம் என்று அவர் கருதினார்.

பவுலும், சீலோவும், லூக்காவும் பிலிப்பி பட்டணத்துக்குள் முதல் தடவையாக நுழைந்து பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. ஆரம்பத்திலிருந்தே அவருடைய செய்திக்குப் பலனிருந்து வந்தது. இந்தத் திருச்சபையில் அவரோடு சேர்ந்து உழைத்த பெண்கள் பலர் இருந்தனர். (பிலிப்பியர் *4:3*) அவர்களில் ஒரு சிலர், சிந்திக்கேயாளையும் எயோதியாளையும் போன்றவர்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் ஒத்து நடந்து கொள்ளவில்லை. *(4:2)* மக்கெதோனியாவில் அவர் ஊழியத்தைத் தொடங்கினபோது இந்தத் திருச்சபை அவரை ஆதரித்தது. ஆனால் அவர் வெகுதூரம் பயணப்பட்டுப் போனபின் அவர்கள் அவருக்காக அதிகமாக எதுவும் செய்யவில்லை. எருசலேமில் நடந்த வருந்தத்தக்க விஷயமும் அதன் விளைவாகப் பவுல் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டதும் அவர்களுடைய இரக்கம் நிறைந்த ஆர்வத்தை மறுபடி தூண்டி எழுப்பியது. *(4:10-14)* அவர்கள் மறுபடியும் அவருடைய தேவையை சந்திக்க நிதி உதவி செய்தனர். அவர்களுடைய நிதி உதவியைப் பவுலுக்குக் கொண்டு வந்து கொடுத்த எப்பாபிராத்து மிகவும் நோய்வாய்ப்பட்டார். அவர் சுகமடைந்ததை, ஆண்டவர் தமது ஜெபத்துக்குக் கொடுத்த பதிலாக பவுல் கருதினார். *(2:25-27)* பவுல் தாம் எழுதின ஒரு கடிதத்துடன் எப்பாப்பிராத்துவை பிலிப்பிக்குத் திரும்ப அனுப்பினார். *(2:28,29)* எப்பாப்பிராத்து பிலிப்பியர் கொடுத்தனுப்பின உதவிகளைத் தமது ஜீவனையும் பாராமல் ஜீவனையும் பணயம் வைத்துக் கொண்டுவந்து கொடுத்தார்.

ஆனால் அந்த அபாயம் இன்னதென்று கூறப்படவில்லை. ஒருவேளை அவருடைய பயணங்களாலும் தொடர்புகளாலும் தொத்து நோயினால் பீடிக்கப்பட்டிருந்திருக்கலாம். அல்லது அரசியல் கைதிபுடன் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்ததால் அரசாங்கத்தின் சந்தேகத்துக்கு உள்ளாகியிருப்பானோ என்பது தெரியவில்லை. பிலிப்பியர் நிருபம் எழுதப்பட்ட காலம் திட்டவட்டமாகக் கூறமுடியாது. பவுல் இரண்டாண்டுகள் ரோமில் தங்கியிருந்த போது, அந்தக் காலகட்டத்தின் இறுதியில் எழுதப்பட்டிருக்கலாம் என்று நம்பலாம். மொழி நடை ஒத்திருப்பது என்பது மிகப் பலஹீனமான விவாதம். ஏனெனில் ஒரு நூலாசிரியர் தனது மொழி நடையையும் சொற்களஞ்சியத்தையும் தமக்கு வயது ஆக ஆகமட்டுமல்ல, எழுதுவதற்கான சூழ்நிலைக் கேற்றவாறும் மாற்றிக் கொள்ளலாம். மொழி நடையிலும், சொற்களஞ்சியத்திலும் பிலிப்பியர் நிருபம் எபேசியர் அல்லது கொலோசெயர் நிருபங்களைக் காட்டிலும் ரோமர் நிருபத்தையே ஒத்திருக்கிறது. கொலோசெயைப் பாதித்த பிசாசு வணக்கம், நியாயப்பிரமாண நெறிமுறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஆசிய திருச்சபை ஐரோப்பிய திருச்சபைக்கென்றே இந்நிருபம் எழுதப்பட்டது.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

மற்றும் அநேக காரியங்கள் பின்னணியில் பிரவேசிக்கின்றன. பவுல் ரோமுக்கு வந்திருக்கிறாா் என்னும் செய்தி பிலிப்பை அடையவும், அங்கிருந்து எப்பாப்பிராத்தா வெகுமதியுடன் அனுப்பப்படவும் ஓரளவு கால இடைவெளிவிட்டாக வேண்டும். ரோம மெய்காவலர் மத்தியில் பவுல் நற்பெயர் பெறவும் *(1:13)* ராயனுடைய வீட்டினருக்குள் சுவிசேஷம் ஊடுருவிச் செல்லவும் ஓரளவு காலம் தேவை. *(4:22)* பிரசங்கிப்போரிடையே பவுல்மீது பொறாமை கொண்டு வெறுத்து ஒதுக்கும் ஒரு பகுதியினரும் அவரை ஆதரிப்போருள்ள மற்றொரு பகுதியும் ஒரே இரவில் உருவாகிவிட முடியாது. மேலும் தமது விசாரணைபற்றிய அவரது கருத்து விசாரணையின் விளைவு நிச்சயமற்றிருந்ததைக் காட்டுகிறது. வருவது வரட்டும் என்று அவர் இருந்தாலும் கூட மேலும் ஊழியம் செய்வதற்காகத் தான் விடுவிக்கப் படுவோம் என்று நம்பியிருந்ததாகத் தோன்றுகிறது. *(1:23-26; 2:17,24).*

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தேவையான பிரிவுகளோ அல்லது அவபக்தியோ பிலிப்பியத் திருச்சபையில் இருந்ததாகத் தோன்றவில்லை. *3:2*ல் யூத சமயத்தவரைப் பற்றிக் குறிப்பிடும்போது கூட அவர்கள் வர இருக்கும் அபாயமாகத்தான் சித்தரிக்கப் படுகிறார்களேயன்றி உடனடி அபாயமாக அல்ல. பவுலினுடைய மொழிநடை வேகமாக இருப்பினும் அவருடைய முக்கிய நோக்கம் அவர்கள் மீது குற்றம் காண்பதல்ல, தங்களுடைய பரலோக பிரஜா உரிமைக் கேற்றபடி நடந்துகொள்ள அவர்களை எழுப்பி விடுவதே அவர் நோக்கம்.

பிலிப்பியர் நிருபத்தில் இரண்டு தலைப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒன்று "சுவிசேஷம்" பவுல் இதை ஒன்பது தரம் குறிப்பிடுகிறார். அவர் "சுவிசேஷத்தில் ஐக்கியம் *(1:5* கிரேக்க மொழி வேதாகமம்), சுவிசேஷத்தை உறுதிப்படுத்துதல் *(1:7)* சுவிசேஷம் பிரபலமாகுதல் *(1:12)* சுவிசேஷத்துக்காக உத்தரவு சொல்லுதல் *(1:17)* சுவிசேஷத்துக்கும் பாத்திரராக நடந்து கொள்ளுதல் *(1:27)* சுவிசேஷத்தினிமித்தம் ஊழியம் செய்தல் *(2:22)* சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்படுதல் *(4:3)* சுவிசேஷத்தின் ஆரம்பம் *(4:15)* ஆகியவைகளைக் குறித்துப் பேசுகிறார். சுவிசேஷம் என்னும் சொல்லை அவர், விசுவாசத்தின் ஐக்கியம், பிரசங்கம் என்னும் எல்லைக்குள்ளான ஒரு செயல் என்று பொருள்படப் பயன்படுத்துகிறார். சுவிசேஷம் என்றால் என்ன என்று விளக்கமேதும் பிலிப்பியரில் கூறப்படவில்லை. ஆனால் சுவிசேஷத்தின் இருதயம் முறையே வரலாற்று சம்பந்தமானதும் தனிநிருபர் சம்பந்தமானதுமான இரண்டு சொற்களில் அடங்கியுள்ளது". மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி *(2:8)* "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிற நீதியை உடையவனாயிருந்து" *(3:9)* முன்னது கிறிஸ்து மனிதருக்காக மரித்தாரென்னும் நற்செய்தி, பின்னது மனுஷர் தேவனுக்கு முன்பாக அவருடைய நீதியை உடையவர்களாயிருக்க முடியும் என்னும் உறுதி. இவைதான் சுவிசேஷத்தின் இரண்டு அம்சங்கள்.

பிலிப்பியர் நிருபத்தில் இரண்டாவதாக வற்புறுத்தப்பட்டுள்ள தலைப்பு "சந்தோஷம்" அவருடைய எதிரிகள் அவருடைய பணிக்கடியிலேயே குழி பறிக்க வகை தேடிக் கொண்டிருந்தாலும், விசாரணையின் முடிவாக அவர் உடனே கொலை செய்யப்படலாம் என்பதாலும் ரோம் நகரில் அவரை எதிர் நோக்கும் விஷயங்கள் சந்தோஷமானவையல்ல என்பது நிச்சயம். பிலிப்பியர் எப்போதும் துயரையே எதிர் நோக்கும் தன்மை உடையவர்களல்ல. பவுல் பிலிப்பியரை

பவுலின் சிறைவாச நிருபங்கள்

நினைவுகூரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சந்தோஷமடைந்தார் (1:4) வஞ்சகத்தினாலாவது உண்மையினாலாவது எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறாரென்பதனாலும் (1:18) தன்னைப் பின்பற்றுகிறவர்களில் வளர்ச்சியடைந்திருக்கும் தாழ்மையினாலும் (2:2) கிறிஸ்துவுக்காக அவர் தம்மை தியாகம் செய்வதாலும் (2:17) தமது நண்பர்களின் வெகுமதிகளாலும் நல்லெண்ணெத்தினாலும் பவுல் சந்தோஷமாக இருந்தார். பயங்கரமான பின்னணியும் அழிவு காத்திருக்கிற நிலையும் காணப்பட்டாலும் நிருபம் முழுவதிலும் விசுவாசத்தின் பிரகாசமான மகிழ்ச்சி நிறைந்து காணப்படுகிறது.

பிலிப்பியர் தனிப்பட்ட (சொந்த) நிருபம்

1. வாழ்த்துக்கள்	1:1,2
2. சொந்த ஐக்கியத்துக்காக	
நன்றி செலுத்துதல்	1:3-11
நன்றி	
நம்பிக்கை	
ஜெபம்	
3. சொந்தச் சூழ்நிலைகளில் ஊக்குவித்தல்	1:12-2:18
பவுலின் சொந்தத் துணிவு	1:12-26
பிலிப்பியரைப் பவுல் ஊக்குவித்தல்	1:27-30
கிறிஸ்து: சேவைக்கு முன்மாதிரி	2:1-11
சேவையின் குறிக்கோள்	2:12-18
4. செய்தியாளருடன் சொந்த உறவு	2:19-30
5. நியாயபிரமாணத்துக்கு எதிராக சொந்த எச்சரிக்கை	3:1-4:1
சொந்த எடுத்துக்காட்டு	3:1-16
பிலிப்பியருக்கு அறிவுரை	3:17-4:1
6. முடிவான ஆலோசனையும் வாழ்த்துதலும்	4:2-23
ஐக்கியம்	4:2,3
சந்தோஷம்	4:4-7
சிந்தனை	4:8,9
நன்றி கூறுதல்	4:10-20
வாழ்த்துதல்கள்	4:21-23

பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறியும் பவுலின் சொந்த, கிறிஸ்துவ வாழ்க்கையை வெளிப்படுத்தியும் எழுதப்பட்ட ஒரு குறிப்பு பிலிப்பியர் நிருபம். இந்த நிருபத்தில் சிறப்பாக நிற்கிற 2:5-11, 3:2-15 ஆகிய இரு பக்கங்களும் முறையே கிறிஸ்துவின் மிகச்சிறந்த கீழ்ப்படிதலையும், கிறிஸ்து எதற்காக தம்மை அழைத்தாரோ அந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமென்ற அவருடைய ஊழியக்காரராகிய பவுலின் பேராவலையும் வெளிப்படுத்துகின்றன.

பவுலின் சிறைவாச நிருபங்கள்

இதில் முந்திய பகுதி கிறிஸ்துவைப் பற்றிய ஒரு கட்டுரையாக எழுதப்படவில்லை. பவுல் பிலிப்பியருக்கு ஆலோசனை கூறின தாழ்மையின் இயல்புக்கு எடுத்துக்காட்டாகவே இதனைக் கூறினார். பவுல் இதன் உண்மையை அப்படியே எடுத்துக்கொண்டு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தியிருப்பதே இதில் உள்ள இறையியல் உண்மையை உறுதிப்படுத்துகிறது. பொதுவாக, மனிதர் தாங்கள் நம்புவதை அப்படியே எடுத்துக் கொள்கின்றனர். வேறுபாடுகள் எழும்போது மட்டுமே விவாதிக்கின்றனர்.

“தம்மைத்தாமே வெறுமையாக்கி” என்ற சொற்றொடரைப் பற்றி ஏராளமான விவாதங்களும் விளக்கங்களும் எழுந்துள்ளன. கிறிஸ்து மனுஷரிடையே வந்தபோது எந்த அளவுக்கு தமது தெய்வீகத் தன்மையை வேண்டாமென்று விட்டுவிட்டு வந்தார்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமாகவே, தாழ்மையின் ஆடையை அணியவும், மனுக்குலத்தின் பாவத்துக்காக மனிதன் என்ற நிலையில் தண்டனை அனுபவிக்கவும், வந்தார். ஆனால் அவர் தெய்வமாக இல்லாமலிருக்கவில்லை. கொலோசெயர் 1, எபிரெயர் 1,2 யோவான் 1 ஆகிய பகுதிகளுடன் கிறிஸ்து மாம்சத்தில் வந்ததை குறித்தும் இந்தப் பகுதியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பிலிப்பியர் 3ல் காணப்படும் அடுத்த பகுதி பவுலின் வாழ்க்கையில் அவரைத் தூண்டி நடத்துவதாக இருந்த காரியம் எது என்பதைக் காட்டுகிறது. வியக்க வைக்கும் அவருடைய தேவ பக்தியும், நிலை தடுமாறாத அவருடைய வைராக்கியமும், தாங்கள் முற்றுமாய் நம்பினவைகளுக்காகத் தங்கள் வாழ்க்கையே அர்ப்பணம் செய்த பெரிய வரலாற்றுத் தலைவர்களின் வரிசையில் பவுலை வைக்கின்றன. அவருக்கு வாழ்க்கையின் அத்தனை காரியங்களும் கிறிஸ்துவில்தான். கிறிஸ்துவை அடைவதும்; அவரை அறிவதும், அவரில் “காணப்படுவதும்” அவரில் குறிக்கப் பட்ட குறிக்கோளை அடைவதும் பவுலின் கவனம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது. பிலிப்பியர் நிருபம் முற்றுமாய் கிறிஸ்துவுக்குள் வாழும் ஒருவாழ்வை சித்தரித்துக் காட்டுகிறது.

பவுலின் சிறையிருப்பின் விளைவுகள்

பவுல் இறுதியில் விடுதலை அடைந்தாரா இல்லையா என்பது போன்ற சில வினாக்கள் எழுந்தாலும், பவுல் சிறைப்பட்டிருந்த காலத்தின் விளைவுகளைக் கணக்கிடுதல் சிரமமான ஒன்றல்ல. பவுல் செசரியாவிலும் ரோமிலும் சிறை வைக்கப்பட்டபோதிலும் அவருடைய ஊழியம் முடிந்து விடவில்லை. அவருடைய நிருபங்களில் வாழ்த்தப்பட்டிருக்கிற அவருடைய உதவியாளர்கள், நண்பர்கள் மூலமாக திருச்சபைகளுடன் அவர் இடையறாத தொடர்பு கொண்டிருந்தார் என்பது தெரியவருகிறது. இவ்வாறு வலியத் தானாகக் கிடைத்த ஓய்வு அவருக்கு ஜெபத்துக்கும் தியானத்துக்கும் அதிகம் நேரம் கொடுத்தது. அதன் விளைவாக விலைமதிப்பற்ற சிறை நிருபங்கள் வெளிப்பட்டன. அவர் இராயனுக்கு அபயமிட்டது. கிறிஸ்தவத்தை அரசாங்கத்தின் நேரடிப் பார்வைக்கு கொண்டுவந்தது. அதிகாரிகள் அதன் சட்டப்பூர்வமான தன்மையை கட்டாயமாக உணர்ந்து கொள்ளும்படி செய்தது. அது சட்டப்பூர்வமான மதமாக அனுமதிக்கப் பட்டுவிட்டால், அதைத் துன்புறுத்துவது சட்டவிரோதமானது. இவ்வாறாக அதன் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுவிடும். அதே சமயம் அது சட்டபூர்வமான மதமல்ல என்று தீர்க்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்ட மதமாகி விட்டால்

தொடர்ந்து வரும்

பவுலின் சிறைவாச நிருபங்கள்

உபத்திரவம் அதை விளம்பரப்படுத்தித் தனது வல்லமையை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடும். புறஜாதி ஊழியம் நடைபெற்ற கிபி. 46 முதல் 56 வரையுள்ள பத்தாண்டுகளிலும், பவுல் சிறைப்பட்டிருந்த நான்கு ஆண்டுகளிலும் திருச்சபை, யூதசமயக் கொடியின் கீழிருந்து வெளிவந்து தனிப்பட்ட ஓர் இயக்கமாகத் தனக்கு அந்தஸ்தைத் தேடிக் கொண்டது. இப்போது இன்னும் அதிகமாக முன்னேறி மிஷனெரிப்பணியில் விரிவாக்கம் பெற தயாராக உள்ளது.